
புரட்சிப்
பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | நவம்பர் 06, 2014 | புரட்சி 13 | முழக்கம் 43 | விலை: ரூ.3.00

## ‘புதிய தலைமுறை’க்கு கழகத் தலைவர் பேட்டி

# பெரியார் கொள்கையின் தாக்கம் என்ன?

*‘புதிய தலைமுறை’ தொலைக்காட்சியில் 28-09-2014 அன்று ஒளிபரப்பான ‘அக்னிப் பரீட்சை’ நிகழ்ச்சியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பதில்கள். பேட்டி கண்டவர் தலைமை செய்தியாளர் மு. குணசேகரன்.*



**கேள்வி :** செவ்வாய் கிரகத்திற்கு மங்கள்யான் என்ற ஒரு விண்கலத்தை அனுப்பியிருக்கிறார்கள்; மங்கள்யான் செவ்வாய் கிரகத்திற்கு செல்வது என்பது, விஞ்ஞான வளர்ச்சியில் மேலை நாடுகளோடு போட்டிப் போட்டு கொண்டு இந்தியா வளர்கிறது என்று விஞ்ஞானிகளைப் பாராட்டி பேசி வருகிறார்கள்; செவ்வாய் தோஷம் என்பதை நம்புபவர்களும் இந்தியாவில் தான் அதிகம் பேர் இருப்பார்கள் என்று நினைக்கிறேன்; விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டிருக்கிற அளவிற்கு, விஞ்ஞான பூர்வமாக சிந்திக்கும் தன்மை மக்களிடம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியுமா?

**பதில் :** இல்லை என்பதைத்தான் இவைகளெல்லாம் வெளிப்படுத்துகின்றன; எடுத்துக்காட்டாக, நம் நாட்டில் அறிவியல் அறிவுக்கு ஒன்றும் குறை வில்லை. ஆனால் அறிவியல் மனப்பான்மை இல்லை என்பது தான் நமக்குள்ள குறை. அறிவியல் மனப்பான்மையை வளர்க்கும் முயற்சியில் ஈடுபடாமல், சோதிடம் என்ற போலி அறிவியலால் ஏற்கனவே இராகு, கேது என்ற இரண்டு கோள்கள் இல்லை என்று சொல்லியாகி விட்டது; அதன் பின்னரும் சோதிடம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். சூரியன் என்பது ஒரு கோள் (கிரகம்) அல்ல; அது ஒரு நட்சத்திரம் என்பதும் அறிவியல் பூர்வமாக தெரியும், ஆனால் இன்னும் சூரியனை ஒரு கிரகமாகவே வைத்துக் கொண்டு சோதிடம் பார்த்துக் கொண்டிருக் கிறார்கள். சந்திரன் என்பது ஒரு கோள் அல்ல; அது ஒரு துணைக் கோள் என்பதும் தெரியும், ஆனாலும் கோளாக வைத்துக்கொண்டே சோதிடம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதே போல சோதிடம் என்பது முற்றும் முழுதாக, பூமி நடுவில் இருப்பதாகவும் சூரியன் உள்ளிட்ட கோள்கள் பூமியை சுற்றி வருவதாகவும் ஒரு காலத்தில் நம்பப்பட்டது. ஆனால் ஒரு ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பே இது பொய் என்று மாற்றி, ஜியோ செண்ட்ரிக் (Geocentric) முறையில் பூமியை மையமாக வைத்து சுழற்சி முறையைக் கணக் கிட்டதற்கு மாறாக, புவிமையக் கோட்பாட்டுக்கு மாறாக, இப்போது ஹீலியோ செண்ட்ரிக் (Helio-centric) என்று சொல்லி சூரியனை மையமாக வைத்து ஞாயிறு மையக் கோட்பாடு வந்து விட்டது. கோபர் நிக்கஸ் காலத்தில் வந்து இவ்வளவு காலம் ஆகிவிட்டது. இது இங்கு இன்னும் வந்து சேரவில்லை. சாதாரண மக்களிடம் மட்டுமல்ல; செவ்வாய் கோளுக்கு மங்கள்யான் அனுப்பியவர்கள் கூட சோதிடத்தை நம்பி, நல்ல நாள் பார்த்து புறப்படும் நாளை வைப்பதும், அதன் தலைவர் திருப்பதி உண்டியலில் போய் காணிக்கை போடுவதும் இப்போதும் நடந்து கொண்டிருக்கிறது என்பது, அறிவியல் அறிவு இருக்கிறதே தவிர அறிவியல் மனப்பான்மை வளரவில்லை என்பதைத் தான் காட்டுகிறது. அறிவியல் அறிவு எப்போதும் நாட்டை முன்னேற்றி விடாது. அறிவியல் மனப்பான்மை யோடு சிந்தித்தாலும் செயல்பட்டாலும் தான், சமூகத்தை முன்நகர்த்தி செல்ல முடியும். அறிவியல் மனப்பான்மை தேவையானது; ஆனால் இப்போது அது நம்மிடையே இல்லை என்பது உண்மை.

**கேள்வி :** பெரியாரின் பிறந்த நாளை கொண்டாடி மகிழ்ந்திருக்கிறீர்கள்; அவர் இறந்து (1973-இல்) இத்தனை ஆண்டு காலம் ஆகிவிட்டது. இன்றைக்கு பெரியாரின் அடிப்படை கொள்கை களான ஜாதி ஒழிப்பு, பெண்ணுரிமை, மூட நம்பிக்கை எதிர்ப்பு இது மாதிரியான விசயங்களில் தமிழ் சமூகத்தில் எந்த விதமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது? இந்த கொள்கைகள் எந்த அளவிற்கு வெற்றி பெற்றிருக்கிறது?

**பதில்:** பெரும்பாலும் கொள்கைகளை முன்னெடுத்து செல்வது இயக்கங்கள்தான்; கட்சிகள் அல்ல. கட்சியை தலைமை ஏற்று நடத்துபவர்களும் அரசியல் தெரிந்தவர்களாக கொள்கைகள் புரிந்தவர்களாக இருக்க வேண்டும் என்பது தான் நியதி, பொதுவான நியதி. ஆனால் இங்கு தமிழ்நாட்டைப் பொருத்தவரை அல்லது இந்தியாவைப் பொருத்தவரை மக்கள் மெல்ல மெல்ல அறிவியலை ஏற்றுக்கொண்டு விட்டார் கள். ஜாதியைப் பற்றிய பார்வை, நேரடியாக விவாதிக்கவில்லை என்றாலும் ஜாதியைக் கடந்து பலவற்றை சிந்திக்கிறார்கள் செய்கிறார்கள்; அதில் தடை ஏதும் இல்லை. ஆனால் கட்சியின் தலைவராக இருப்பவர்கள் ஜாதியை, தங்களுக்கு ஏதாவது பயன்படுத்திக் கொள்ள முடியுமா, அல்லது மத நம்பிக்கையை மக்களிடையே தூண்டிவிட்டு அதனால் ஆதாயம் அடையலாமா என்பதை செய்து கொண்டே வருகிறார்கள். ஆக ஜாதி உணர்வும், மத உணர்வும் மங்காமல் இருப்பது போல தெரியும்; ஆனால் கல்லூரி களிலோ, பணியாற்றும் இடங்களிலோ சென்று பார்த்தாலே தெரியும், அவர்கள் சாதரணமாக ஜாதியைக் கடந்து செல்கிறார்கள்; மதங்களைக் கடந்து திருமணங்கள் நடக்கின்றன. முன்பெல் லாம் இசுலாமியர்களை தீண்டதகாதவர்களைப் போல் கருதி ஒதுங்கியிருந்த காலங்கள் உண்டு, ஆனால் இப்போது இயல்பாக அவர்களின் நிகழ்வுகளுக்கு போகிறார்கள் - வருகிறார்கள். பொது வாழ்க்கையில் முன்னிலையில் இருப்ப வர்கள் தான் ஜாதி - மத நம்பிக்கைகளைத் தூண்டு கிறார்கள் அல்லது குறையாமல் பார்த்துக் கொள் கிறார்கள் என்று சொல்லலாம். சாதராண மக்களுக்கு அந்த நம்பிக்கையின் அளவு குறைந் திருக்கிறது என்பதை உறுதியாகச் சொல்ல முடியும்.

**கேள்வி :** ஜாதி மறுப்பு என்ற ஒன்றை, ஜாதிகளைக் கடந்து திருமணம் செய்து கொள்வது திருமண உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது என்பதில் மிகப் பெரிய வெற்றியை நாம் (தமிழ்நாடு) பெற்றுவிட்டோம் என்று சொல்ல முடியாது. தேசிய அளவிலான ஒரு புள்ளி விவரத்தை எடுத்துக்கொண்டாலும், பஞ்சாப், கேரளத்தை விட மிகக் குறைவான எண்ணிக்கையில் தான் தமிழ்நாட்டில் கலப்பு திருமணங்கள் நடைபெறு கின்றன. தலித்துக்கும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு மான கலப்புத் திருமணங்கள் நடைபெறும் போது மிகப்பெரிய எதிர்ப்புகள் வருவதையும், அதனால் சில மரணங்கள் ஏற்படுவதையும் கூட பார்க்கின் றோம். இது நீங்கள் சொல்வதற்கு மாறுபட்டதாக இருக்கிறதே! பெரியார் கொள்கையின் தோல்வியாக இதை பார்க்க முடியாதா?

**பதில் :** அப்படி பார்க்க முடியாது. முதலில் அந்த புள்ளிவிவரங்கள் சரியானதா என்பதில் சந்தேகம் உள்ளது. ஜாதி கடந்த திருமணங்கள் நடக்கின்றன; அவற்றைத் தடுப்பதற்கான முயற்சியை மூத்தவர்கள், பெற்றோர்கள் எடுக்கிறார்கள். இளைஞர்கள் மத்தியில் ஜாதி கடந்த சிந்தனை வந்துவிட்டது. ஜாதி கடந்து திருமணங்களை இயல்பாக செய்து கொண்டிருக்கிறார்கள். இத்தனைச் சிக்கல்கள் வந்த பின்னாலும், தருமபுரியில் ஏதோ ஜாதிக் கலவரம் என்று சொல்கிறோம், தருமபுரியில் பல திருமணங்கள் நடந்துவிட்டன. தலித்துகளுக்கும் பிற்படுத்தப் பட்டவர்களுக்குமான திருமணங்கள் அதற்குப் பின்னால் ஏராளமாக நடந்திருக்கின்றன; ஆனால் இவ்வளவு கவனத்தை ஈர்க்கவில்லை. ஏனென்றால் எந்த அரசியல் கட்சியும் போய் அதில் தலையிட வில்லை. ஆக இளைஞர்கள் தாண்டிப் போக முயற்சிக்கிறார்கள் போய்கொண்டிருக்கிறார்கள். முதியவர்களும் சில சுயநலவாதிகளும் அதை தடுப்பதற்கான முயற்சிதான் நமக்கு வெளியே பெரிதாய் தெரிகிறது என்பது தான் உண்மையே தவிர, ஜாதியத்திற்கு எதிரான கருத்துக்கள் இளைஞர்களிடம் இருக்கிறது என்பது தான் உண்மை.

**கேள்வி :** படிப்பு வந்தால் ஜாதிப் பற்று போய்விடும் ஜாதி உணர்ச்சி போய் விடும் என்று சொன்ன காலம் உண்டு; படித்தவர்கள் நிறைந்த சமூகமாக இன்றைய தமிழ்ச் சமூகம் மாறியிருக்கிறது; ஆனால் இவ்வளவு பெரிய வளர்ச்சி வந்தும், இவ்வளவு பேர் வேலைகளுக்குச் சென்று, உயர் கல்வி பயின்ற பிறகும், சமூகத்தில் ஜாதியின் இறுக்கம்- பிடிப்பு பற்று என்ற ஒன்று மீண்டும் மீண்டும் ஏதேனும் ஒரு வடிவத்தில் உருவெடுத்துக் கொண்டுதான் இருக்கிறது; இந்தப் பிடிப்பு குறைந்த மாதிரி தெரியவில்லையே?

**பதில் :** பெரியார் காலத்தையும், இந்த காலத்தையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியிருக்கிறது. பெரியார் காலம் என்பது போராட்டக் காலம்; அவர் ஒவ்வொரு அடிமைத்தனத்தில் இருந்தும் இந்த சமூகத்தை மீட்டெடுக்க வேண்டும் என்று போராடினார். பெரியார் காலத்தில் முற்றும் முழுதான இந்து சமுதாயத்தில், பார்ப்பனர்களைத் தவிர அனைவரும் அடிமைத்தனத்தில் இருந்தார்கள்; எனவே பெரியாரோடு இணைந்து நின்று அவர்களும் போராடினார்கள். இப்பொழுது இருக்கும் காலம் அறுவடை காலம். பெரியாரின் போராட்டங்களால் விளைந்த விளைவுகளை இப்போது அறுவடை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர் பெற்று தந்த இட ஒதுக்கீட்டின் காரணமாகவோ, அல்லது பல காரணங்களால், உதாரணமாக கிராமத்தில் இருந்த பார்ப்பனர்கள் நகரம் நோக்கி சென்று விட்

(2 ஆம் பக்கம்)

**தலையங்கம்**

## பிரதமரின் பேச்சா, இது?

*புராண காலங்களிலேயே இந்தியா, மரபணு விஞ்ஞானத்திலும் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சையிலும் சிறந்து விளங்கியது என்று ஒருவர் பேசியிருக்கிறார். பேசியவர், ஏதோ 'புராண கதாகாலட்சேபம்' நடத்தும் வைதீகர் அல்ல; இந்தியாவின் பிரதமர் நரேந்திரமோடி. பேசிய இடம் – சர். எச்.என்.ரிலையன்சு அறக்கட்டளை மருத்துவமனை மற்றும் ஆய்வு மய்யத் திறப்பு விழா!*

புராண காலத்து அறிவியலை உறுதிப்படுத்த மோடி கூறியிருக்கும் எடுத்துக்காட்டுகள் என்ன தெரியுமா? மகாபாரதத்தில் கர்ணன், தாயின் கர்ப்பப்பையிலிருந்து பிறக்கவில்லையாம். எப்படி பிறந்தார்? அந்தக் காலத்திலேயே மரபணு விஞ்ஞானம் இருந்ததாம். அதேபோல் விநாயகன் தலையில் யானையை பொருத்தியிருப்பது அந்தக் காலத்திலேயே பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை இருந்தது என்பதை உறுதிப்படுத்துகிறதாம். மோடியின் இந்த 'ஆராய்ச்சி'யைக் கேட்டு மருத்துவர்கள் விலா நோக சிரித்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. மோடியின் 'மேதை'மையை வெளிப்படுத்தும் இந்த 'சிந்தனை'களை ஊடகங்கள் பலவும் திட்டமிட்டு இருட்டடித்து, மோடியைக் காப்பாற்றியுள்ளன. இந்த அபத்தத்தை எந்த ஒரு விஞ்ஞானியும் ஏன் மறுக்க முன்வரவில்லை என்று 'ஹெட் லைன்ஸ் டுடே' தொலைக்காட்சி செய்தித் தொகுப்பாளர் கரன் தாப்பர் ஆங்கில நாளேடு ஒன்றில் எழுதிய கட்டுரையில் கேட்டுள்ளார். நியாயமான கேள்வி!

விஞ்ஞான கண்டுபிடிப்புகள் வந்த பிறகு, அதை புராணக் கற்பனைகளோடு பொருத்தி புராண காலத்திலேயே இந்தியாவில் அறிவியல் அறிவு இருந்தது என்று பெருமை பேசுவது இவர்களின் வாடிக்கையாகிவிட்டது. பார்ப்பன கலாச்சாரமான வேத மதத்தை கட்டிக் காப்பாற்ற இந்தப் புரட்டுகள் இவர்களுக்கு தேவைப்படுகிறது.

மரபணு மாற்றமும் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை முறையும் 'கர்ணன்', 'விநாயக'னோடு மட்டும் ஏன் முடிந்து போனது? அதற்குப் பிறகு ஏன் புராண காலம் முழுதும் தொடராமல் போனது என்ற கேள்விக்கு என்ன பதில் கூறுவார்கள்?

போலி அறிவியலை உறுதிப்படுத்துவதற்கு, அமெரிக்காவின் விண்வெளி ஆய்வுக் கூடமான 'நாசா'வை துணைக்கு அழைப்பது இவர்களின் வழக்கமாகிவிட்டது. 'இராமன்' கட்டிய பாலத்தை இடிக்கக் கூடாது என்று சேது சமுத்திரத் திட்டத்தை எதிர்ப்பவர்கள் 'நாசா'வே இராமன் பாலத்தை படம் பிடித்திருக்கிறது என்று கதை விட்டார்கள். 'நாசா' மறுத்துவிட்டது. வேதங்களில் கூறப்படும் சரஸ்வதி நதி இப்போதும் பூமிக்கடியில் ஓடிக்கொண்டிருக்கிறது; இதை நாசாவே செயற்கைக் கோள் வழியாக படம் பிடித்துள்ளது என்றார்கள். அதற்கும் நாசா மறுப்பு தெரிவித்தது. தில்லை நடராசன் கோயிலுக்கு நேர் எதிரே வானவெளியிலிருந்து புகைப்படம் எடுத்தால் படம் விழாது என்றும், திருநள்ளாறுக்கு (சனீஸ்வரன் கோயில் உள்ள ஊர்) நேர் எதிராக வானத்தில் கடந்து செல்லும் செயற்கைக் கோள் செயலிழந்துவிடும் என்றும், இவையெல்லாம் நாசாவின் கண்டுபிடிப்பு என்றும் கதை விட்டார்கள். அனைத்தையும் நாசா மறுத்து விட்டது.

இப்போது மற்றொரு புரளி கிளப்பி விடப்பட்டுள்ளது. சூரியனில் உருவாக இருக்கும் காந்தப் புயலால், டிசம்பர் 2014இல் உலகம் முழுதும் ஆறு நாள்கள் இருளில் மூழ்கப் போகிறதாம்! இதையும் வழமை போலவே 'நாசா' அறிவித்திருப்பதாக கூறுகிறார்கள். இது உண்மையல்ல என்று 'நாசா' மறுத்துள்ளது. சூரியப் புயல்கள் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை பூமியின் மேற்பரப்பு வரை வருகிறது. இதை பூமியின் மேலடுக்கில் உள்ள 'வளி' மண்டலம் தடுத்து மீண்டும் வானத்துக்கு திருப்பி அனுப்பி விடும். இந்த சூரியப் புயலால் எந்த பாதிப்பும் வந்து விடாது என்று 'நாசா' மறுப்பு அறிக்கையில் தெளிவுபடுத்தியுள்ளது.

இதேபோல் 2012 ஆம் ஆண்டு ஏடுகளில் ஒரு செய்தி வெளியானது. கேரளாவைச் சார்ந்த அருண் என்ற மாணவர் பிரபஞ்சத்துக்கு அப்பால் உள்ள வாழ்க்கைக் குறித்து ஆராய்ச்சி செய்ய 'நாசா' தன்னை தேர்வு செய்துள்ளதாகவும் மாசூசெட்ஸ் விஞ்ஞான ஆய்வுக் கழகத்தில் இது குறித்து முனைவர் பட்டத்துக்கான ஆராய்ச்சியை செய்து வருவதாகவும் கூறினார். செய்தி உண்மை தானா என்பதை உறுதி செய்து கொள்ளாமலே ஏடுகள் வெளியிட்டன. அது உண்மைக்கு மாறான தகவல். அப்படி எந்த ஒரு ஆய்வையும் அவர் மேற்கொள்ளவில்லை என்று கடந்த வாரம் நாசா மற்றும் மாசூசெட்ஸ் ஆய்வு நிறுவனங்களோடு தொடர்பு கொண்டு பி.ஆர்.பி. பாஸ்கர் மற்றும் ஜெஸ்டின் ஜாய் என்ற இருவரும் இணையத்தில் அம்பலப்படுத்தியுள்ளனர். ('இந்து' நாளேடு நவம்பர் 3ஆம் தேதி இதழில் "வாசகர்களுக்கான ஆசிரியர்" எழுதிய கட்டுரையில் இதை சுட்டிக் காட்டுகிறார்)

இப்படி, போலி அறிவியலைப் பரப்பி மக்களை நம்ப வைக்கும் முயற்சிகளில் ஏதோ, புராண பிரச்சாரர்கள், மடமையாளர்கள் மட்டுமா இறங்குவார்கள்? இந்தியாவின் பிரதமரே இதைத்தான் செய்து வருகிறார்.

விஞ்ஞான மனப்பான்மையை ஒவ்வொரு குடிமகனின் அடிப்படைக் கடமையாக அரசியல் சட்டத்தின் 51ஏ(பி) பிரிவு கூறுகிறது. நாட்டின் பிரதமரோ – புராணப் பெருமை பேசுவதே விஞ்ஞான மனப்பான்மை என்கிறார்!

இதை வெட்கம்; அவமானம்; தலைகுனிவு! என்று சொல்லாமல் வேறு எப்படி சொல்வது?

## 'பெரியார் காலம் போராட்டக் காலம்; இது அறுவடைக் காலம்!'

(முதல் பக்கத் தொடர்ச்சி)

டார்கள்; அந்த இடத்தில் போய் பிற்படுத்தப் பட்டவர்கள் இப்போது உட்கார்ந்து கொண்டு விட்டார்கள். ஆனால் அவர்களுடைய (பார்ப்பனர்களுடைய) ஆதிக்கம் என்பது மனதளவில் உளவியலாக இருந்தது; இவர்கள் (பிற்படுத்தப்பட்டவர்கள்) தங்களுடைய ஆள் பலத்தையும் கொண்டு மசில் பவரையும் வைத்துக்கொண்டு இப்போது ஆதிக்கம் செலுத்துகிறார்கள். ஆக தாங்கள் இருந்த நிலையை மறந்து விட்டார்கள் என்பது ஒன்று, அல்லது மருமகள் மாமியாராக ஆனால் நடந்து கொள்வதைப் போல் தான், இப்போது பிற்படுத்தப்பட்டவர்கள் போக்கு இருக்கிறது என்பது உண்மைதான். தொடர்ந்து இயக்கங்கள் எடுக்கவேண்டிய தேவை இருக்கிறது. தங்கள் கட்சி நலனுக்காக சுயநல சக்திகள்தான் விடாமல் தூண்டிவிட்டு கொண்டிருக்கிறார்கள். வட மாவட்டங்களில் இல்லாமல் இருந்தது; தென் மாவட்டங்களில் மட்டும் இருந்தது மாறி இப்போது வட மாவட்டங்களிலும் பரவுகிறது. ஒரு சில சுயநல சக்திகள் தங்கள் வளர்ச்சிக்காக செய்கிற ஒரு கேவலமான முயற்சியாகத் தான், நான் இதைப் பார்க்கின்றேன்.

**கேள்வி :** 69 சதவீத இட ஒதுக்கீடு என்று வருகிறபோது, இரண்டு வாரங்களுக்குள் பதிலளிக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் கேட்டிருக்கின்றது; எந்த அடிப்படையில் இந்த 69 சதவீதத்தை நீங்கள் நிர்ணயித்தீர்கள்? சமூக ரீதியாக- கல்வி ரீதியாக பிற்படுத்தப்பட்டவர்களுக்கான கணக்கீடு ஏதேனும் வைத்திருக்கிறீர்களா? என்று கேட்கும் போது, சில இயக்கங்கள், மக்கள் தொகை கணக்கெடுப்பை ஜாதிவாரியாக நடத்தி அதற்கான தரவுகளைத் தயார்படுத்த வேண்டும் என்கிறார்கள்; தமிழ்நாட்டில் ஜாதி வாரியான கணக்கெடுப்பு எடுக்க வேண்டும் என்று நீங்கள் சொல்வீர்களா?

**பதில் :** தேவை என்று தான் சொல்லவேண்டியிருக்கிறது. காரணம், நமக்குக் கடைசியாக ஜாதிவாரியான கணக்கெடுப்பு நடந்தது 1931 ஆம் ஆண்டில்தான். 1941 இல் இரண்டாம் உலகப் போர் நடந்தது; எனவே அப்போது கணக்கெடுக்க முடியவில்லை. 1951 ஆம் ஆண்டில் அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டது; அப்போது இருந்த அரசு ஜாதிவாரிக் கணக்கெடுப்பை வேண்டாம் என்று சொல்லிவிட்டது. பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் அப்போதும் அரசிடம் இல்லை. எனவேதான் அரசியல் சட்டம் 340 ஆவது பிரிவு என்ற ஒரு பிரிவு அவர்களுக்காக ஒரு திட்டத்தை தீட்டவேண்டும் - ஆணையம் அமைக்கவேண்டும் என்று சொல்லியிருந்தது. அது ஒன்றரை ஆண்டுகள் கழித்தும் அமைக்கப்படாதது, அம்பேத்கர் அவர்கள் சட்ட அமைச்சர் பதவியில் இருந்து விலகியதற்கான நான்கு காரணங்களில் ஒன்று. பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனுக்காக ஆணையம் அமைக்கப்படவில்லை, அவர்களின் மேம்பாட்டிற்கான எந்தவொரு முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும், பதவி விலகக் காரணமாகக் காட்டிய அம்பேத்கரைத்தான் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டுமான தலைவராக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர் பதவி விலகிய பிறகுதான் காகாகலேல்கர் குழு என்ற குழுவை அமைத்தார்கள். அவர் குழு ஆராய்ந்து அறிக்கைக் கொடுத்தது, சாதகமானதாக இருந்தாலும் கூட, அந்தக் குழுவின் தலைவர், தனக்கு இதில் உடன்பாடில்லை என்று தனிக் கடிதமாக எழுதினார்; அதனால் நின்று போய்விட்டது. என்றாலும், அக்குழு கொடுத்த பரிந்துரைகளில் ஒன்று, ஜாதிவாரி கணக்கெடுப்பு உடனடியாக நடத்தப்படவேண்டும் என்பது. பரிந்துரை இருக்கிறது, ஏனென்றால் அது தேவையாக இருக்கிறது. பின்னால் இவ்வளவு வழக்குகள் நடந்து, மண்டல் குழுவுக்காக இந்திரா சகானி வழக்கில், ஒரு அரசியல் அமர்வு உட்கார்ந்த பின்னாலும் கூட, அதற்கு பின்னால் போன ஒரு வழக்கின் போது இரண்டு நீதிபதிகள் உட்கார்ந்துகொண்டு ஜாதிவாரி கணக்கெடுப்பு இல்லை; எந்த அடிப்படையில் செய்தீர்கள் என்று சொல்கிறார்கள். உச்ச நீதிமன்றத்தில் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்கிறார்கள். ஒன்பது நீதிபதிகள் அமர்ந்து கொடுத்த தீர்ப்பைக் கூட இரண்டு நீதிபதிகள் அமர்வு கேள்விக்குள்ளாக்குகிறது! இந்த நிலையில் ஜாதிவாரிக் கணக்கெடுப்பு இருப்பது என்பதுதான், நாம் குறிப்பிட்ட வகுப்பினர்களுக்கு என்ன செய்ய முடியும், அவர்கள் வளர்ந்திருக்கிறார்களா இல்லையா என்பதை ஆய்வு செய்து, அவ்வப்போது வளர்ந்த பிரிவினரை நீக்குவதற்கும், வளராத பிரிவினரைப் புதிதாக பட்டியலில் சேர்ப்பதற்கும் வாய்ப்பாக இருக்கும். எனவே ஜாதிவாரி கணக்கெடுப்பு தேவை என்பது தான் எங்கள் கருத்து.

(தொடரும்)

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெடிப்பதில்லை என்று 'தமிழ் இந்து' நாளேட்டில் வெளிவந்த ஒரு கட்டுரை கூறுகிறது.

பட்டாசுகள் வெடிப்பதால், சுற்றுச் சூழல் மாசுபடக்கூடாது என்று கருதுவோரும் குழந்தைகள் உரிமைகளில் கவலை கொண்டோரும் அவர்கள் கண்ணோட்டத்தில் 'தீபாவளி'யை கொண்டாடுவதில்லை. இப்படி தீபாவளி மறுப்புக்கு 'மதம்' சார்ந்த காரணங்களைத் தாண்டி, வேறு பல காரணங்களும் இருக்கவே செய்கின்றன. 'தீபாவளி' மறுப் போருக்கான இயக்கத்தில் இவர்களையும் இணைத்து, ஆங்காங்கே ஒவ்வொரு ஊரிலும் தீபாவளி நாளில் அதை மறுப்போர் குடும்பமாகக் கூடி மதமற்ற வாழ்க்கை முறை பற்றி கலந்து விவாதித்து, சமூகப் பார்வை கொண்ட திரைப்படங்கள், கலை நிகழ்வுகளை நடத்தி, தீபாவளி எதிர்ப்பை வேறு வடிவங்களில் முன்னெடுப்பதற்கான ஒரு முயற்சிதான், இந்த ஒன்று கூடல் என்று விளக்கினார் விடுதலை இராசேந்திரன்.

பெரியாரிஸ்டுகள் கூட தீபாவளி நாளில் பட்டாசுகள் வெடிப்பதில்லை என்றாலும் வேறு நிகழ்வுகளில் பட்டாசுகளை வெடிக்கிறார்கள் என்பது உண்மை. அதில் அடங்கியுள்ள குழந்தை உழைப்புச் சுரண்டல் பற்றி நாம் உணருவதில்லை. எனவே இன்றைய நாளில் எந்த நிகழ்வுகளிலும் பட்டாசுகளை வெடிக்க மாட்டோம் என்ற உறுதியை ஏற்போம் என்ற வேண்டுகோளையும் விடுதலை இராசேந்திரன் முன் வைத்தார். மாவட்ட செயலாளர் உமாபதி, வரவேற்புரையும் நன்றியும் கூறினார். நுழைவுக் கட்டணமாக குறைந்தது ரூ.50 என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும் பங்கேற்பாளர்கள் ஆர்வத்துடன் கூடுதலாகவே நன்கொடைகளை வழங்கினர். கழகக் குடும்பத்தின் குழந்தைகள் பங்கேற்ற நடனம், பேச்சுகளும் இடம் பெற்றன. 6.30 மணியளவில் நிகழ்வுகள் நிறைவடைந்தன.

**– நமது செய்தியாளர்**

### “தீபாவளி” மறுப்போரின் ஒன்று கூடலில் உறுதி

# பட்டாசு வெடிப்பதை தவிர்ப்போம்!

*எந்த ஒரு நிகழ்வுக்கும் பட்டாசுகளை வெடிப்ப தில்லை என்று தீபாவளி மறுப்போரின் ஒன்று கூடலில் கூடிய குடும்பங்கள் உறுதி ஏற்றனர்.*

மதம் இல்லாத வாழக்கைக்கான மாற்றுப் பண்பாட்டை வளர்த்தெடுப்போம் என்ற முழக்கத்தோடு அக்டோபர் 2 ஆம் நாளில் தீபாவளி மறுப்போரின் ஒன்று கூடல் நிகழ்வுக்கு சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகமும், சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகமும் இணைந்து ஏற்பாடுகளை செய்திருந்தன. சென்னை இராயப்பேட்டையில் உள்ள முருகேசன் திருமண மண்டபத்தில் நடந்த நிகழ்வில், திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள், திராவிடர் கழகத்தினர், தந்தை பெரியார் திராவிடர் கழகத்தினர், இளம் தமிழகம் இயக்கத் தோழர்கள், மார்க்சிய லெனினிய கட்சித் தோழர்கள் அமைப்புகளைச் சாராதோர் எனப் பலரும் பங்கேற்றனர்.

“நாம் அறிவியலை ஏற்பவர்கள்; ஆகவே பூமி உருண்டை என்பதை மறுக்கும் தீபாவளியை மடமை என்கிறோம்.

நாம் மனித நேயத்தைப் போற்றுபவர்கள்; ஆகவே எதிரிகளை சூழ்ச்சிகளால் கொலை செய்வதை நியாயப்படுத்தும் புராண பயங்கரவாதக் கருத்துகளை வெறுக்கிறோம்.

‘நரகாசுரனை’ - ‘கிருஷ்ணன்’ வஞ்சகமாக கொலை செய்ததை நியாயப்படுத்துவதே தீபாவளி.

நாம் குழந்தைகளை நேசிப்பவர்கள். ஆகவே குழந்தைகள் உழைப்புச் சுரண்டலால் உருவாகும் பட்டாசுகளை வெறுக்கிறோம். ‘தீபாவளி’ நாளில் மதங்களற்ற மாற்றுப் பண்பாடுகளை வளர்த்தெடுக்கும் ஆலோசனைகளுக்காக தீபாவளி மறுப்போரின் ஒன்று கூடல் இது” - என்று அழைப்பிதழில் கூறப்பட்டிருந்தது.

மூடப் பண்டிகைகள் மற்றும் தீபாவளி மூடத்தனங்களை விளக்கிடும் பாடல்களை தோழர்கள் அருள்தாசு, நாத்திகன் ஆகியோர் பாடினர். தொடர்ந்து சிவகாசிப் பகுதிகளில் பட்டாசு தயாரிப்பில் ஒவ்வொரு நாளும் பாதிப்புக்குள்ளாகி வரும் ஏழைப் பெண்கள், குழந்தைகள், விபத்துகளால் நேர்ந்த ஊனங்கள், முதலாளிகளால் கொத்தடிமைகளாக நடத்தப்படும் அவலங்களை உருக்கமுடன் சித்தரிக்கும் ‘மகிழ்ச்சியில் புதைந்த சோகம்’ என்ற ஆவணப்படம் திரையிடப்பட்டது. தொடர்ந்து மூடநம்பிக்கைகளால் ஏழைக் குடும்பங்கள் வாழ்க்கை சீரழிவதை விளக்கிடும் சங்கிரி ராஜ்குமார் இயக்கிய ‘வெங்காயம்’ திரைப்படம் திரையிடப்பட்டது. மதியம் உணவைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினராக வே. மதிமாறன், ஓவியா ஆகியோர் பங்கேற்றுப் பேசினர்.

ஆரிய-திராவிடப் போராட்டங்களின் அடிப்படையில் பார்ப்பனர்கள் கட்டமைத்த புராணங்கள் திராவிடர்களை அழித்தொழிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட கற்பனைகளே என்பதை மதிமாறன் விளக்கினார். தீபாவளியை தமிழர்கள் கொண்டாடக் கூடாது என்று முதலில் அறிவித்த தலைவர் பெரியார்தான் என்று கூறிய மதிமாறன், அரசு ஊழியர்களுக்கு ‘தீபாவளி’க்கு வழங்கப்படும் ‘போனசை’ தமிழர் திருநாளான பொங்கலுக்கு மாற்றிட வேண்டும் என்பதை வலியுறுத்திப் போராட வேண்டும் என்றார். அதேபோல் திருமணமான இணையர்கள் ‘தலை தீபாவளி’ கொண்டாட மாமனார் வீட்டுக்குச் செல்வதைத் தவிர்த்து, பெரியார்-அம்பேத்கர் பிறந்த நாளில் மாமனார் வீட்டுக்கு விருந்துக்குச் செல்லும் வழக்கத்தை உருவாக்குவதோடு, மருமகனுக்கு மாமனார் குடும்பம் பரிசுகளை வழங்குவதற்கு மாற்றாக மருமகன் தனது செலவில் மாமனார் குடும்பத்தினருக்கு பரிசுகளை வழங்கலாம் என்ற கருத்தை முன் வைத்தார்.

அடுத்து ஓவியா பேசுகையில், ‘தீபாவளி’யை



கூட்டத்தின் ஒரு பகுதி

கொண்டாடாத முஸ்லிம், கிறித்துவர்கள்கூட தீபாவளி நாளில் வீடுகளில் தொலைக்காட்சிகளில் சிறப்பு நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். விழாக்கள், கொண்டாட்டங்களை விரும்பும் உளவியல் மக்களை சிந்திக்க விடாமல் தடுத்து விடுகிறது. தீபாவளியை கொண்டாடவே கூடாது, புறக்கணிக்க வேண்டும் என்று பெரியார் இயக்கம் நீண்டகாலமாக பரப்புரை செய்து வருகிறது. எனவே கொண்டாடவே கூடாது என்ற கொள்கைகளுக்கு நாம் மாற்று தேடுவது சரி தானா” என்ற விவாதத்தை முன் வைத்தார்.

நிறைவாகப் பேசிய கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், இந்தப் புதிய முயற்சியை விவாதத்துக்கு உட்படுத்த வேண்டும் என்றே நாங்களும் விரும்புகிறோம் என்று கூறியதோடு, தோழர்களின் விவாதத்துக்கும் சிந்தனைக்கும் சில கருத்துகளை முன் வைத்தார்.

திராவிடர்களை ஆரியர்கள் சூழ்ச்சியால் கொல்லப்பட்ட நாள் என்பதே தீபாவளியின் அடிப்படை தத்துவம். ஆனால், மதத்துக்கான உள்ளடக்கத்தோடு தீபாவளிக்கு வேறு பல புதிய பரிமாணங்கள் இணைந்து நிற்கின்றன. மதப் பண்டிகை என்பதைக் கடந்து, ‘வர்த்தகத் திருவிழா’வாக இது உருமாற்றம் பெற்றுள்ளது. வணிகர்கள், கார்ப்பரேட் நிறுவனங்கள் தங்கள் பொருள்களை விற்பனை செய்வதற்கான நல்ல வாய்ப்பாகக் கருதி, நுகர்வு வெறியைத் தூண்டுகிறார்கள். மதம் சார்ந்த உணர்வுகளும் கொண்டாட்டங்களும் இணையும் போது, அதற்காக ஒவ்வொரு குடும்பமும் தங்கள் சக்திக்கான எல்லைகளையும் கடந்து செலவிடக் கூடிய மனநிலைக்கு தள்ளப்படுகிறார்கள் என்பதை பல்வேறு ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. எனவே, மதக் கொண்டாட்டங்களுடன் நுகர்வுக் கலாச்சாரமும் இணைந்து நிற்பதால் மதங்களில் தீவிரப் பற்று இல்லாதவர்கள்கூட நுகர்வுக் கலாச்சாரத்தையும் அதற்கு வாய்ப்பாக அமைந்து விடும் சமூகச் சூழலையும் கருதி தீபாவளியை கொண்டாடுகிறார்கள்.

‘தீபாவளி’க்கான கதைகளும் வெவ்வேறாக கூறப்படுகின்றன. வடமாநிலங்களில் வணிகர்கள் புதுக் கணக்கு தொடங்கும் நாளாகவும் சமணர்கள் அம்மதத்தைத் தோற்றுவித்த ‘மகாவீரர்’ இறந்த நாளாகவும் தீபாவளியை நினைவு கூர்கிறார்கள். அன்றைய தினம் வீடுகளில் அகல் விளக்கை ஏற்றி ‘தீப ஒளி’ நாளாக சமணர்கள் பின்பற்றுகிறார்கள். தமிழ் நாட்டில் பார்ப்பனர்கள் நரகாசுரனை அழித்ததை தீபாவளியாகக் கொண்டாடச் செய்து விட்டார்கள்.

எனவே இந்தப் பண்டிகைக்கான காரணங்கள் வெவ்வேறாக மாறுபட்டுக் கிடக்கின்றன. மோடி இந்தப் பண்டிகைகளுக்கு அரசியல் முலாம் பூசி ‘தேசியத் திருநாளாக’ அறிவிக்கிறார். காஷ்மீருக்குப் போய் அங்கே இராணுவத்தினரோடு தீபாவளியைக் கொண்டாடி, ‘தேசபக்தியோடு’ தீபாவளியை முடிச்சுப் போடுகிறார்.

நம்மைப் போன்ற பெரியாரிஸ்டுகள், இன உணர்வு பகுத்தறிவுக் கண்ணோட்டத்தில் தீபாவளியைத் தொடர்ந்து புறக்கணித்தே வருகிறோம். ‘தீபாவளி கொண்டாட வேண்டாம்’ என்ற பரப்புரையை துண்டறிக்கை, பொதுக் கூட்டங்கள் வழியாக வலியுறுத்தி வருகிறோம். நம்மைத் தவிர, வேறு பல காரணங்களுக்காக தீபாவளியை கொண்டாட மறுப்போரும் ஆங்காங்கே பரவலாக இருக்கிறார்கள்.

சிவகங்கை மாவட்டம் சிங்கணம்புரி ஒன்றியத்தைச் சார்ந்த 12 பட்டி கிராமத்தினரும் கடந்த 56 ஆண்டுகளாக தீபாவளி கொண்டாடுவது இல்லை. அவர்கள் புறக்கணிப்புக்குக் காரணம் பகுத்தறிவு அல்ல; மாறாக பொருளாதார காரணங்கள். ‘தீபாவளி’ வரக்கூடிய காலம் விவசாயத்திற்கு பணம் புரட்ட வேண்டிய காலம் என்பதால் வட்டிக்கு கடன் வாங்கும் நிலைக்கு தள்ளப்பட்டார்கள். எனவே கடன் சுமையைத் தவிர்க்க தை முதல் நாள் பொங்கலை கொண்டாடலாம். தீபாவளி வேண்டாம் என்ற முடிவுக்கு வந்து ஊர்ப் பெரியவர்கள் தங்கள் கிராம தெய்வமான ‘காடு காவலர் சாமி’ முன் 56 ஆண்டுகளுக்கு முன்பு ‘சத்தியம்’ செய்தனர். அந்த அடிப்படையிலேயே அவர்களின் தீபாவளி புறக்கணிப்பு தொடருகிறது.

தீபாவளிக்கு பட்டாசுகள் வெடிப்பதில்லை என்ற பழக்கத்தை வேறு சில கிராமங்கள் பின்பற்றி வருகின்றன. தங்கள் கிராமத்தில் கூட்டமாக வந்து போகும் பறவைகள், பட்டாசு சத்தங்களால் பாதிப்புக்கு உள்ளாவதே இதற்குக் காரணம். தங்கள் ஊர் நீர் நிலைகளில் கூடும் பறவைகள், அரச மரத்தை வாழ்விடமாகக் கொண்ட பழம் தின்னி வவ்வால்கள் பட்டாசு சத்தங்களால் பாதிக்கப்படுவதை இவர்கள் மனித நேய உணர்வுடன் பார்க்கிறார்கள். நெல்லை அருகே உள்ள கூந்தங்குளம், கோவை அருகே உள்ள சிட்டாம்பாளையம், விழுப்புரம் மாவட்டம் வானூர் அருகே உள்ள கருப்பெரும்பாக்கம், சேலம் மாவட்டம் தலைவாசல் அருகே உள்ள ஊனத்தூர், திருவண்ணாமலை மாவட்டம் தண்டாரம்பட்டு அருகே உள்ள ராயண்டபுரம் கிராமங்களில் பறவைகள் நலனைக் கருதி பட்டாசுகள்

(2 ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION 05.11.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# இலங்கை துணை தூதரகம் முற்றுகை



தமிழக மீனவர்கள் 5 பேருக்கு இலங்கை நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்த செய்தி அக்டோபர் 30 ஆம் தேதி வந்தவுடன் அடுத்த நாளே 31 ஆம் தேதியன்று தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பு சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டத்தை நடத்தியது. 7மணி நேர இடைவேளையில் 500க்கும் மேற்பட்ட தோழியர்கள், தோழர்கள் திரண்டனர். கூட்டமைப்பில் இடம் பெற்றிருந்த திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தபசி குமரன், மாவட்ட செயலாளர் உமாபதி, மாவட்ட தலைவர் ஜான் மண்டேலா, திருவல்லிக்கேணி பகுதி தலைவர் பிரகாசு, சரவணன், ஏசு, வீரா, மயிலைத் தோழர்கள் இராவணன், மனோகரன், அருள்தாஸ் உள்ளிட்ட 30 தோழர்கள் முற்றுகைப் போராட்டத்தில் பங்கேற்றனர். கூட்டமைப்பின் அமைப்பாளர், வேல் முருகன், மணியரசன், தியாகு, டிங்கர் குமரன், குடந்தை அரசன் ஆகியோரும் அவர்களின் அமைப்பு சார்ந்த தோழர்களும் பங்கேற்றனர். அமைப்பாளர் வேல். முருகன், இலங்கை அரசையும், இந்திய அரசையும் கடுமையாக எச்சரித்தார். அனைவரும் கைது செய்யப்பட்டு நுங்கம்பாக்கத்திலுள்ள திருமண மண்டபத்தில் வைக்கப்பட்டு, மாலை விடுதலை செய்யப்பட்டனர்.

## பெரியாரின் அசல் வடிவத்தைக் காட்டிய கட்டுரை

‘பெரியாரின் வாரிசுதான் ஜெயலலிதா’ என்கிற க. திருநாவுக்கரசின் கட்டுரைக்குத் தெளிவான விளக்கத்தை மறுப்பாக, விடுதலை இராசேந்திரன், ‘ஜெயலலிதா பெரியாரின் வாரிசா’ என்கிற தலைப்பில் பதிவு செய்துள்ளார். (25.10.2014) க. திருநாவுக்கரசு கட்டுரையில் பெரியார் சொன்னதாக எழுதியிருந்ததைப் படித்ததும் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. கட்டுரையைப் படிக்கப் படிக்க, ‘இப்படிப்பட்ட உன்னதமான தலைமைப் பண்புகளைக் கொண்ட பெரியாரையா தவறாகப் புரிந்து கொண்டேன்!’ எனப் பெருந்துயருற்றேன்.

பெரியாரின் அசல் வடிவத்தை விடுதலை இராசேந்திரன் கட்டுரையால் அறிந்தேன். ஏதோ அரசல்புரசலாகப் பெரியாரைப் பற்றி அறிந்திருந்த எனக்கு, மேலும் மேலும் பெரியாரைப் பற்றி அறிய ஓர் ஏக்கத்தை ஏற்படுத்திய கட்டுரையாளருக்கு நன்றி.

**– பேராசிரியர் எஸ்.கே. ஹயாத், சென்னை.**
**(விடுதலை இராசேந்திரன் கட்டுரையையொட்டி ‘தமிழ் இந்து’ (28.10.2014) வெளியிட்ட கடிதம்)**

## ஜேசுமேரி முடிவெய்தினார்

ஒட்டன் சத்திரம் கழகத் தோழர் பெரியார் நம்பியின் துணைவியார் ஜேசுமேரி, நவம்பர் 2 ஆம் தேதி முடிவெய்தினார். கடந்த சில மாதங்களாக அவர் உடல்நலமின்றி சிகிச்சைப் பெற்று வந்தார். செய்தியறிந்த கழகத்தோழர்கள் இறுதி நிகழ்வில் பங்கேற்றனர். அடுத்த நாள் 3 ஆம் தேதி கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தோழர் பெரியார்நம்பி இல்லம் சென்று ஆறுதல் கூறினார். கழக சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறோம்.

## நெல்லை மாவட்டக் கழகத் தலைவர் வடிவேல் முடிவெய்தினார்



திராவிடர் விடுதலைக் கழகத்தின் நெல்லை மாவட்டத் தலைவர் தோழர் குறும்பலாப்பேரி வடிவேல் (74) நவம்பர் 3 ஆம் தேதி நெல்லை அரசு மருத்துவமனையில் முடிவெய்தினார். கழகத் தோழர்கள் இறுதி நிகழ்வில் பங்கேற்றனர். அவரது விருப்பப்படி அவருடைய கண்கள் மருத்துவமனைக்கு கொடையாக வழங்கப்பட்டன. 26.10.2014 அன்று கோவையில் நடந்த கழகசெயலவையில் பங்கேற்று இவ்வளவு இளைஞர்களை நேரில் பார்க்கும்போது பெரியார் கொள்கையை தீவிரமாகப் பரப்ப முடியும் என்ற நம்பிக்கை தனக்கு ஏற்படுவதாக உற்சாகத்துடன் பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இடுகாட்டில் மாவட்டத் தலைவர் அம்புரோசு தலைமையில் நடந்த இரங்கல் கூட்டத்தில் பால். பிரபாகரன், பத்திரிகையாளர் இராஜேந்திரன், கலையரசன் (ம.தி.மு.க.), இளங்கோ (தி.மு.க.) மற்றும் தோழர்கள் இரங்கல் உரையாற்றினர்.

# உறுப்பினர் சேர்க்கையை தொடங்கி விட்டீர்களா?

2001 ஆம் ஆண்டிலிருந்து வாரந்தோறும் வந்து கொண்டிருக்கிறது ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’.

பொருளியல் கட்டமைப்பு ஏதுமற்ற இயக்கம் - ஒரு வார ஏட்டை 13 ஆண்டுகளாக தொடர்ந்து நடத்தி வருவது உண்மையிலே அதிசயமானதுதான்! இதற்குக் காரணம் வாசகர்களின் ஆதரவுதான்!

இயக்கத்தின் தூதுவனாக வாரம்தோறும் வாசகர்களை சந்தித்து வரும் இந்த ஏடுதான் இயக்கத்தின் வலிமை என்பதை சொல்லவும் வேண்டுமா?

தோழர்களே! உறுப்பினர் சேர்ப்பு இயக்கத்தை தீவிரமாக்குங்கள்!

நவம்பர் 15 முதல் டிசம்பர் 15 வரை உறுப்பினர் சேர்க்கும் இயக்கம் என்பதை நினைவில் நிறுத்துங்கள்!

## திண்டுக்கல் மாவட்டக் கழகம் கலைப்பு

அடுத்த அறிவிப்பு வெளிவரும் வரை திண்டுக்கல் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் கலைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**– கொளத்தூர் மணி (தலைவர்)**
**விடுதலை இராசேந்திரன் (பொதுச் செயலாளர்)**

# வினாக்கள்... விடைகள்...!

✦ திருச்செந்தூரில் ‘சூரபத்மனை’ முருகப் பெருமான் ‘வதம்’ (கொலை) செய்வதை தரிசிக்க வந்த பக்தர்களுக்கு ஆயிரக்கணக்கான போலீசார் பாதுகாப்பு. **– செய்தி**

அதே பக்தி உணர்வோடுதான் காவல் நிலையங்களிலும் காவல்துறையினர் ‘வதம்’ செய்கிறார்கள் போலிருக்கிறது!

✦ காந்திக்கு பதிலாக கோட்சே நேருவைத் தான் சுட்டிருக்க வேண்டும். **– ஆர்.எஸ்.எஸ். ஏடு ‘கேசரி’**

ஏதோ, சின்ன ஆள் மாறாட்டம் நடந்துடுச்சு; விடுங்க. இனி யாரை, யார் சுட வேண்டும்னு குழப்பமில்லாம பாத்துக்குங்க, சரியா?

✦ ‘தீபாவளி’ பற்றி தனியார் தொலைக்காட்சியில் நடந்த விவாதத்துக்கு எதிர்ப்பு; வெளியே ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் போராட்டம். **– செய்தி**

விவாதத்தில் பங்கேற்க வந்த ஆர்.எஸ்.எஸ்.காரர், தனது வாதத்துக்கு வலிமை சேர்க்க இப்படி ஒரு ஏற்பாட்டை செய்திருப்பார் போல!

✦ காஞ்சிபுரம் வரதராஜப்பெருமாள் கோயிலுக்குள் நுழைய பார்ப்பனர்களுக்கு மட்டும் தனி வாசல். **– செய்தி**

அச்சச்சோ... இந்த கோயிலுக்குள்ளே சங்கர்ராமனை வெட்டி கொலை செய்ய வந்த கும்பல் எந்த வாசல் வழியா வந்து தொலைஞ்சாங்களோ தெரியலையே...!

✦ காங்கிரசில் இருப்பது ஒரே கோஷ்டிதான்; அதற்கு தலைவர் சோனியா காந்தி. **– ஈ.வெ.கி.எஸ். இளங்கோவன்**


அப்படியா! இதுவரை ‘பேரியக்கம், பேரியக்கம்’ன்னுதானே சொல்லிக்கிட்டு வந்தீங்க... இப்ப கோஷ்டியாயிடுச்சா?

✦ விநாயகன் என்ற உடலுக்கு யானை தலையைப் பொருத்தும் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை முறை புராண காலத்திலேயே இருந்திருக்கிறது. **– பிரதமர் மோடி**

ஆமாம்! அதற்குப் பிறகு இந்த அறுவை சிகிச்சையை எவரும் செய்யக் கூடாது. மருத்துவக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் மட்டுமே செய்ய வேண்டும் என்று சிவபெருமான் ‘சாபம்’ விட்டார்ன்னு சேர்த்து சொல்லுங்க. இன்னும் கதை நல்லாவேயிருக்கும்!

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 7th November 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | நவம்பர் 13, 2014 | புரட்சி 13 | முழக்கம் 44 | விலை: ரூ.3.00


# ஜாதிவாரிக் கணக்கெடுப்பைத் தடுக்கும் பார்ப்பன சக்திகள்

மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் இந்தியாவில் ஜாதிவாரியாக உள்ள மக்களின் கணக்கெடுப்பையும் எடுக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உச்சநீதிமன்றத்தின் தீபக் மிஸ்ரா தலைமையிலான அமர்வு தள்ளுபடி செய்துள்ளது. இது அரசின் கொள்கை சார்ந்த பிரச்சினை. எனவே சென்னை உயர்நீதிமன்றம் இதில் தலையிட்டு தீர்ப்பு வழங்கியது முறையல்ல என்கிறது உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு. தமிழ்நாட்டின் சமூக நீதி உணர்வுகளையே சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்புகள் வழியாக வெளி பட்டிருப்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. பெரியார் உருவாக்கிய சமூக நீதிக்கான மண் தமிழ் நாடு என்ற உண்மை மேலும் உறுதியாகியுள்ளது.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் ஜாதி வாரி கணக்கீட்டையும் இணைத்துக் கொள்ள 2010, மே மாதம் சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பு உறுதிப் படுத்தியது. இதை எதிர்த்து செய்யப்பட்ட மேல்முறையீட்டில்தான் உச்சநீதிமன்றம், சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பை தள்ளுபடி செய்துள்ளது.

ஜாதிவாரியாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பிரிட்டிஷ் ஆட்சியில் 1931 ஆம் ஆண்டில்தான் கடைசியாக எடுக்கப்பட்டது. ‘சுதந்திர’ இந்தியாவில் இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை என்பதை உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டுகிறது. அதே நேரத்தில் ‘சுதந்திர’ இந்தியாவின் அரசியலமைப்பு - ஜாதிகளைத் தடை செய்துவிடவில்லை. அவரவர் ஜாதி மதத்தைப் பின்பற்றுவதை அடிப்படை உரிமையாக்கியுள்ளது.

ஜாதிவாரியாகக் கணக்கெடுப்பு நடத்துவதை எதிர்ப்பவர்கள் யார்? இது ஒரு முக்கிய கேள்வி. பட்டியல் இனப்பிரிவில் அடங்கியுள்ள தாழ்த்தப்பட்டோர், பழங்குடி யினருக்கான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. இதற்கு தடை போட முடியாது. அது அரசியல் சட்டம் வழங்கியுள்ள உரிமை. ஏனைய ஜாதிப் பிரிவினர் கணக் கெடுப்புதான் இப்போது எதிர்ப்புக்குள்ளாக்கப்படு கிறது. பார்ப்பன சக்திகள் இந்த விவரங்கள் வெளிவந்துவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். இந்திய அதிகார மய்யங்களில் குவிந்து கிடக்கும் தங்கள் ஆதிக்கம் அசைக்கப்பட்டு விடக்கூடாது என்பதே அவர்களின் ஒரே நோக்கம்.

இந்தப் பிரச்சினையில் கடந்தகால ஆட்சிகளின் கொள்கை முடிவுகள் அரசு நியமித்த ஆணையங்கள் ஜாதிவாரியான இடஒதுக்கீட்டுக்கு ஆதரவாகவே இருந்திருக்கின்றன.

1953இல் நேரு பிரதமராக இருந்தபோது அமைக்கப்பட்ட காகாகலேல்கர் தலைமையிலான பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், மொரார்ஜி பிரதமராக இருந்தபோது 1978இல் நியமிக்கப்பட்ட மண்டல் ஆணையம் இரண்டுமே ஜாதிவாரி கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என்றே பரிந்துரை செய்திருந்தன. ஆனால், பார்ப்பன அதிகார வர்க்கம் தனது அதிகார வலிமையைப் பயன்படுத்தி பரிந்துரைகளை முடக்கியது.

பத்தாண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டுவரும் நிலையில் 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்த வேண்டிய நிலையில் 1999 ஆம் ஆண்டு ஜாதிவாரிக் கணக்கெடுப்பு குறித்த விவாதங்கள் தொடங்கின. அப்போது தேசிய ஜனநாயக முன்னணி ஆட்சியில் உள்துறை அமைச்சராக இருந்த அத்வானி ஜாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினார். பார்ப்பன ஏடுகள் ஜாதிவாரிக் கணக்கீடு கூடாது என்றும், அத்வானியை எதிர்த்தும் கடுமையாக எழுதின. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு தலைமை அதிகாரி ஜே.ஜே. பாண்டியா, தமிழக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆணையர் கி.சந்திரமவுலி (இருவரும் பார்ப்பனர்கள்) ஆகியோர் ஜாதிவாரிக் கணக்கெடுப்பு நடக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தனர். அவர்கள் அத்வானியை நேரில் சந்தித்து முடிவை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தி சம்மதிக்க வைத்தனர். புது டில்லியிலிருந்து வெளிவரும் டி.என்.ஏ. நாளேட்டில் பி.இராதாகிருட்டிணன் எழுதிய கட்டுரையில் இந்த உண்மையை பதிவு செய்துள்ளார்.

2011 ஜூலை 12 ஆம் தேதி வெளிவந்த அக்கட்டுரை இவ்வாறு குறிப்பிடுகிறது:

> “தேசிய ஜனநாயக முன்னணியில் உள்துறை அமைச்சராக இருந்த அத்வானி, 2001 மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் ஜாதிவாரிக் கணக்கெடுப்பை சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்தினார். அதற்கு என்ன காரணம் என்பது அவருக்குத்தான் தெரியும். இதை எதிர்த்து ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளேட்டில் (டிசம். 9, 1999) நான் எழுதிய கட்டுரையைத் தொடர்ந்து, சென்னை தலைமை அதிகாரி ஜே.ஜே.பாண்டியா, தமிழக சென்சஸ் ஆணையர் கி.சந்திரமவுலி இருவரும் என்னை சந்தித்தனர். அத்வானியை நேரில் சந்தித்து அவரது கருத்தை மாற்றிக் கொள்ளுமாறு எடுத்துக் கூறி, அவரிடம் சம்மதம் பெற்றுவிட்டதாக என்னிடம் தெரிவித்தனர். எது நடந்ததோ எனக்கு தெரியாது. 2001 மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் ஜாதிவாரி கணக்கெடுப்பு எப்படியோ கைவிடப்பட்டது”
>
> - என்று எழுதியுள்ளார்.

மீண்டும் 2011இல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு வந்தபோதும் இதே விவாதங்கள் தொடங்கின. அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் திக்விஜய்சிங், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டி.இராஜா இருவரும் இணைந்து ஜாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி 2010 ஆகஸ்டு 5ஆம் தேதி கூட்டாக ஒரு அறிக்கையை வெளியிட்டனர். (இப்போது அதே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில செயலாளர் தா.பாண்டியன், ஜாதிவாரிக் கணக்கெடுப்பு வேண்டாம் என்று கூறுகிறார்) இது குறித்து பல மட்டங்களில் நடந்த விவாதத்துக்குப் பிறகு, நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தலைமையில் அமைச்சரவைக் குழு ஒன்று அமைக்கப்பட்டு அந்தக் குழு ஜாதிவாரிக் கணக்கெடுப்பை நடத்தலாம் என்று முடிவு செய்தது. 2010 ஆகஸ்டு 12 ஆம் தேதி நாடாளுமன்றத்தில் பிரணாப் முகர்ஜியே இதை அறிவித்தார். அந்தக் கணக்கெடுப்பை எந்த வழிமுறைகளில் நடத்தலாம் என்பதை மட்டுமே இனி தீர்மானிக்க வேண்டும் என்றார், அமைச்சர்.

அரசின் கொள்கை முடிவு இப்படி இருந்தாலும் பார்ப்பன அதிகாரவர்க்கம் மீண்டும் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி ஜாதிவாரிக் கணக் கெடுப்பைத் தடுத்தது. பார்ப்பன அதிகார வர்க்கத்துக்கு துணைப் போனவர், மத்திய உள்துறை அமைச்சராக இருந்த ப.சிதம்பரம். அப்போது அவர் தான் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு வாரியத்தின் தலைவர். இந்த வாரியத்தின் சார்பில் அரசின் கொள்கை முடிவுக்கு எதிராக 2012இல் சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. அந்த முறையீட்டு வழக்கின் தீர்ப்பு தான் இப்போது வெளி வந்துள்ளது.

இந்த வழக்கில், உச்சநீதிமன்றத்தில் பா.ஜ.க. அரசு சார்பில் வாதாடிய மூத்த வழக்கறிஞர் ஆர்.எஸ்.சூரி, ஜாதிவாரிக் கணக்கெடுப்பை நடத்த தற்போதைய மோடி அரசு விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார்.

ஆக, ஜாதியமைப்பை நியாயப்படுத்தி அதைக் காப்பாற்றத் துடிக்கும் பார்ப்பன சக்திகள், ஜாதிவாரியான மக்கள் தொகை எண்ணிக்கை வெளியே வரக்கூடாது என்பதில் உறுதி காட்டுகின்றனர். உச்சநீதிமன்றத்தின் 9 நீதிபதிகள் அடங்கிய அமர்வு இந்திரா சகானி வழக்கிலும் (1992), எம். நாகராஜ் எதிர் இந்திய ஒன்றியம் (2006) வழக்கிலும், அசோக் தாகூர் எதிர் இந்திய ஒன்றியம் (2008) வழக்கிலும் இடஒதுக்கீட்டை எதிர்த்து வாதாடியவர்கள் எல்லாம், ஜாதிவாரியாக கணக்கெடுப்பு நடத்தப்படாததையே தங்களின் முதன்மையான வாதமாக முன்வைத்தனர். ‘இந்திரா சகானி’ வழக்கில் உச்சநீதிமன்றம் தந்த தீர்ப்பின் ஆணையை ஏற்று இந்திய அரசு 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் 2 ஆம் தேதி பிற்படுத்தப்பட்டோருக்கான தேசிய ஆணையச் சட்டம் ஒன்றை நாடாளு மன்றத்தில் நிறைவேற்றியது. அந்த சட்டத்தின் 11ஆவது பிரிவு 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலை ‘சேர்த்தல்-விலக்கல்’ அடிப்படையில் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது. இந்த சட்டப்பிரிவை நிறைவேற்ற, ஜாதியடிப்படையிலான விவரங்கள் அவசியத் தேவையாகின்றன.

உச்சநீதிமன்றம் இவற்றை எல்லாம் கவனத்தில் கொள்ளத் தயாராக இல்லை. நாட்டின் பெரும்பான்மை மக்களான ‘சூத்திரர்கள்’ தங்கள்

(4 ஆம் பக்கம்)

## குரலற்ற மக்கள்

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் பட்டியல் இனப் பிரிவில் அடங்கியுள்ள எண்ணிக்கையில் சிறுபான்மையினரான புதிரை வண்ணார், காட்டு நாயக்கர், நரிக்குறவர், குயவர், வண்ணார், நாவிதர், போயர் போன்ற பல்வேறு சமுதாயப் பிரிவினர் ஒரு ஊராட்சி மன்ற உறுப்பினராகக்கூட வர முடியாத நிலையே உள்ளது. உயர்கல்வி, உயர் பதவிகளில் கற்பனையில்கூட எட்டிப்பிடிக்க முடியாத, ‘குரலற்றவர்களாக’ உள்ள இந்த சமூகத்தினருக்கு, சட்டம் வலியுறுத்தும் ‘போதுமான பிரதிநிதித்துவம்’ (Adequae Representation) என்ற இலக்கை சென்றடைவதற்கு தற்போதுள்ள இடஒதுக்கீட்டு முறையில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டிய அவசியத்தை - இம் மாநாடு சுட்டிக்காட்டுகிறது. குரலற்ற இந்த மக்களின் நியாயமான உரிமைகளுக்குத் திராவிடர் விடுதலைக் கழகம் வலிமையாகக் குரல் கொடுத்துப் போராடும் என்ற அறிவிக்கிறது.

**2013 டிசம்பர் 24இல் ஈரோட்டில் நடந்த திராவிடர் விடுதலைக் கழகப் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி விளக்கம்:

# ஆர்.எஸ்.எஸ். இட ஒதுக்கீட்டை ஆதரிப்பது ஏன்?

*‘புதிய தலைமுறை’ தொலைக்காட்சியில் 28-09-2014 அன்று ஒளிபரப்பான ‘அக்னிப் பரீட்சை’ நிகழ்ச்சியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பதில்கள். பேட்டி கண்டவர் தலைமை செய்தியாளர் மு. குணசேகரன். சென்ற இதழ் தொடர்ச்சி.*

**கேள்வி :** உயர்ந்த சமூக நோக்கில் இருந்து இதைச் சொல்வதாகக் கருதுகிறேன்; பிற்படுத்தப்பட்ட தலைவர்களில் பெரும்பாலானோர் ‘நாங்கள் ஆண்ட பரம்பரை மன்னர் பரம்பரையில் இருந்து வந்தவர்கள் ’ என்ற பெருமை பேசுபவர்களாக, அதன் மூலம் அணி திரட்டக் கூடியவர்களாக இருக்கிறார்கள்; அந்த ஆண்ட பரம்பரை என்ற ஒரு வாதம், அதன் மூலமாக எளிய பிரிவினரை ஒடுக்க முயற்சி செய்வது, முதலியவற்றிற்கு இது வழி வகுத்து விடாதா?

**பதில்:** நீங்கள் சொல்வதில் ஒரு உண்மை இருக்கிறது. இட ஒதுக்கீட்டைப் பற்றி பேசும் இரண்டு பேரை (இரண்டு பிரிவினரை) பார்த்தால் நமக்கு அச்சமாக இருக்கிறது. காலம் காலமாக இட ஒதுக்கீட்டை எதிர்த்து வந்த ஆர்.எஸ்.எஸ். காரர்கள் இப்போது இட ஒதுக்கீட்டை வரவேற்று இருக்கிறார்கள். 1925 இல் தொடங்கி ஏறத்தாழ ஒரு 90 ஆண்டுகளுக்கு பிறகு இப்போது தான் முதன் முறையாக, இட ஒதுக்கீட்டை ஏற்றுக்கொள்வதாக மோகன் பகவத் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவுதான் இந்து மதத்தின் அழுத்தம் இருந்தாலும் கூட, பிற்படுத்தப்பட்ட- தாழ்த்தப்பட்ட மக்கள் வளர்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். தவிர்க்க முடியாத ஆற்றலாக வளர்ந்துவிட்டார்கள் என்பதை புரிந்து கொண்ட ஆர்.எஸ்.எஸ் காரர்கள், இவர்களைத் தம்மோடு சேர்த்துக் கொண்டு, பிற மதத்தினர் என்று அவர்கள் கருதுபவர்கள் மீது இவர்களை ஏவி விடுவதற்காக, இட ஒதுக்கீட்டை அவர்கள் ஆதரிப்பதாகத்தான் நாங்கள் பார்க்கிறோம். அதே போல இட ஒதுக்கீட்டைப் பேசும் இன்னொரு பிரிவினர் இட ஒதுக்கீட்டால் வளர்ந்தவர்கள். ஒரு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் ஜாதியின் காரணமாகப் பாதிக்கப்பட்டு, ஜாதிக்கு ஆதாரமாக இருக்கும் வேதங்களில் சூத்திரர்களாக இழிவாக பேசப் பட்டு, பெரியார் இயக்கம் போன்ற ஜாதி மறுப்பு இயக்கங்களால் விடுவிக்கப்பட்டு வந்தவர்கள் தான் இட ஒதுக்கீட்டைப் பெற்று மேலே வந்த இவர்கள் தான், அடுத்து மேலே வரமுயற்சிக்கும் இன்னொரு பிரிவினரை, அவர்கள் வந்து விடக் கூடாது என்று செயல்படுகிற சுயநலப் போக்கை நாம் பார்க்கிறோம். அவர்கள் சொல்லுகின்ற சுயநலப் போக்கு கூட வேலை வாய்ப்புக்கோ, கல்விக்கோ இல்லை. தாங்கள் அரசில் அமர வேண்டும்; அரசில் அமர்வதற்கு, ஒரு பெரும் இடத்தை பிடிப்பதற்காக வாவது ஏதாவது செய்து, ஏதாவது பேசி, புரியாமல் இருக்கிற பாமர மக்கள் மீது தவறான கருத்துக்களை செலுத்தியாவது, தங்கள் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையின் அடிப்படையில், ஏதோ ஒரு காலத்தில் தங்களால் விளைந்த நன்மைகளை நினைத்து நம்மை ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதி செயல்பட்டுக் கொண்டிருக்கிற அரசியல் சக்திகள் இருக்கத்தான் செய்கின்றன. கணக்கெடுப்பு எடுத்தால் இவர்கள் சொல்லுகிற எண்ணிக்கை இருக்காது என்று நாம் உறுதியாக சொல்லலாம். ஒரு முறை எம்.ஜி.ஆர். கூட, மக்கள் தொகை எண்ணிக்கையைக் கேட்டபோது, அனைத்து ஜாதியினரின் மக்கள் தொகையைக் கூட்டிப் பார்க்கும் போது, தமிழ்நாட்டு மக்கள் தொகையை போல் இரண்டரை மடங்கு வந்தது. ஆனால் மக்கள் தொகை கணக்கெடுப்பு எடுத்தாலும், எடுக்காவிட்டாலும், இதற்கு முன்பு தமிழ்நாட்டில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் இருந்த பார்ப்பனர்கள் தான் ஆதிக்கம் செலுத்தி வந்தார்கள். அதற்கு பின்னால் மிகக் குறைந்த



எண்ணிக்கையில் இருக்கிற பார்ப்பன ரல்லாத உயர் ஜாதி யினர்தான் ஆதிக்கத் தில் இருந்தனர். இப் போது ஒப்பீட்டு அளவில் தாழ்த்தப் பட்ட மக்களின் அள வுக்கு எண்ணிக்கை யில் இல்லாத ஜாதி கள்தான் அந்தந்த பகுதியில் ஆதிக்கம் செய்கிறார்கள். எனவே எண்ணிக்கை என்பது காரணம் அல்ல; அவர்கள் மூளையில் ஏற்றப் பட்டுள்ள சிந்தனைப் போக்குதான் காரணம். ஆண்ட பரம்பரை ஆண்ட பரம்பரை என்று சொல்லுகின்றீர்கள், எந்தப் பரம்பரையைச் சொன்னாலும், இந்து சட்டம் சொல்லுகின்றது ‘தென்னிந்தியாவை பொறுத்தவரை பார்ப் பனர்கள்-சூத்திரர்கள் இரண்டே பேர் தான், துடைப்பத்திற்கு பட்டுக் குஞ்சம் என்பது போல இவர்கள் வேண்டு மானால் பல பெயர்களைச் சூட்டிக் கொள்ளலாம். ஆனால் இவர்கள் நம்பிக்கொண்டிருக்கிற இந்து மதம், எதை வைத்துக் கொண்டு தங்களை உயர்ஜாதியாக சொல்லிக் கொள்கிறார்களோ அந்த இந்து மதம், இவர்களை இழிவாகத்தான் வைத்திருக்கிறது. அரசியல் சட்டப்படி நம் நாட்டின் இந்து சட்டப்படி அப்படித்தான் இருக்கிறார்கள்; அதனால் தான் அர்ச்சகர் ஆக முடியவில்லை. ஊரில் இவ்வளவு ஆதிக்கம் பேசுபவர்கள் கோவில் பக்கம் போய்ப் பார்க்கட்டும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இவர்களுக்கும் சில அடி தூர வேறுபாடு தானே தவிர இவர்களும் தீண்டத் தகாதவர்கள்தான். அதைப் புரிந்து கொள்ளாமல் இருப்பதற்கும், புரியவிடாமல் மக்களை வைத்திருப்பதற்கும் சுயநல அரசியல் சக்திகள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

**கேள்வி :** உங்களைப் பொருத்தவரையிலும் நீங்கள் நாத்திகர்கள்; எந்த மதத்தையும் சாராதவர்கள்; மதச்சார்பின்மை வாதிகள் என்று சொல்கிறீர்கள்; மதச் சார்பின்மை என்ற சொல் மாதிரியே, போலி மதச் சார்பின்மை என்ற சொல்லை ஆர்.எஸ்.எஸ், பி.ஜே.பி உள்ளிட்ட அமைப்புகள் சொல் கிறார்கள்; குறிப்பாக வாக்கு வங்கி அரசியல் செய்வதாக காங்கிரஸ், கம்யூனிஸ்டுகள், தி.மு.க, அண்ணா தி.மு.க, போன்ற கட்சிகளைப் பார்த்து, போலி மதச் சார்பின்மை பேசுகிறீர்கள், சிறுபான்மையினருக்கு ஒரு பிரச்சனை என்றால் பேசுவீர்கள்; ஆனால் இந்துக்களுக்கு பிரச்சனை வந்தால் பேசமாட்டீர்கள் என்று சொல்கிறார்கள்; மதச்சார்பின்மையில் உண்மையான / போலியான மதச் சார்பின்மை என்று இருக்கின்றதா?

**பதில் :** முதலில் மதச்சார்பின்மை என்பது நம் முடைய கொள்கை அல்ல; அது வெளிநாட்டில் இருந்து வந்த கொள்கை; செக்யூரிலிசம் என்பது வெளிநாட்டில் இருந்து வந்தது. செக்யூரிலிசம் என்ற கொள்கையை முன்கொண்டு வந்தவர்கள் அங்கு வைத்த முழக்கமே ‘Seperate the State and the Church’ அரசையும் மதத்தையும் பிரிக்க வேண்டும்; எனவே அரசில் மதம் தலையிடக் கூடாது என்றுதான் கொண்டுவந்தார்கள். செழுமைப்படுத்தப்பட்டபோது, ஒவ்வொன்றாக அரசு என்பதில் மதத்தின் தலையீடு கூடாது; கல்வியில் மதம் திணிக்கப்படக் கூடாது; ஒழுக்கம் என்பதில் மதம் வேண்டாம் என்ற மூன்றை வைத்திருந்தார்கள். மதச் சார்பின்மையை இங்கு பேசுபவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் அவரவர் மதத்தை பின்பற்றுவதை யாரும் வேண்டாம் என்று சொல்வதில்லை; பொது இடங்களில் மதத்தைத் திணிக்காதீர்கள் என்றுதான் சொல்கிறார்கள். இப்போது பி.ஜே.பி. சொல்லுவதாக சொல்கிறீர்கள், 1993 ஆம் ஆண்டு இதே பி.ஜே.பி. அரசின் உள்துறையின் சார்பாக ஒரு குழுவை அமைத்தார்கள்; நாட்டில் அடிக்கடி ஏற்படும் மதக் கலவரங்களுக்கு என்ன காரணம் என்பதை ஆய்வதற்கு. அப்படி ஆய்ந்து அவர்கள் கொடுத்த அறிக்கையில், அரசு அலுவலகங்களில் பொது இடங்களில் மத வாசகங்களை எழுதுவதும், மத வழிபாடுகளைச் செய்வதும் கோவில்களை எழுப்புவதும்தான் காரணமாக இருக்கிறது என்று சொன்னதை ஏற்று, அனைத்து மாநில அரசுகளுக்கும் பா.ஜ.க ஆட்சிக் காலத்தில்தான் ஒரு சுற்றறிக்கை அனுப்பப் பட்டது. எந்த அரசு அலுவலகங்களிலும் மத வாசகங்கள் எழுதப்படுவதோ, கோவில்களைப் புதுப்பிப்பதோ விரிவாக்குவதோ புதிதாக கட்டு வதோ கூடாது, மதவழிபாடுகளைச் செய்வதோ கூடாது என்பதைச் சுற்றறிக்கையாக அனுப் பினார்கள். அப்போது தமிழ்நாட்டில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி; தலைமைச் செயலாளராக இருந்த ஹரிபாஸ்கர்தான், இதை அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் 1994 ஆம் ஆண்டு அனுப்பி வைத்தார். போலி மதச் சார்பின்மை என்று சொல்லுகின்ற இவர்கள் ஏன் அப்படிப்பட்ட சுற்றறிக்கையைத் தங்கள் உள்துறை மூலம் அனுப்பவேண்டும்? ஆக இங்கு அரசியலுக்காக அவர்கள்தான் பேசுகிறார்களே தவிர நாம் பேசவில்லை. மதச் சார்பின்மை என்று பேசுவது, நீங்கள் எந்த மதத்தை வேண்டுமானா லும் பின்பற்றுங்கள், பொது இடங்களில் அரசு அலுவலகங்களில் கொண்டு வந்து விட வேண்டாம் என்பது தான் நம்முடைய கருத்தாக இருக்கிறதே தவிர, வேறொன்றும் இல்லை. இதில் போலி என்பதோ, உண்மை என்பதோ இல்லை; மதத்தைச் சார்ந்து பொது நிகழ்ச்சிகள் செய்யா தீர்கள், உங்கள் வீடுகளில் வைத்துக் கொள்ளுங்கள் என்பது தான்.

**கேள்வி :** அறிவியல் மனப்பான்மை வளர்ப்பது என்பது ஒவ்வொரு குடிமகனின் அடிப்படை கடமை என்று அரசியல் சட்டம் சொல்கிறது; அறிவியல் மனபான்மை வளர்க்கிறோம் என்ற பெயரில் நீங்கள் செய்யும் நாத்திகப் பிரச்சாரம் என்பது ஒரு குறிப்பிட்ட மதத்தின் நம்பிக்கையை கேள்விக்குள்ளாக்குகிறது; அதன் மூலமாக ஒரு குறிப்பிட்ட மதத்தை இழித்தும், பழித்தும் பேசுகிறீர்கள்; அவர்கள் வணங்கும் தெய்வத்தைக் குறை சொல்லி கொச்சைப்படுத்தி பேசுகிறீர்கள் என்ற விமர்சனத்தை பி.ஜே.பி, ஆர்.எஸ்.எஸ், இந்து முன்னணி போன்ற அமைப்புகள் சொல்கிறார்களே?

**பதில் :** ஒன்றைத் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்; பெரியார் இயக்கத்தைப் பொருத்த வரை அது பகுத்தறிவுக்கு மட்டுமான இயக்கம் அல்ல; அது இன இழிவு ஒழிப்பு இயக்கம். இந்த நாட்டின் பெரும்பான்மையாக இருக்கும் மக்களாகிய உழைக்கும் மக்களை, இழி ஜாதியாக, உரிமை அற்றவர்களாக வைத்திருப்பதை மாற்று வதற்கு வந்த இயக்கமே தவிர, அது பகுத்தறிவுக்காக மட்டும் வந்த இயக்கம் அல்ல. ஜாதி ஒழிப்பு முயற்சியில் தடையாக இருந்த போது அந்த இடத்துக்குப் போனார்கள். ஒன்று அப்படி சொல்லவேண்டும், இன்னொன்று அறிவியல் மனப்பான்மைக்காக, அறிவியல் ரீதியாக நிரூபிக்க முடியாத கடவுளை எதிர்க்கிறார்கள் என்று வைத்துக் கொண்டால் கூட, சில எடுத்துக்காட்டுகளை உங்களிடம் சொல்லியாக வேண்டும். பல நாத்திகத் தலைவர்கள் இருந்தார்கள்; அமெரிக்காவில் இங்கர்சால் இருந்தார், இங்கிலாந்தில் பிராட்லா இருந்தார், பெர்ட்ரண்ட் ரசல் இருந்தார், இங்கர்சால் கிறிஸ்து மதத்தை எதிர்த்து தான்

(3ஆம் பக்கம்)

# விநாயகன் ஊர்வலங்கள் - பக்தியின் வளர்ச்சியை காட்டுகிறதா?

*(2ஆம் பக்கத் தொடர்ச்சி)*

*பரப்புரை செய்தார் ஏனென்றால் அந்த நாட்டில் பெரும்பான்மை மதம் அதுதான். பெர்ட்ரண்ட் ரசல் 'நான் ஏன் கிறிஸ்துவன் அல்ல' என்ற நூலைத் தான் எழுதினார்; நான் ஏன் இந்துவல்ல என்றெல்லாம் எழுதவில்லை. தஸ்லிமா நஸ்ரின் குரான் மீது, அல்லா மீது, இஸ்லாத்தின் மீதான கேள்விகளைத்தான் வைக்கிறாரே தவிர, அவர் இந்து கடவுள் மீதான கேள்விகளை முன்வைக்கவில்லை. எனவே ஆங்காங்கு பெரும்பான்மையாக இருக்கும் மதம் எதுவோ அதைத்தான் யாரும் பேசமுடியும் என்பது இயல்பான ஒன்று. இது பகுத்தறிவு பார்வை. இன இழிவு ஒழிப்பு என்று பார்க்கிறபோது, நீங்கள் சொல்லுகின்ற மற்ற மதங்கள் கிறிஸ்துவமாக இருந்தாலும், இஸ்லாமாக இருந்தாலும் ஏற்றத் தாழ்வுகளை தங்கள் கொள்கையில் கொண்டிருக்கவில்லை. தமிழ்நாட்டில் இந்தியாவில் வந்துவிட்ட பின்னால் கிறிஸ்துவத்துக்குள் ஜாதி வந்துவிட்டது. வட இந்தியாவில் இஸ்லாத்துக்குள்ளும் ஜாதி இருக்கிறது; அங்கு தலித் முஸ்லீம்கள் இட ஒதுக்கீடு கேட்டுப் போராடுகிறார்கள் அது ஒருபுறம் இருக்கிறது. ஆனால் கொள்கை அளவில் அம்மதங்கள் வைத்திருக்கவில்லை. அப்படியே வைத்திருந்தாலும் அதைச் சொல்லி யாரும் இழிவுபடுத்தப்படவில்லை. இந்து மதம் மட்டும் தான் பெரும்பான்மை மக்களாகிய எங்களை அல்லது நம்மை சூத்திரர்கள் என்கிறது; பஞ்சமர் என்று வைத்திருக்கிறது. எனவே இதை உடைக்கவேண்டுமானால், இதற்குக் காரணமாக காட்டப்படுகின்ற வேதங்கள் மீது, புராணங்கள் மீது, சாஸ்திரங்கள் மீது கேள்வி வைக்கின்றோம். அந்த சாஸ்திரங்கள் கடவுளால் உண்டாக்கப்பட்டது என்று சொல்லுகிற போதுதான் அந்தக் கடவுளின் யோக்கியதை என்ன? இந்தக் கடவுள் சொல்வதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமா? என்று பேச வேண்டியிருகிறது. எனவே நாங்கள் இந்து மதக் கடவுள்களை விமர்சிப்பது என்பது பகுத்தறிவு பார்வையில் பார்த்தால் பெரும்பான்மை மதமாக இருப்பதை எதிர்க்கிறோம் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். ஆனால் பெரியாரின் இயக்கம் இன இழிவு ஒழிப்பு இயக்கம் என்பதால் எங்களை இழிவுபடுத்துகிற, எங்களை ஜாதி அடிப்படையில் கேவலமானவர்களாக உரிமை அற்றவர்களாக, கடவுள் நம்பிக்கை இருந்தாலும், சமய வழிபாட்டுப் பயிற்சி இருந்தாலும் கூட இன்றளவும் கருவறைக்குள் நுழைய முடியாதவர்களாக வைத்திருப்பதற்கு எது காரணம்? எனவே இதையெல்லாம் கேள்விக்குள்ளாக்குகிறோம். பகுத்தறிவு பார்வையில் எல்லா மதங்களையும்தான் நாங்கள் புறக்கணிக்கிறோம். கடவுள் இல்லை, இல்லவே இல்லை என்ற பெரியார் குறிப்பிட்டது குறிப்பிட்ட கடவுளை தவிர்த்துவிட்டெல்லாம் சொல்லவில்லை. ஆனால் பெரியார் இயக்கவாதிகளான நாங்கள், இன இழிவு ஒழிப்பு என்று பார்க்கிறபோது, கிறிஸ்துவ மதத்தில் மத அடிப்படையில் இல்லை, நடைமுறையில் இருக்கின்றது; அதை நாங்கள் எதிர்க்கின்றோம். இஸ்லாம் மதத்தில் நடைமுறை அளவில் கூட தமிழ்நாட்டில் இல்லை. எனவே தான் பெரியார் "இன இழிவு நீங்க இஸ்லாமே நன்மருந்து" என்றுகூட சொன்னார். பெரியார் எல்லோரையும் முஸ்லீமாக மாற சொல்லிவிட்டார் என்று பல பேர் சொல்லுகின்றார்கள். இது பற்றிய கேள்வி வந்த போது பெரியார் சொன்னார் "நான் சொல்வது தீண்டாமை ஒழியாதா என்ற ஏக்கத்தோடு இருப்பவர்க்கு சொல்லும் அறிவுரையே தவிர பகுத்தறிவுவாதிக்கோ, சுயமரியாதைக்காரனுக்கோ, பெண்ணுரிமை வாதிக்கோ அல்ல" என்று.*

**கேள்வி :** *பக்ரீத்துக்கும், கிறிஸ்துமஸ்துக்கும் சம்பிரதாய வாழ்த்து சொல்வது என்பது கூட பிரச்சனை ஆவதில்லை; ஆனால் தீபாவளிக்கும் விநாயகர் சதுர்த்திக்கும் வாழ்த்து சொல்வது பிரச்சனை ஆகிறது; தி.மு.க தலைவர் கருணாநிதி தீபாவளிக்கு வாழ்த்து சொல்வதில்லை; அதே கட்சியின் பொருளாளர் ஸ்டாலின் அவர்களின் ஃபேஸ்புக்கில் விநாயகர் சதுர்த்திக்கு வாழ்த்து வந்ததை அந்த கட்சி மறுக்கிறது. தீபாவளிக்கும், விநாயர் சதுர்த்திக்கும் வாழ்த்து சொல்வது என்பது அவ்வளவு தவறான விசயமா? அந்த அளவிற்கு கொள்கை விரோத விசயம் என்று நினைக்கிறீர்கலா?*

**பதில் :** *இந்து மதத்தை பின்பற்றுபவர்கள், இந்து மதத்தைப் படிக்காமல் பின்பற்றுகிறார்கள் என்பது தான் உண்மை. எடுத்துக்காட்டாக பக்ரீத் என்ற அந்த நோன்பு வைப்பதற்கான காரணங்களை நீங்கள் பார்த்தால் கூட அதில் கேவலமான எதுவும் இருக்காது. தீபாவளியைப் பார்க்கின்றபோது அறிவியலுக்கு புறம்பானது மட்டுமல்ல, இழிவுபடுத்துகிற செய்திகள் இருக்கின்றன. விநாயகரை எடுத்துக் கொண்டாலும் அறிவியலுக்குப் புறம்பானது மட்டுமல்ல இழிவுபடுத்துகிற விசயம் இணைந்திருக்கிறது என்பதை நாம் பார்க்கவேண்டும். அவர்கள் சொல்வது கூட வாக்கு அரசியல் என்று வைத்துக் கொள்ளலாம். கிறிஸ்துமஸுக்கு சொல்கிறார்கள் என்றால் அந்த தலைவரின் பிறந்த நாள் என்று சொல்கிறார்கள்; அதற்கான வரலாறு இருக்கின்றது. பக்ரீத் என்பதோ மிலாடி நபி என்பதோ நபிகள் பிறந்த நாள் என்றால் அதற்கான வரலாறு இருக்கின்றது. ஆனால் விநாயகர் பிறந்த நாள் என்று சொல்லுகின்ற போது எத்தனையாவது பிறந்த நாள் என்று எப்போதாவது அறிவித்திருக்கிறார்களா? ஏசுநாதருக்கு 2014 என்று சொல்கிறார்கள்; முகமது நபிக்கு ஒரு ஆயிரத்து நாநூறு, ஆயிரத்து ஐநூறு என்று சொல்கிறார்கள், அதுபோல இவர்கள் சொல்லட்டும். அப்போது அறிவியல் பூர்வமானது என்று ஏற்றுக்கொள்ளலாம். முற்றும் முழுவதுமாக பொய்க் கதைகளும், சமுதாயத்தின் பெரும்பான்மை மக்களை கேவலமாக ஆக்குகிற கதைகளையும் உள்ளடக்கியிருக்கின்ற இதைத்தான் எதிர்க்கின்றார்கள்.*

**இந்து மதத்தை பின்பற்றுபவர்கள், இந்து மதத்தைப் படிக்காமல் பின்பற்றுகிறார்கள் என்பது தான் உண்மை.**

**கேள்வி :** *விநாயகர் ஊர்வலத்திற்கு எதிர்க் குறியீடாக பெரியார் கைத்தடி ஊர்வலம் என்று ஆண்டுதோறும் நடத்துகிறீர்கள்; ஆனால் தமிழ்நாட்டைப் பொருத்தவரை விநாயகர் சிலைகளை வைத்து ஊர்வலம் நடத்துவது என்பது அண்மைக் காலங்களில் அதிகரித்துக் கொண்டு போவதைத் தான் பார்க்கின்றோம்; ஆனால் அதற்கு எதிர்க் குறியீடான பெரியார் கைத்தடி ஊர்வலம் பலமானதாக இருப்பதாக தெரியவில்லை. இந்த விநாயகர் சதுர்த்தியை கொண்டாவதன் மூலம் மக்கள் அதை ஆதரிக்கிறார்கள் என்று பொருள் ஆகாதா?*

**பதில் :** *ஒரு இருபது ஆண்டுகளுக்கு முன்னால் இந்த நாட்டில் இரண்டு மதத்தினரும் பெரிய ஊர்வலங்களை எடுத்து வந்தனர். மிலாடிநபி என்ற ஊர்வலத்தை இஸ்லாமியர்கள் எடுத்து வந்தார்கள்; விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தை எடுக்கும் முயற்சியை இந்துக்கள் தொடங்கியிருந்தார்கள். அதற்கு முன்பெல்லாம் எப்போதும் விநாயகர் ஊர்வலம் நடத்தப்படவில்லை; அரசியலாகத் தான் நான் இதைப் பார்க்கிறேன். அது எப்படி இருந்தாலும் ஆரம்பித்தது. அப்போது கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தார்கள்; இரண்டு மதத்தினருக்கும் வேண்டுகோள் வைத்தார். தேவையற்ற கலவரங்களை உண்டாக்குகிறது; எனவே இஸ்லாமியர்கள் மிலாடிநபி ஊர்வலத்தையும், இந்துக்கள் விநாயகர் ஊர்வலத்தையும் நிறுத்திக்கொள்ள வேண்டும்; ஆங்காங்கு விழாவாக நடத்திக்கொள்ளுங்கள், ஊர்வலம் வேண்டாம் என்று வேண்டுகோள் வைத்தார். இஸ்லாமியர்கள் அப்போதே ஊர்வலம் நடத்துவதை கைவிட்டு விட்டார்கள்; அந்த ஆண்டிலிருந்து அவர்கள் நடத்துவதில்லை. ஆனால் விடாப்பிடியாக இந்துக்கள் நடத்துகிறார்கள். மக்களுக்கான கோரிக்கையை முன்வைக்கும் இயக்கங்களுக்குக் கூட ஊர்வலம் நடத்த பெரும் கட்டுப்பாடுகளை அரசு விதிக்கிறது; உயர்நீதி மன்றத்திற்கு போய் அனுமதி வாங்க வேண்டியிருக்கிறது. அதுவும் ஆள்நடமாட்டம் இல்லாத கூவம் ஓரத்தில் கொடுக்கப்படுகிறது. ஆனால் விநாயகர் சதுர்த்தியைப் பாருங்கள்; பக்தர்கள் எடுக்கும் ஊர்வலமாக அதற்கு அனுமதி அளிப்பதில்லை. ஒரு நாளைக்கு இந்து முன்னணிக்கான அனுமதி, ஒரு நாள் இந்து மக்கள் கட்சிக்கான அனுமதி என்றுதான் அனுமதி கொடுக்கிறார்கள். ஆக, இந்து முன்னணி என்ற அரசியல் அமைப்பிற்கு, இந்து மக்கள் கட்சி என்ற அரசியல் அமைப்பிற்கு அனுமதி கொடுக்கிறார்கள் என்பதை இதில் பார்க்கவேண்டும். ஆக இந்த அரசு உயர் மட்டத்தில் அமர்ந்திருப்பவர்களுக்கு பகுத்தறிவு பற்றியோ, மதச் சார்பின்மை பற்றியோ போதிய சிந்தனை இல்லாதவர்களாக இப்போது ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் இருக்கிறார்கள். இரண்டாவது காவல் துறையிலும், ஆட்சித் துறையிலும் மாவட்ட அளவில் அதிகாரிகளாக வருபவர்கள் தமிழ்நாட்டின் மண்ணின் மனப்பான்மையை அறியாத வடநாட்டைச் சார்ந்தவர்கள் வந்து பெருமளவில் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த மண்ணின் பண்பாடு என்ன, தொடர்ச்சியான வரலாறு என்ன என்று எதுவும் தெரியாமல் எந்த புரிதலும் இல்லாதவர்கள். மூன்றாவதாகப் பார்த்தால் கூட, இந்த விநாயகர் சதுர்த்திக்கு ஆதரவாக செலவுக்கு பணம் கொடுப்பவர்கள் யாரென்றால் வட இந்தியப் பெரும் முதலாளிகள். சமண மதத்தைச் சார்ந்த மார்வாடிகள் ஏன் இந்து மதத்திற்கு செலவு செய்கிறார்கள்? அதற்கு பின்னாலும் ஒரு பொருளியல் சுரண்டல் ஒட்டிக் கொண்டிருக்கிறது.*

**கேள்வி :** *மக்கள் தாமாக முன்வந்து விநாயகர் ஊர்வலத்தை நடத்துவதில்லையா?*

**பதில் :** *நிச்சயம் இல்லை என்பதும், பக்தர்கள் நடத்துவதில்லை என்பதும் தான் உறுதியான குற்றச்சாட்டு. முடியுமென்றால் உங்கள் நிறுவனத்தின் மூலமாக விநாயகர் ஊர்வலத்தை வீடியோ பதிவு செய்து எதையும் எடிட் செய்யாமல் வெளியிட்டுப் பாருங்கள் மக்களுக்கு பக்தர்களைப் பற்றி தெரிந்து கொள்ள அது உதவும். அதில் போகிறவர்களின் நடவடிக்கைகள், ஊர்வலங்களில் நடத்துகின்ற ஆபாசமான கூத்துகளை எல்லாம் பார்த்தால், அது பக்தர்கள் எடுப்பதா, ஏதோ விளையாட்டுப் போக்காக கிடைக்கிற வாய்ப்பை, அவர்கள் கொடுக்கிற மதுபானத்தை அருந்திவிட்டு ஆட்டம் ஆடுவதா என்பதை மக்கள் பார்த்தால் தெரிந்துவிடும். நாங்கள் இந்த முறை இதை வீடியோ எடுப்பதற்கான இடமும் பாதுகாப்பும் கேட்டிருந்தோம்; ஆனால் எடுக்க முடியவில்லை. அதை வீடியோ எடுத்தாலே இது பக்தர்கள் எடுக்கும் ஊர்வலம் அல்ல என்பது தெரிந்து விடும். அது பக்தர்கள் நடத்துவதல்ல; அரசியல் கட்சிகள் நடத்துகின்றன. இரண்டாவது ஊர்வலத்தில் போவது பக்தர்கள் அல்ல; மன எழுச்சிக்காக குதூகலத்திற்காகத்தான் விவரம் புரியாத இளைஞர்கள் போகிறார்கள், பக்திக்காக அல்ல என்பது தான் உண்மை.*

*(தொடரும்)*

**"புரட்சிப் பெரியார் முழக்கம்"**

**ஆண்டுக்கட்டணம்**

**ரூ.200**

தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535

DATE OF PUBLICATION 12.11.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# சென்னையில் இரயில்வே தேர்வாணையம் முற்றுகை: கழகத் தோழர்கள் கைது!




சென்னை எழும்பூரிலுள்ள தெற்கு இரயில்வே தேர்வாணையப் பிரிவு அலுவலகத்தை திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் 6.11.2011 அன்று பகல் 11 மணியளவில் முற்றுகையிட்டு, "தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட இளைஞர்கள் முதுகில் குத்தாதே; நிராகரிக்கப்பட்ட 3 இலட்சம் இளைஞர்களின் விண்ணப்பங்களை மறுபரிசீலனை செய்! தேர்வு எழுத அனுமதி; வேலை வாய்ப்புக்கு மறுப்பு; வேலை கேட்டு விண்ணப்பம் போடவும் மறுப்பா?" என்ற முழக்கங்களை எழுப்பினர். அலுவலகத்தில் பணியாற்றும் ஊழியர்கள், அதிகாரிகள் வெளியே வந்து முற்றுகைப் போராட்டத்தை நேரில் பார்த்தனர்.

போராட்டம் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையிலும், மாவட்ட செயலாளர் உமாபதி முன்னிலையிலும் நடந்தது. 5450 வேலை வாய்ப்புகளுக்கு தெற்கு இரயில்வே தேர்வு வாரியம், தேர்வுகளை நடத்த அறிவிப்பு வெளியிட்டிருந்தது. இதில் தமிழ்நாட்டிலிருந்து விண்ணப்பித்த 3 இலட்சம் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட இளைஞர்களின் விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. சான்றொப்பம் இல்லை (Attestation) என்று காரணம் கூறப்பட்டுள்ளது. 'சுய சான்று' மட்டுமே போதும் என்று ஏற்கெனவே மத்திய அரசு அறிவித்ததை நம்பி, விண்ணப்பித்த இந்த இளைஞர்கள் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. ஏனைய இரயில்வே வாரியங்கள் சான்றொப்பம் இல்லாத மனுக்களை ஏற்றுள்ளன. இந்த அநீதியை சுட்டிக்காட்டி இந்த முற்றுகைப் போராட்டம் நடந்தது. 60 கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டு, மாலையில் விடுதலை செய்யப்பட்டனர்.

## திருச்செங்கோடு தோழர்கள், ஆர்.எஸ்.எஸ். மிரட்டலை முறியடித்தனர்

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு நகரின் மய்யப் பகுதியில் அமைந்துள்ள அரசினர்பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாக சுற்றுச் சுவரில் தந்தை பெரியார் படம் வரையக் கூடாது என்ற ஆர்.எஸ்.எஸ். மற்றும் ஜாதி வெறியர்களின் மிரட்டல்களை தொடர்ந்து எதிர்த்துப் போராடி வந்த நிலையில் 7.11.2014 அன்று அந்த சுவரில் அய்யா படம் வெற்றிகரமாக வரைந்து முடிக்கப்பட்டது.

கழகத் தோழர்களின் தொடர் முயற்சியால் இந்த வெற்றி கிட்டியதை தெரியப்படுத்துகிறோம்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

சமூக அவலங்களைப் புரிந்து கொள்ளாமல் இருப்பதற்கான காரணங்களில் ஒன்று - அவர்கள் எண்ணிக்கைப் பற்றி அறியாமல் இருப்பதுதான் என்று புரட்சியாளர் அம்பேத்கர் கூறுகிறார். 'சூத்திரர்கள் யார்?' (1946) என்ற நூலில் அம்பேத்கர் கூறுகிறார்:

> "சூத்திரர்களின் பிரச்சினையின் ஆழம் குறித்து மக்கள் சரிவர உணராமல் போனதற்குக் காரணம் சூத்திரர்களின் மக்கள் தொகை எண்ணிக்கைக் குறித்து அவர்கள் அறிந்திடாமல் இருப்பதே ஆகும். கெட்ட வாய்ப்பாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பும் அவர்களின் கணக்கை தனியாக எடுக்கவும் இல்லை" - என்கிறார்.

பிற்படுத்தப்பட்ட பிரிவில் அதிக எண்ணிக்கைக் கொண்ட ஜாதிக்குழுவினர், தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட, இந்தக் கணக்கெடுப்பு பயன்படும் என்று இவர் வாதிடுவதில் நியாயமில்லை. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றுள்ள எத்தனையோ ஜாதிப் பிரிவினர், அரசியல், பதவி, கல்வியில் முழுமையாக வாய்ப்பு மறுக்கப்பட்டவர்களாக, ஏன், ஒரு பஞ்சாயத்து உறுப்பினராகக்கூட வர முடியாத நிலையில் கிடப்பதை இவர்கள் ஏன் மறந்து விட்டு பேசுகிறார்கள்? (இது குறித்து, திராவிடர் விடுதலைக் கழகம் நிறைவேற்றிய தீர்மானத்தை வேறு இடத்தில் வெளியிட்டிருக்கிறோம்.)

"ஜாதிவாரியான கணக்கீடு வேண்டாம்" என்று எழுகிற எதிர்ப்புக் குரலுக்குள் ஜாதியப் பார்வையே அடங்கியிருக்கிறது. அதே நேரத்தில் ஜாதி ஒழிப்புக்கான முதல்படி ஜாதிகளுக்கிடையிலான சமத்துவம் என்ற பார்வை கொண்டோர், ஜாதியடிப்படையிலான இடஒதுக்கீட்டை வலியுறுத்துகிறார்கள். இதுதான் உண்மை!

எனவே, மோடி ஆட்சி சட்டத்தைத் திருத்தி இந்தச் சமூக நீதி கோரிக்கையை செயல்படுத்த வேண்டும்; அதற்காக ஒடுக்கப்பட்ட மக்கள் போராட வேண்டும்.

# 5 மீனவர்கள் தூக்குத் தண்டனை: மேட்டூரில் கழகம் ஆர்ப்பாட்டம்




திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 6.11.2014 மாலை 4 மணிக்கு மேட்டூர் பேருந்து நிலையம் முன்பு தமிழக மீனவர்கள் 5 பேருக்கு தூக்குத் தண்டனை வழங்கிய இலங்கை அரசை கண்டித்தும், இந்திய அரசின் தெற்கு இரயில்வே தேர்வு துறையால் 3 இலட்சம் தமிழக விண்ணப்பத்தாரர்களை நிராகரித்ததைக் கண்டித்தும் மாவட்ட செயலாளர் சி.கோவிந்தராஜ் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் இலங்கை அரசைக் கண்டித்தும் இந்திய மத்திய அரசை கண்டித்தும் கண்டன முழக்கம் எழுப்பப்பட்டது. தோழர்கள் டைகர் பாலன், அ.சக்திகுமார் ஆகியோர் கண்டன உரையாற்றினர். மேட்டூர் நகர கழகச் செயலாளர் சம்பத் நன்றி கூறினார்.

## மதுரை மருத்துவர் சவுந்திரபாண்டியன் நடத்தும் இலவச மருத்துவ முகாம்கள்

மதுரை, தோல் நோய் மருத்துவரும் பெரியாரியல்வாதியுமான டாக்டர் சவுந்தர பாண்டியன், இலவச தோல் நோய் மருத்துவ முகாம்களை நடத்தி வருகிறார். கடந்த அக்.30 - குமரி மாவட்டம் மார்த்தாண்டத்தில் நான்கு முகாம்களையும், நவம்பர் 2 - திருத்தங்கலில் நான்கு முகாம்களையும் நடத்தி தோல் தொடர்பான வியாதிகளுக்கு சிகிச்சையும் இலவசமாக மருந்துகளையும் வழங்கினார்.

## 'சமூக நீதி'யை உரத்து முழங்கும் ஏடு 'புரட்சிப் பெரியார் முழக்கம்'!




எந்த ஒரு அரசியல் கட்சியையும் சார்ந்து நிற்கும் அவசியமின்றி சமூகநீதியை உரத்து முழங்குகிறது, 'புரட்சிப் பெரியார் முழக்கம்'!

இது, கழக ஏட்டைப் படித்து வரும், கழகத்துக்கு அப்பாற்பட்ட பலரும் தெரிவிக்கும் பொதுவான கருத்து.

பெரியாருக்கு எதிரான திரிபு வாதங்கள், எந்த முகாமிலிருந்து வந்தாலும், அதற்கு பதிலடியைத் தருவதில் முந்திக் கொண்டு நிற்கும் ஏடு, 'புரட்சிப் பெரியார் முழக்கம்'.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் களச் செயல்பாடுகளை பதிவு செய்து வரும் இந்த ஏட்டின் வளர்ச்சி, கழகத்தின் வளர்ச்சியோடு பிணைந்து நிற்கிறது என்பதை சொல்லவும் வேண்டுமோ!

தோழர்களே! 'புரட்சிப் பெரியார் முழக்க'த்துக்கு உறுப்பினர்கள் சேர்க்கும் இயக்கத்தை தீவிரப்படுத்துங்கள்!

இது கழகத்தின் களப்பணி என்பதை நெஞ்சில் நிறுத்துங்கள்!

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 13th November 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | நவம்பர் 20, 2014 | புரட்சி 13 | முழக்கம் 45 | விலை: ரூ.3.00

# உள்ளூர் ஆதிக்க ஜாதி காவல்துறை அதிகாரிகளை பணி இடமாற்றம் செய்க!

# மதுரையில் கழகம் ஆர்ப்பாட்டம்

உசிலம்பட்டி விமலா தேவியை கொலை செய்தவர்கள் – உடந்தையாக இருந்த காவல்துறையினரைக் கைது செய்யக் கோரி, மதுரையில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருச்சியில் 26 அக்டோபர் 2014ல் நடைபெற்ற திராவிடர் விடுதலைக் கழக செயலவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், உசிலம்பட்டி விமலாதேவியின் கவுரவக்கொலையை கண்டித்தும், திருமண விவகார தலையீட்டு தடுப்பு சட்டத்தை தமிழக அரசு உடனடியாக நிறைவேற்றக் கோரியும், மதுரை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 11.11.2014 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் திருவள்ளுவர் சிலை எதிரில் திராவிடர் விடுதலைக்கழக தலைவர் தோழர் கொளத்தூர் மணி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தின் துவக்கத்தில், சென்னை அருள்தாஸ், சென்னை நாத்திகன் ஆகியோர் ஜாதி மறுப்பு பாடல்களை பாடினர். பின்பு கோரிக்கைகளை வலியுறுத்தி, திராவிடர் விடுதலைக் கழக தலைமைக் குழு உறுப்பினர் கோபி.இராம இளங்கோவன், மே 17 இயக்க பொறுப்பாளர் கார்த்திகேயன், தமிழ் தமிழர் இயக்க பொறுப்பாளர் பரிதி, திராவிடர் விடுதலைக் கழக மதுரை தோழர் மாப்பிள்ளை சாமி, கழக வழக்கறிஞர் துரை அருண், தமிழக மக்கள் புரட்சிக் கழக பொதுச்செயலாளர் அரங்க குணசேகரன், தமிழ்நாடு மக்கள் கட்சி தலைவர் மீ.த.பாண்டியன், பொறியாளர் மதுரை தளபதி, மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பகவத்சிங் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை வகித்து திராவிடர் விடுதலைக் கழக தலைவர் கொளத்தூர் இறுதியாக உரையாற்றினார். அவர் தனது உரையில்,

உசிலம்பட்டி விமலாதேவியின் கௌரவக் கொலையில் தொடர்புடைய குற்றவாளிகளையும், அக்கொலைக்கு உடந்தையாக இருந்த காவல்துறை அதிகாரிகளையும், தீண்டாமை வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் தமிழக அரசு உடனடியாக கைது செய்யவேண்டும். மேலும், மத்திய சட்ட ஆணையம் 2012ல் வடிவமைத்து கொடுத்திருக்கின்ற திருமண விவகார தலையீட்டு தடுப்பு சட்டத்தை தமிழக அரசு கால தாமதம் செய்யாமல் உடனடியாக அமல்படுத்தவேண்டும். அதோடு தமிழகம் முழுவதும் காவல்துறையில் பணியாற்றுகின்ற ஆதிக்க ஜாதியை சார்ந்த காவல்துறை அதிகாரிகளை உடனடியாக வெவ்வேறு பகுதிகளுக்கு பணியிட மாற்றம் செய்யவேண்டும். இந்த காரணத்தை கொண்டு ஒடுக்கப்பட்ட சமுதாயத்தை சார்ந்த காவல்துறை அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்யாமல் அந்த அந்த பகுதிகளில் பணியாற்ற அனுமதிக்க வேண்டுமென கூறி உரையாற்றினார்.

கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்று கொண்டிருக்கும் போது உசிலம்பட்டி விமலாதேவி கொலை வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் அந்த வழக்கை சிபிஐக்கு மாற்றியும், கொலை வழக்கில் சரியாக



விசாரணை செய்யாத உசிலம்பட்டி காவல் ஆய்வாளருக்கு ரூ. 25 ஆயிரம் அபராதம் விதித்தும் பிறப்பித்த உத்தரவு செய்தி வந்தது. இதனை கழக தலைவர் கொளத்தூர் மணி, தோழர்களின் பலத்த கரவொலிக்கு இடையே அறிவித்தார்.

கண்டன ஆர்பாட்டத்தின் முன்னேற்பாடுகளை ஆர்ப்பாட்ட ஒருங்கிணைப்பாளர் தலைமைக்குழு உறுப்பினர் தூத்துக்குடி பால்பிரபாகரன் தலைமையில், தலைமைக்குழு உறுப்பினர்கள் ஈரோடு ரத்தினசாமி, திருப்பூர் துரைசாமி, திருவாரூர் மாவட்ட செயலாளர் இரா.காளிதாசு, மேலூர் மா.பா.மணிகண்டன், மதுரை மாப்பிள்ளை சாமி இவர்களுடன் பொறியாளர் தளபதி ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். ஆர்ப்பாட்ட முடிவில் மதுரை மாவட்ட செயலாளர் பாண்டியன் நன்றி கூறினார். தமிழகம் முழுதுமிருந்தும் தோழர்கள் திரண்டு வந்திருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற அனைத்து தோழர் களுக்கும் ஆர்ப்பாட்ட முன்னேற்பாடு குழுவினர் மதிய உணவு சிறந்த முறையில் செய்திருந்தனர். ஆர்பாட்டத்தையொட்டி மதுரை மாநகர் முழுவதும், வண்ண சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. கண்டன ஆர்ப்பாட்டத்தின் நோக்கங்களை விளக்கி இருநாட்கள் மதுரை மாநகர் முழுவதும் கழக தோழர்கள் பொதுமக்களிடம் துண்டறிக்கைகள் விநியோகித்து பிரச்சாரம் செய்தனர்.

**செய்தி : மன்னை காளிதாஸ்**

## வினாக்கள்... விடைகள்...!

✦ 10 வேதகால அரசர்கள் பற்றி ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நூலை நடிகர் கமலஹாசன் வெளியிட்டார். **– செய்தி**

ஏனய்யா, நீச பாஷையில் எழுதினீர்? சமஸ்கிருதத்திலேயே எழுதியிருந்தா, விற்பனை இலட்சக்கணக்கில் பிச்சுண்டு போயிருக்கு மோன்னா...

✦ அடிப்படையில் தமிழ்ச் சமுதாயம் பெண்மையைப் போற்றும் சமுதாயமாகும். **– மருத்துவர் இராமதாசு**

உண்மை! உண்மை! யாருக்காவது சந்தேகமிருந்தால் தர்மபுரி திவ்யாவைக் கேட்டு தெளிவு பெறலாம்!

✦ வண்டலூர் பூங்காவிலிருந்து புலி தப்பியது. கிராம மக்கள் பீதி. **– செய்தி**

பயப்படாதீங்க! தமிழ்நாட்டில் புலி பயங்கரவாதம் தலைதூக்கிடுச்சின்னு சுப்பிரமணியசாமி நீதி மன்றத்தில் வழக்குப் போட்டு காப்பாத்திடுவார்!

✦ தமிழ்நாட்டில் 1442 அரசு மகளிர் பள்ளிக்கூடங்களிலும், 4278 ஆண்கள் பள்ளிக்கூடங்களிலும் கழிப்பறைகளே இல்லை. **– உயர்நீதிமன்றம்**

எத்தனையோ ஆயிரம் பிளாட்பாரங்கள் கோயிலே இல்லாமல் இருக்கு; பெருசா பேச வந்துட்டாங்க!

✦ ‘முத்த’க் கலாச்சாரத்தைக் கண்டித்து ‘எச்சில் துப்பும்’ போராட்டம் நடத்திய இந்து முன்னணியினர் கைது. **– செய்தி**

‘எச்சில் துப்பும்’ கலாச்சாரத்தைவிட முத்தக் கலாச்சாரம் எவ்வளவோ மேலானது!

✦ அயோத்தியில் ‘இராமன்’ கோயில் கட்ட பிரதமர் மோடி ஏற்பாடு செய்ய வேண்டும். **– உ.பி. ஆளுநர் ராம் நாயக்**

இவுக எல்லாம் ‘இராமன்’ ஆண்ட கலியுகத்துலேயே கவர்னர் பதவிக்கு வந்திருக்க வேண்டியவக! அறிவாளிக!

✦ காஷ்மீரில் 3 அப்பாவி இளைஞர்களை தீவிர வாதிகள் என்று கூறி போலி என்கவுண்டர் நடத்திய 7 இராணுவத்தினருக்கு ஆயுள் தண்டனை. **– செய்தி**

மகிழ்ச்சி; ஆயுள் தண்டனையும் போலியாகிடாம கவனிச்சுகுங்க...

தலையங்கம்

## மோடியின் பார்ப்பன ஆட்சி

மோடியின் அமைச்சரவை பார்ப்பனர்களின் ஆதிக்கத்தில் நிரம்பி வழிகிறது. முக்கிய துறைகளின் பொறுப்பை திறம்பட நிர்வகிக்கும் ஆற்றல், பார்ப்பனர்களுக்கு மட்டுமே உண்டு என்று மோடி முடிவுக்கு வந்துவிட்டார் போலும்! 21 புதிய அமைச்சர்கள் நியமனத்துக்குப் பிறகு அமைச்சரவையின் எண்ணிக்கை 66 ஆக உயர்ந்துள்ளது. பிரதமர் நரேந்திரமோடி பிற்படுத்தப்பட்டவர் என்று சொல்லப்பட்டாலும் அவர் பிறந்த 'வைசிய' சமூகம் முன்னேறிய ஜாதிப் பிரிவிலிருந்து பிறகுதான் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டது. அடுத்த நிலையில் உள்ள உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், 'இராஜபுத்திர' முன்னேறிய சமூகத்தைச் சார்ந்தவர். இவர்களைத் தவிர முக்கியப் பொறுப்புகளின் அதிகாரம் பார்ப்பனர்களுக்கே 'தாரை' வார்க்கப்பட்டுள்ளது. ஆர்.எஸ்.எஸ். அமைப்பு, 'பார்ப்பனர்–வைசியா–இராஜபுத்திரர்' என்ற சமூக மேலாதிக்கக் குழுவினரின் கட்டுப்பாட்டில் அவர்கள் நலனையே பிரதிபலிக்கக்கூடிய அமைப்புதான். அதுவே அமைச்சரவையிலும் எதிரொலிக்கிறது.

வெளிநாட்டுத் துறை அமைச்சராக உள்ள சுஷ்மா சுவராஜ், நிதித்துறை அமைச்சர் அருண்ஜெட்லி, கப்பல் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்காரி, சிறு,குறு மற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சர் கல்ராஜ் மிஸ்ரா, இரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் அனந்த் குமார், பாதுகாப்புத் துறை அமைச்சர் மனோகர் பாரிக்கர், தொடர்வண்டித் துறை அமைச்சர் சுரேஷ் பாபு, சுகாதாரத் துறை அமைச்சர் ஜெ.பி. நட்டா ஆகிய அனைவரும் 'கேபினட்' பொறுப்புள்ள பார்ப்பன அமைச்சர்கள். 26 காபினட் அமைச்சர்களில் 30 சதவீதம் பார்ப்பனர்களிடம்! அத்தனையும் முக்கிய துறைகள்!

இது தவிர மகாராஷ்டிர மாநில முதல்வர் ஆர்.எஸ்.எஸ்.சில் பயிற்சிப் பெற்ற தேவேந்திர பட்நாவிஸ் ஒரு பார்ப்பனர். இதற்கு முன் இவ்வளவு எண்ணிக்கையில் மத்திய அமைச்சரவையில் பார்ப்பனர்கள் இடம் பெற்றது இல்லை. இது தவிர, பிரதமர் அலுவலகம், பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர், பொருளாதார ஆலோசகர், ரிசர்வ் வங்கி ஆளுநர் என ஆட்சி நிர்வாகமே 'அவாளின்' பிடியில்தான்! எப்படி மராட்டியத்தில் 'சிவாஜி' என்ற பார்ப்பனரல்லாத மன்னருக்கு முடிசூட்டிவிட்டு பார்ப்பனர்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி இருந்தார்களோ, அதே வரலாறுதான் மோடியின் ஆட்சியிலும் திரும்பியுள்ளது.

அமைச்சரவையின் விரிவாக்கத்தில் இடம்பெற்ற 4 கேபினட் அமைச்சர்களில் 3 பார்ப்பனர் இடம் பெற்றவுடன் இராஜ்தீப் சர்தேசாய் எனும் பிரபலமான பார்ப்பன பத்திரிகை ஆசிரியர் "சரஸ்வதி பிராமணர்களுக்கு – இது வரலாற்றில் ஒரு சிறந்த நாள்" என்று ஆனந்தக் கூத்தாடி முக நூலில் எழுதினார்.

சுப்பிரமணியசாமி இன்னும் வெளிப்படையாகவே பேசியிருக்கிறார். "வரலாற்றில் ராஜாக்களுக்கு பிராமணர்கள்தான் ஆலோசகர்களாக இருந்தனர். இப்போது மோடி எனும் ராஜாவுக்கும் நான் ஆலோசகராக இருக்கிறேன். இதையும் தாண்டி, எனக்கு அமைச்சர் பதவி எதற்கு?" – இது ஏடுகளிலும் வெளிவந்திருக்கிறது.


இதையெல்லாம் கண்டு கொள்ளாத பார்ப்பன ஊடகங்கள், பீகார் முதல்வர் ஜித்தன் ராம்மஞ்சி, "இந்தியாவில் அதிகாரத்தில் இருப்பவர்கள் ஆரியர்கள்; அவர்கள் வேறு நாட்டிலிருந்து வந்தவர்கள்; பட்டியலின மக்களும் பழங்குடியினரும் தான் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள்" என்று பேசியதற்கு கூப்பாடு போடுகிறார்கள்.

"பெரும்பான்மை சூத்திரர்கள்" ஓட்டுகளை வாங்கி, "சிறுபான்மை பிராமணர்கள்" ஆட்சிக் கடிவாளத்தைக் கையில் எடுத்துக் கொண்டு விட்ட பிறகு, பார்ப்பனர் என்ற சொல்ல உச்சரிப்பதற்குக்கூட இன்று பார்ப்பனரல்லாத கட்சிகளின் தலைவர்கள் தயங்குகிறார்கள்.

இந்த நிலையில் பீகார் முதல்வர் துணிவாகவே பேசியிருப்பதை பாராட்ட வேண்டும்.

ஜனநாயகம் பார்ப்பன நாயகமாகிவிடும் என்று 90 ஆண்டுகளுக்கு முன் பெரியார் சுட்டிக் காட்டினார். அதே நிலைதான் இப்போதும்! பார்ப்பன எதிர்ப்பு இயக்கம் வீரியம் பெற்றாக வேண்டாமா?

# பாண்டியன் விடைபெற்றுக் கொண்டார்!



திராவிடர் இயக்கத்தின் ஆய்வாளர் என்பது மட்டுமல்ல; அந்த இயக்கத்தின் தேவையையும் அந்த இயக்கம் தமிழகத்தில் உருவாக்கிய வரலாற்றுத் திருப்பத்தையும் ஆழமாக உணர்ந்தவர் எம்.எஸ்.எஸ்.பாண்டியன். ஆங்கில அறிவுலகில், திராவிடர் இயக்கத்தின் சமூகப் பார்வையை அதற்கான மொழிகளின் ஊடாக முன்வைத்தவர். இது அவருக்கே உரித்தான தனித்துவம். இந்த இடத்தை இட்டு நிரப்பக் கூடிய ஒருவர், அவருக்கு நிகராக இல்லை என்பதே அவர் விட்டுச் சென்றுள்ள வெற்றிடம்.

பொருளாதார - சமூகவியல் துறைகளில் மிகச் சிறந்த பேராசிரியர்; உலகநாடுகளின் பல பல்கலைக் கழகங்களில் கவுரவப் பேராசிரியர்; மிரள வைக்கும் ஆங்கில எழுத்து வன்மை; உறுதியான பார்ப்பன எதிர்ப்பாளர்; இம்மியளவும் சமரசத்துக்கு இடமில்லாமல் இறுதி வரை வாழ்ந்தவர். தனது ஆழமான புரிதலை - சிந்தனையை ஆங்கில புலமையை-தன்னுடைய அடையாளமாக்கிடவோ அதை வெளிப்படுத்தும் அரிதாரப் பூச்சுகளையோ முழுமையாக வெறுத்து ஒதுக்கியவர் அவர்.

உணர்ச்சியும் துடிப்பும் மிக்க உரையாடல்களுடன் சக மனிதர்களை நேசித்து, விளிம்பு நிலை மானுடனாகவே வாழ்ந்து காட்டியவர். ஜாதி எதிர்ப்பு, பகுத்தறிவு, பெண்ணுரிமை கொள்கைகளில் தன்னுடைய உறுதியைப் பற்றி அவர் தம்பட்டம் அடிப்பதே இல்லை. தனது வாழ்க்கையில் இயல்பாக செயல்படுத்திக் காட்டினார். அவர் வளர்ந்து ஊக்கப்படுத்திய மாணவர்களின் சமூகப் பின்னணியும் குடும்பத்தில் பின்பற்றிய 'ஜனநாயக' முறையுமே இதற்கு சான்றுகள்.

நாங்கள், 1996 ஆம் ஆண்டில் திராவிடர் கழகத்திலிருந்து வெளியேறி, தோழர்களுடன் பெரியார் திராவிடர் கழகத்தைத் தொடங்கிய போது, பாண்டியன், எனக்கும் கழகத்துக்கும் மிகப் பெரும் துணையாக நின்றார். தலித் மக்களுக்கான உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய அவசியம் குறித்து அவர் வலியுறுத்தினார். தலைநகரில் பல்வேறு தலித் அமைப்புகளையும் மனித உரிமை அமைப்புகளையும் ஒன்று திரட்டி, 'சமூக நீதி மீட்பு' இயக்கம் ஒன்றை உருவாக்கி, அய்.அய்.டி.யின் தலித் விரோதப் போக்கை எதிர்த்து, தொடர்ந்து போராடிய காலத்தில் பாண்டியன் அதற்கு உறுதியோடு துணை நின்றார். இந்த திசையில் எங்களுக்கு புதிய வெளிச்சத்தைக் காட்டியவர் பாண்டியன். 'எக்னாமிக்கல் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி' ஏட்டில், அய்.அய்.டி.யின் பார்ப்பன ஆதிக்கத்தையும் அதற்கு எதிராக நடந்த போராட்டத்தையும் எழுதி, இந்தியா முழுதும் கவனத்தை ஈர்க்கச் செய்தார். அதற்காக அதிகார வலிமை கொண்ட பார்ப்பனர்களிடமிருந்து கடுமையான எதிர்வினைகளை அவர் சந்தித்தார். அதற்காக அசைந்து கொடுக்கவில்லை.

டெல்லி 'இராமலீலா' மைதானத்தில் 'இராவணன்' உருவத்தை எரிக்கும் 'இராமலீலா'. திராவிடர்களை இழிவுபடுத்துவதை சுட்டிக் காட்டி பெரியார் திராவிடர் கழகம் - 'இராமன்' உருவத்தை எரிக்கும் 'இராவண லீலா'வை நடத்தியபோது இந்தப் போராட்டத்தையும். திராவிடர் இயக்கத்தின் இராமாயண எதிர்ப்பு மரபையும், அதன் சமூக வரலாற்றுப் பின்னணிகளோடு விளக்கி, 'அவுட் லுக்' இதழில் விரிவான கட்டுரையை எழுதினார். பெரியாரை தமிழர்களின் விரோதிகளாக சித்தரித்து 'குணா' போன்றவர்கள் நூல் எழுதியபோது, அதற்கு மறுப்பாக 'விடுதலை'யில் நான் எழுதிய மறுப்புக் கட்டுரைக்காக விவாதிக்கவும் விளக்கங்களைப் பெறவும் எனக்கு உதவியவர்கள் இருவர். ஒருவர் எம்.எஸ்.எஸ். பாண்டியன், மற்றொருவர் பேராசிரியர் எஸ்.ஏ. வீரபாண்டியன். அந்த நூலுக்கு எம்.எஸ்.எஸ். பாண்டியன்தான் அணிந்துரையும் வழங்கினார்.

பெரியார்திராவிடர் கழகம், அதற்குப் பிறகு திராவிடர் விடுதலைக் கழகச் செயல்பாடுகளையும் உன்னிப்பாக கவனித்து வந்தார். 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழ்களை இணையம் வழியாக படித்து, அவ்வப்போது கருத்துகளைப் பரிமாறிக் கொள்வார். ஈரோட்டில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய மனுசாஸ்திர எதிர்ப்பு மாநாடு, ஜாதி வெறி சக்திகளுக்கு எதிராக நடத்திய பேரணி குறித்து 'எக்னாமிக்கல் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி'யில் எழுதினார். ஆங்கில இதழ்களில் அவர் எழுதிய கட்டுரைத் தொகுப்புகள் நூலாக வெளி வர இருப்பதை என்னுடன் பகிர்ந்து கொண்டபோது, இந்த நூலை கொளத்தூர் மணிக்கும், உங்களுக்கும், காணிக்கையாக்கப் போகிறேன் என்றார். 'எதற்கு பாண்டியன், இந்த சடங்கு?' என்று நான் கேட்டபோது, "உங்களுக்கு தகவல் கூறினேன்; கருத்து கேட்க வில்லை" என்று உரிமையோடு கடிந்து கொண்டார்.

கடைசியாக நான் அவரிடம் அக்டோபர் 9 ஆம் தேதி தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினேன். அன்றைய 'இந்து' நாளேட்டில் வெளிவந்த 'எதிர்ப்புகள் இல்லாத அரசியல்' என்ற இந்துத்துவ அரசியலின் 'காய் நகர்த்தும்' அணுகுமுறை பற்றிய கட்டுரை அது. பாண்டியனிடம் இது குறித்து விளக்கம் பெற வேண்டும் என்று எனக்கு தோன்றியது. தொலைபேசியில் அதிக நேரம் பேசாத பழக்கம் உள்ள அவர், அன்று அதிகமாகவே பேசினார். டெல்லிக்கு வருமாறு என்னை அழைத்தார். தனது மகள் பிரீத்தி, ஜாதி-மதங்களில் நம்பிக்கை இல்லாத பெண்ணாக வளருவதாகவும், தான் எந்தக் கருத்தையும் அவரிடம் திணிப்பதில்லை என்றும் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டார்.

பாண்டியனின் துணைவியார் முனைவர் ஆனந்தி, பெண்ணுரிமை குறித்து எழுதிய ஆழமான ஆங்கில ஆய்வை நான் தமிழாக்கி, 'விடுதலை'யில் வெளியிட்டேன். அப்போது முனைவர் ஆனந்தி, இலண்டனில் இருந்தார். பாரீஸ் பல்கலைக்கழகத்துக்கு விரிவுரையாற்றச் சென்ற பாண்டியன், அந்தத் தொகுப்பை எடுத்துப் போய் இலண்டனில் முனைவர் ஆனந்தியிடம் தந்து, அங்கிருந்து என்னுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார். அது பிறகு 'அய்விட்' எனும் நிறுவனத்தால் நூலாகவும் வெளியிடப்பட்டது.

'எம்.அய்.டி.எஸ்.' நிறுவனத்தின் பார்ப்பன மேலாதிக்கம், அவரது திறமையை அங்கீகரிக்க மறுத்தபோது, பதவியை தூக்கி எறிந்துவிட்டு வெளியேறியவர் பாண்டியன். அதற்குப் பிறகு சர்வதேச நாடுகளின் பல்கலைக்கழகங்கள் அவரை போட்டி போட்டுக் கொண்டு அழைத்தன.

ஜவகர்லால் நேரு பல்கலையில் மிகப் பெரும் 'அறிவுஜீவிகள்' கூடிய அரங்கத்திலும்கூட அவரது கோட்பாட்டுரீதியான பார்ப்பன எதிர்ப்பு கருத்துகள் அரங்கை அதிர வைத்து விடும் என்று அவரது மாணவர்கள் பெருமையுடன் கூறுவார்கள். அடையாறில் உள்ள 'எம்.அய்.டி.எஸ்.' நிறுவனத்துக்கு ஒரு மிதிவண்டியில் தான் அவரது திருவான்மியூர் இல்லத்திலிருந்து நாள்தோறும் சென்று வருவார். இறுதி வரை மிதிவண்டிதான் அவரது வாகனமாக இருந்தது. இளம் பேராசிரியராக இருந்த காலத்திலும் திருமணத்துக்கு முன், முனைவர் ஆனந்தியுடன் 'நட்பு-காதலாக' அவர் வாழ்ந்த காலத்திலும், திருமணத்துக்குப் பிறகும் அவருடன் தொடர்ந்து குடும்பங்களின் உறவுகளாக எங்களது தோழமை தொடர்ந்தது. 2009க்குப் பிறகு அவர் டெல்லிக்குச் சென்ற பிறகு அவ்வப்போது அலைபேசியில் பேசுவதோடு சரி; நேரில் சந்திப்பு மிகவும் குறைந்து விட்டது. ஆனாலும், எனது நினைவுகளில் அழுத்தமான பதிவுகளுடனே அவர் எப்போதுமே ஆக்கிரமித்துக் கொண்டே இருந்தார்.

சில மணி நேரங்களிலேயே அவரது மரணம் நேர்ந்துவிட்டது. பாண்டியன் மரணமும் அவர் இல்லாமல் போய் விட்டாரே என்ற கவலை அழுத்தமாகவே அவ்வப்போது பாதிக்கிறது. அவரது நினைவுகள் வந்து போய்க் கொண்டே இருக்கின்றன. பாண்டியன் என்னிடம் நேரிலும், தொலைபேசியிலும் பேசும்போது வழமையாக பயன்படுத்தப்படும் அந்த சடங்குச் சொல்லை என்னிடம் உச்சரிக்கவே மாட்டார். அதுதான் "வணக்கம்!" இப்போது பாண்டியனிடம் முதல் முறையாக அதை பயன்படுத்தத் தோன்றுகிறது. "வணக்கம், பாண்டியன்!"

**விடுதலை இராசேந்திரன்**

(குறிப்பு: இயக்க இதழில் தனிப்பட்ட செய்திகள் சிலவற்றை பகிர்ந்து கொள்ள நேரிட்டமைக்காக தோழர்கள் மன்னிக்கவும்)

# கழகத் தலைவர் கொளத்தூர் மணி விளக்கம்:

# திருக்குறளை அச்சிட்டு மக்களிடம் பரப்பியவர் பெரியார்

*‘புதிய தலைமுறை’ தொலைக்காட்சியில் 28-09-2014 அன்று ஒளிபரப்பான ‘அக்னிப் பரீட்சை’ நிகழ்ச்சியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அளித்த பதில்கள். பேட்டி கண்டவர் தலைமை செய்தி யாளர் மு. குணசேகரன். சென்ற இதழ் தொடர்ச்சி.*

**கேள்வி :** பி.ஜே.பி ஆட்சிக்கு வந்த பின்னர் நீங்கள் சொல்லும் குற்றச்சாட்டு, அவர்கள் இந்தியைத் திணிக்கிறார்கள், சமஸ்கிருதத்தைத் திணிக் கிறார்கள் என்று சொல்கிறீர்கள்; இந்தியாவில் பெரும்பாலான மாநிலங்களில் இந்தியைப் பேசுகிறார்கள்; ஆனால் நீங்கள் இந்தி வேண்டாம் ஆங்கிலமே இணைப்பு மொழியாக இருக்கட்டும் என்று சொல்கின்றீர்கள்; இந்திய மொழிகளில் ஒன்றான இந்தியையும், சமஸ்கிருதத்தையும் ஒதுக்கிவிட்டு, நீங்கள் ஆங்கிலத்தை ஆதரிக்கக் காரணம், உங்களிடையே (திராவிட இயக்கங் களிடையே) ஆங்கிலேய அடிமைச் சிந்தனை இருக்கிறது என்று பி.ஜே.பி, ஆர்.எஸ்.எஸ் அமைப்புகள் மீண்டும் குற்றச்சாட்டை வைக்கிறார்கள். உங்களுடைய இந்தி எதிர்ப்பு என்பதே போலியான ஒன்றா?

**பதில் :** பொது மொழி என்பது ஒரு நாட்டிற்கு பல வகைகளில் வைக்கிறார்கள்; இவர்கள் பெரும்பான்மை என்று சொன்னார்கள். பெரும்பான்மை மொழியும் அது அல்ல. ஐம்பது சதவீதத்திற்கு கீழானோர் பேசும் மொழி என்பதால் இது சிறுபான்மை மொழிதான். அதுவும் கரிபோலி, மைதிலி, போஜ்புரி போன்ற பல சிறு மொழிகளையெல்லாம் சேர்த்து தான் இந்தி என்று பெயர் வைத்துக்கொண்டார்கள். அப்படியே வைத்துக்கொண்டாலும் நாற்பது விழுக்காட் டினருக்கான மொழி நாட்டு மொழி ஆகிவிட்டது. மத்திய அரசுத் தேர்வுகளை ஆங்கிலத்திலோ அல்லது இந்தியிலோ எழுதலாம் என்று சொல்லுகின்றார்கள். C SAT என்கிற சிவில் சர்வீஸ் ஆப்டிடியூடு டெஸ்ட் என்பதற்கு ஆங்கிலத் தில் இருபது மதிப்பெண்கள் வைத்திருந்தார்கள். அண்மையில் வட இந்தியாவில் பெரும் போராட்டத்தை நடத்தி அதை வைக்கக் கூடாது என்றார்கள். நாளைக்கு ஐ.எப்.எஸ், ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், அதிகாரிகளாக போகக்கூடியவர்கள் தான் 200க்கு 20 ஆக இருக்கும் மதிப்பெண்களை ஆங்கிலத்தில் கூடாது என்கிறார்கள். அதற்கு கூட அரசு இணங்கி வந்துவிட்டது. சரி, தமிழ் நாட்டைச் சார்ந்த மாணவர் என்ன செய்வார்? ஒன்று ஆங்கிலத்தில் தேர்வு எழுதவேண்டும் அல்லது இந்தியில் எழுத வேண்டும். இருபது மதிபெண்ணுக்கு கூட அன்னிய மொழியில் வேண்டாம் என்ற குரலை ஏற்றுக்கொண்ட அரசு, மீதமுள்ள 180 மதிப்பெண்களையும் அன்னிய மொழியில் எழுதுகிறார்களே தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள் அல்லது இந்தி பேசாத மாநிலத்தைச் சார்ந்தவர்கள்; அவர்களைப் பற்றி அரசு என்ன அக்கறை எடுத்துக்கொண்டது? ஆக இந்தி பேசுபவன் 180 மதிப்பெண்களுக் காவது அவன் மொழியில் எழுதமுடியும்; தமிழ் நாட்டைச் சார்ந்தவர்களோ, இந்தி பேசாத மாநிலத்தைச் சார்ந்தவர்களோ 200 மதிப்பெண் களுக்கும் அன்னிய மொழியில்தான் எழுத வேண்டும். இது இந்தி பேசுபவர்களுக்கு சாதகமாக அமைந்து விடுகிறது. அன்மைக் காலங்களில் மத்திய அரசு பணிகளில் தமிழர்கள் தேர்வாகாமல் தென்னிந்தியர்கள் தேர்வாகாமல் போவதற்கு அதுதான் காரணமாக இருக்கிறது என்பது ஒன்று. இரண்டாவது இதைப் போன்ற சில நாடுகள் சிங்கப்பூரில் முதல் பிரதமாரக இருந்த லீக் குவான் யூ அவர்களிடம் இப்படி ஒரு கேள்வி வந்தது. பொது மொழி ஆக்குகிறபோது அவர் சொன்னார் ‘இங்கு மலாய் பேசுபவர்கள் இருக்கிறார்கள், தமிழ் பேசுபவர்கள் இருக்கிறார்கள், இந்தி பேசுபவர்கள் இருக்கிறார்கள், சீனம் பேசுபவர்கள் இருக் கிறார்கள் எல்லோரும் இருக்கிறார்கள்; இதில் ஏதாவது ஒரு மொழியை பொது மொழியாக வைத்தால் அந்த மொழிக் காரருக்கு சாதகமாகப் போய்விடும் எனவே இது எதுவும் அல்லாத ஆங்கிலத்தை, Equal disadvantage என, வைக்கின்றேன் என்று சொன்னார். அது எல்லோருக்கும் அன்னிய மொழி ஒன்றும் சிக்கல் இல்லை என்று அவர் அப்படி வைத்தார். சீனர்கள் பெரும் பான்மையானவர்கள் எங்கள் மொழியை ஏன் வைக்கவில்லை என்று யாரும் கேட்கவில்லை. பெரும்பான்மையானவர்களுக்கு என்று வைத்தால் மீதி இருக்கும் மக்கள் என்ன ஆவது என்பதுதான் கேள்வி. ஆக இந்தி பேசாத மக்களுக்குத்தான் அதிக பாதிப்பு. குறைவான மக்கள்தான் இந்தி பேசுபவர்கள்; 42 சதவீதம் பேர் என்று வைத்துக்கொண்டாலும், மீதி 58 சதவீதம் பேருக்கு அது அன்னிய மொழியாகப் போய் விடுகிறது. எனவே 42 பேருக்கு சாதகமாக, 58 பேருக்கு பாதகமாக இருக்கின்ற மொழியை ஜனநாயக நாடு ஏற்றுக்கொண்டதே தவறு என்பதுதான் எங்களுடைய கருத்து. இந்தி எதிர்ப்பு என்று பேசுகிற போது ஆங்கில அடிமைத் தனம் என்று சொல்லுகின்றார்கள். ஆனால் இந்த அடிமைத்தனத்தைப் பற்றி பேசுகின்ற இந்துத்துவாவாதிகளில் யார் யாரெல்லாம் ஆங்கில அறிவு பெறாதவர்கள் என்ற பட்டியல் எங்களுக்கு வேண்டும். அத்வானி பெறவில்லையா அல்லது யார்தான் பெறவில்லை என்பதற்கான பட்டியல் வேண்டும். அவர்கள் கற்றுக்கொண்ட ஆங்கிலம்தான் அவர்களுக்குப் பல புதிய சிந்தனைகளைக் கொடுத்திருக்கிறது. இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்ததுகூட ஆங்கிலம் படித்ததால் தான். அது எப்படி இருந்தாலும் அறிவியலை கற்பதற்கு ஒரு வேற்று மொழிதான் வேண்டும் என்றால் எல்லோருக்கும் வேற்று மொழியாக இருக்கட்டுமே, எனக்கு மட்டும் ஏன் வேற்று மொழியாக இருக்க வேண்டும் ? என்று சொல்லுகின்றோம். அடுத்து இவர்கள் இந்தியைத் திணிப்பதற்கு அது நோக்கமல்ல. இந்தி என்பது வடவர்களுக்காக செய்வது ஒன்று; இவர்களின் பார்வையில் ஆர்.எஸ்.எஸ்-இன் கொள்கையான சமஸ் கிருதத்தை கொண்டுவருவதற்கு ஒரு இடைக்கால ஊடகமாகத் தான் இந்தியைப் பார்க்கிறார்கள். ஏற்கனவே கோல்வார்க்கர் தன்னுடைய நூலில் சொல்லியிருக்கிறார் ‘எங்களுக்கு இறுதியான இலக்கு என்பது சமஸ்கிருதத்தை கொண்டு வருவதுதான்; இடைக்காலமாக இந்தியை விடுகிறோம்’ என்பதாகத்தான் அவர்களின் பார்வை இருக்கின்றது. அதை இவர்கள் இப்போது வெளிப்படுத்தி விட்டார்கள் என்பதாகத்தான் நாங்கள் பார்க்கின்றோம்.



**கேள்வி :** இந்தியை எதிர்த்தும் தமிழுக்காகவும் பேசுகின்றீர்கள்; ஆனால் உங்கள் தலைவர் பெரியார் தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்று விமர்சனம் செய்தவர். எனவே உங்களுக்கு தமிழுக்காக குரல் கொடுக்க உரிமை இல்லை; நீங்கள் மெக்காலே புத்திரர்கள்; ஆங்கிலேய சிந்தனையை உள்வாங்கியவர்கள் என்று உங்கள் கொள்கைக்கு விரோதமான அமைப்புகள் சொல்லும் குற்றச்சாட்டிற்கு உங்கள் பதில் என்ன?

**பதில் :** பல பேர் பெயரை மட்டும் படித்து செய்தியைப் படிக்காதவர்களாக இருக்கிறார்கள் என்பது ஒரு காரணம். மெக்காலே பற்றிய அவர்களின் புரிதலே தவறானது என்பது தான் எங்கள் கருத்து. அவர் ‘மினிட் ஆன் இண்டியன் எஜுகேசன்’ என்பதில் எழுதியிருக்கிறார். அவர் சொல்வது என்பது அறிவியல் மனப்பான்மை அற்றவர்களாக இந்தியர்கள் இருக்கின்றார்கள். எடுத்துக்காட்டு ஒன்று சொல்கின்றார் ‘ஐரோப்பாவில் இருக்கும் தொடக்கப்பள்ளி மாணவனின் புத்தகத்தில் இருக்கும் அறிவியலை, ஒட்டு மொத்த பெர்சிய மொழி (அப்போது பாரசீக மொழியுமிருந்தது) சமஸ்கிருத மொழி நூல்கள் அத்தனையையும் சேர்த்தாலும் கொடுக்காது என்ற அளவுக்கு தான் அறிவியல் இல்லாத மொழியாக இந்திய மொழிகள் இருக்கின்றன என்று பார்த்து தான், அறிவியலைக் கற்றுக் கொள்வதற்கு ஆங்கிலத்தைக் கொண்டு வரவேண்டும்’ என்று அவர் குறிப்பிடுகிறார். அடுத்து அவர் சொல்லுகின்றார் ‘இதன் வழியாக அறிவியலை நாம் கொடுத்து, அறிவியல் மட்டுமல்லாமல் உலகப் பார்வை பெறவேண்டும், எல்லா தத்துவங்களையும் அறிந்துக் கொள்ள வேண்டும், தோற்றத்தில் இந்தியர்களாக இருந்தாலும், சிந்தனையில் ஐரோப்பியர்கள் அளவுக்கு வளரவேண்டும்’ என்று. இது ஒரு பக்கம், இதை விட்டு விடுவோம். அடுத்து பெரியார் தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்று சொன்னார் என்கிறார்கள். தமிழுக்கு ஏற்பட்ட மாற்றங்கள் என்பது, எளிதாக கற்றுக்கொள்ள எளிய எழுத்து முறை வேண்டும் என்று சிந்தித்தவர் இலக்கண அறிவோ, இலக்கிய அறிவோ இல்லாத பெரியார்தான். மக்கள் மீது இருந்த அக்கறை குழந்தைகள் மீது இருந்த அக்கறை. இதுவரை எந்த தமிழ்ப் புலவரும் இயக்கமும் எடுக்காத முயற்சி; மகாபாரதத்தைத் தமிழில் எழுதினார்கள், இராமாயணத்தை தமிழில் எழுதிய கம்பரை புகழ்ந்து கொண் டிருந்தார்களே தவிர, குறள் என்ற உயர்ந்த தமிழ் இலக்கியத்தை மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும் என்ற சிந்தனை யாருக்கு இருந்தது? பெரியாருக்குத்தான் இருந்தது. பெரியார்தான் திருக்குறள் மாநாடு கூட்டி, விளக்கி, மக்களிடம் எடுத்துச் சென்றது மட்டுமல்ல தங்கள் இயக்கத்தின் சார்பாக குறளை அச்சிட்டுக் குறைந்த விலையில் விற்று தமிழ்நாடு முழுக்க திருக்குறளைப் பரப்பினார். இது தமிழுக்கு சார்பான பார்வையா அல்லது எதிரான பார்வையா எப்படிப் பார்க்கிறார்கள் என்று தெரியவில்லை. ஒரு பெற்றோர் அல்லது ஒரு தந்தை தன் மகனையோ, மகளையோ பார்த்து, தறுதலை என்று பேசுவது அவன் தறுதலையாகப் போகவேண்டும் என்ற விருப்பத்தில் அல்ல; உன்னை மாற்றிக் கொள் என்பதற்காக. பெரியார் காட்டுமிராண்டி மொழி என்று சொன்னதுகூட, தமிழ் அறிவியல் இல்லாத வெறும் மதமும் காதலும் மட்டுமே கொண்ட மொழியாக இருக்கிறது, அறிவியல் இல்லை என்ற கோபத்தில் வந்ததாக புரிந்துகொள்ளவேண்டும். அதனால் தான் பெரியார் கூட சொன்னார் ‘யாராவது அறிவியல் சார்ந்த, மக்கள் முன்னேற்றம் சார்ந்த இலக்கியங்களைப் படைத்து வந்தால் என் செலவில் அச்சிட்டு உங்களுக்கு சன்மானமும் கொடுக்க தயாராக இருக்கின்றேன்’ என்று அறிவித்தவர் பெரியார். இறுதியில் 1972 ஆம் ஆண்டில் ஒன்றை சொன்னார் ‘மொழிப் பற்று என்பது ஒருவனுக்கு வேண்டும் நாட்டுப் பற்று வேண்டுமென்றால் மொழிப் பற்றும் வேண்டும்; ஒற்றுமைக்கு ஒரு மொழி தேவைப்படுகின்றது; சமஸ்கிருதம் என்ற ஒன்றை வைத்துக்கொண்டுதான் இந்தியா முழுவதும் இருக்கின்ற பார்ப்பனர்களிடையே ஒற்றுமை நிலவுகிறது. அது தமிழைக் கொண்டு நமக்கு ஏன் வரக்கூடாது’ என்று 1972 ஆம் ஆண்டு பேசியிருக் கிறார். இளம் வயதில் ஆடை அணியாதவரை

(3ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION 19.11.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# ஆபத்துகளை உருவாக்கும் அறிவியலை ஆதரிக்க முடியாது

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறுதி வரை ஆடை அணியாதவர் என்று பேசுவதைப் போல, ஒரு காலத்தில் சொன்ன ஒரு சொல்லை வைத்துக்கொண்டு பேசிக் கொண் டிருக்கிறார்கள். தமிழை மக்களுக்கானதாக ஆக்கவேண்டும் என்று அவர் பார்த்தார்; ஆக்கு வதற்கான சில முயற்சிகளாக எழுத்துச் சீர்திருத்தம் கொண்டுவந்தார்; தமிழை அழிக்க வந்த இந்தியை எதிர்த்துப் போராடினார்; குறளை முன் வைத்தார். ஆனால் ஏன் இப்படி பேசு கிறார்கள் என்று புரியவில்லை. ஒற்றைச் சொல்லை எடுத்துக் கொண்டு, அதற்கு பின்னால் இருக்கும் எதையும் பார்க்காமல் பேசுபவர் களாகத் தான் இவர்கள் இருக்கிறார்கள்.

**கேள்வி :** கூடங்குளம் அணு உலை தொடர்பான போராட்டங்களில், அதன் மக்கள் கூட்டியக் கத்தின் ஒருங்கிணைப்பாளராக இருக்கின்றீர்கள்; அறிவியல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சிதான் அணு உலைகள் என்று திராவிடர் கழகம், கம்யூனிஸ்ட் இயக்கங்கள் பார்க்கின்றன; பெரியாரே இருந்திருந்தால் இதை வரவேற்று தான் பேசியிருப்பார் என்று சொல்கிறார்கள். நீங்கள் அந்த முதல் இரண்டு அணு உலைகளையும் எதிர்த் தீர்கள், மூன்றாவது நான்காவது அணு உலைகளையும் எதிர்க்கிறீர்கள். இது ஒரு அறிவியல் பார்வைக்கு மாறான போக்காக தெரிய வில்லையா?

**பதில் :** தொழில்நுட்பம் என்பது வேறு, அதை பயன்படுத்துவது என்பது வேறு. Technology வேறு, Application வேறு. இருக்கின்ற தொழில் நுட்பத்தை எதற்கு பயன்படுத்துகிறார்கள்? அணுவுலையை ஆதரிப்பவர்கள் கூட அணு குண்டை ஏன் எதிர்க்கின்றார்கள்? அது ஆபத் தானது என்கின்றார்கள். அதுவும் விஞ்ஞான வளர்ச்சி தானே, ஏன் எதிர்க்கின்றார்கள்? அது அழிவுக்குக் காரணம் ஆகிவிடும் என்று எதிர்க்கிறார்கள். அதைத் தான் நாங்கள் அணு உலைக்கும் சொல்கிறோம், கட்டுப்படுத்தபட்ட அணுப்பிளவு அணு உலை, கட்டுப்படுத்தப் படாத அணுப்பிளவு அணு குண்டு, தொழில் நுட்பக் கோளாறு, மனிதப் பிழை, எதிரியின் தாக்குதல் போன்றவற்றால் அணு உலை வெடித் தால் மட்டுமல்ல, இயல்பாக இயங்கினாலே என்ன சிக்கல் வரும் என்பதை, கல்பாக்கத்திற்கு அருகே ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்களைப் பற்றி அறிக்கைகள் வந்திருக்கின்றன. மஞ்சுளாதத்தா என்பவர் பெரிய அறிக்கையை இந்தியா முழுவதும் உள்ள அணு உலைகளால் ஏற்பட்ட பாதிப்பு களை விட, அங்கு பணியாற்றுபர்களுக்கு ஏற்பட்டிருக்கிற நோய்களைப் பற்றி, இறந்து போன 4900 பேரில் 70 விழுக்காட்டினர் புற்று நோயால் இறந்திருக் கிறார்கள். அதில் பணியாற்றிய நூற்றுக்கணக்கான அறிவியல் விஞ்ஞானிகள் தற்கொலை செய்து கொண்டு இறந்திருக்கிறார்கள். ஒன்று உளவியல் பாதிப்பு ஏற்படுகின்றது அல்லது புற்று நோய் ஏற்படு கின்றது என்று அவர் அறிக்கை சொல்கிறது. ஆதரிப்பவர்கள் பற்றி சொன்னீர்கள்; இங்கு அணுவுலையை பி.ஜே.பி. ஆதரிக்கின்றது சி.பி.எம், காங்கிரஸ் ஆதரிக்கின்றது. இரண்டு கட்சிகளும் உள்ள கேரளாவில் ஏன் அணு உலையை அனுமதிக்க மறுத்தார்கள்? காங்கிரஸ், பி.ஜே.பி இரண்டு பேர் மட்டுமே இருக்கின்ற கர்நாடகாவில், இங்கு இருக்கின்ற கழிவுகளில் கொஞ்சத்தை (இன்னும் ஆறும் அமைக்கப்பட வில்லை; ஒன்று தான் இயங்குகிறது) மூன்று கி.மீ ஆழத்திற்கு கீழே உள்ள கோலார் சுரங்கத்திற்கு (மூடப்படவிருக்கும் சுரங்கம்) அடியில் போட்டு மூடுவதற்குக் கூட கருநாடகாவில் பெரும் எதிர்ப்பு; உடனே அரசு கைவிட்டு விட்டது. இவ்வளவு ஆபத்தான அணு உலைகளை ஆதரிக்கவேண்டும் என்று எப்படி சொல்கிறார்கள் என்று புரிய வில்லை. அதே போல ஜெய்தாப்பூரில் சி.பி.எம் தலைமையில்தான் அணு உலை எதிர்ப்புப் போராட்டங்களை நடத்துகிறார்கள். வி.கே.சிங் , பா.ஜ.க அமைச்சராக இப்போது வந்திருக்கும் பழைய தளபதி, அவர் பகுதியில் வந்த அணு உலையை எதிர்த்து போராட்டம் நடத்தியவர் தான். ஆனால் நம்மூரில் மட்டும் அதை ஆதரிக் கிறார்கள் என்பதுதான் வியப்பாக இருக்கின்றது. விஞ்ஞானக் கருத்து முக்கியம் அல்ல; அதன் பயன்பாடு எப்படி இருக்கின்றது? அது எதற்குப் பயன்படுகிறது? அதனால் ஏற்படும் விளைவுகள் என்ன? மக்களுக்காகத் தான் மின்சாரம் தேவை; மக்களை அழித்துவிட்டு பாதிப்பு கொடுத்து விட்டு மின்சாரம் வந்தால் அது அறிவியல் வளர்ச்சி அல்ல. அது அறிவியல் ஆபத்து என்று பார்க்கின்றோம்.

**கேள்வி :** தமிழ்நாட்டில் ஏதேனும் ஒரு வகையில் திராவிட கட்சிகளுடைய செல்வாக்கு தான் இருக்கின்றது; பெரியார் கொள்கைகளை முழுமையாக பின்பற்றுகிறார்களா இல்லையா என்பது ஒரு கேள்வியாக இருந்தாலும், பெரியாரை எதிர்க்காத அமைப்பு என்று புரிந்துகொண்டாலும் தி.மு.க, அ.தி.மு.க, தே.மு.தி.க, ம.தி.மு.க ஒரு வகையில் பா.ம.க முதலிய கட்சிகள் தான் 50, 60 சதவீத வாக்குகளை வைத்திருக்கின்ற கட்சிகளாக இருக்கின்றது; ஆனால் பி.ஜே.பி திராவிட கட்சிகளுக்கு மாற்றான சக்தியாக நாங்கள் வளர்ந்து வருகிறோம், திராவிடக் கட்சிகளுக்கு மாற்று நாங்கள்தான், எங்கள் தலைமையில் அரசியல் வெற்றிடத்தை நிரப்புவோம் என்று சொல்கிறார்கள். அது பெரியார் இயக்கம் அல்லது திராவிட இயக்கத்தினுடைய இயலாமை அல்லது இயக்கங்களின் தோல்விதான் பி.ஜே.பி யின் செல்வாக்கு வளர்ச்சி என்று பார்க்கின்றீர்களா? அவர்கள் சொல்வது ஒதுக்கிவிடக் கூடிய கருத்தாக தெரியவில்லை ஏனென்றால் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 19 சதவீத வாக்குகளை பெற்றுள்ளார்கள். தமிழகம் ஒரு மாற்றத்திற்குத் தயாராகிறது என்று பார்க்கின்றீர்களா?

**பதில் :** எப்படியோ, இஸ்லாமியர்களுக்கு எதிரான கருத்துக்களைக் கொண் டிருக்கிற கோவையில், கிறிஸ்துவத்திற்கு எதிரான வெறுப்பை விதைத் திருக்கின்ற கன்னியாகுமரியில் எப்போதும் இருந்து கொண்டிருந்தவர்கள்தான். தற்போது சற்று கூடுதலான வாக்குகளைப் பெற்றிருக் கிறார்கள்; அது கூட்டணிக்கு கிடைத்த வாக்குகள் தானே தவிர அவர்களுக்குக் கிடைத்த வாக்குகள் அல்ல. இப்போது நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் கிடைத்த வாக்குகளை வைத்து சொல்கிறார்கள். இரண்டு பேர் மட்டும் பங்கேற்கும் ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொண்டு விட்டு, நான் இரண்டாவதாக வந்துவிட்டேன் என்று சொல்வதைப் போலத்தான் இருக்கின்றது. வேறு யாரும் போட்டியிடவில்லை, அ.தி.மு.க வுக்கு எதிரான அனைவரின் வாக்குகளும் இவர்களுக்கு விழுந்திருக்க வாய்ப்பிருக்கிறது. கோவையைப் பொருத்தவரை சி.பி.எம்-க்கான வாக்குகள் கிடைத்திருக்கின்றன; அங்கு ஏற்கனவே வலுவாக இருக்கின்ற பி.ஜே.பி மட்டுமல்லாமல் அங்கு இருக்கின்ற மற்ற கூட்டணி கட்சிகள், அ.தி.மு.க வுக்கு எதிரான கட்சிகள் வேறு வாய்ப்பு இல்லாமல் இவர்களுக்குத்தான் வாக்களித்திருக்க வேண்டிய நிலை இருந்திருக்கிறது. இந்த மாயத் தோற்றத்தை வைத்துக்கொண்டு இவர்கள் தவறாக புரிந்துகொண்டு அறிக்கை விட்டிருக்கிறார்கள் என்று தான் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ✦

## சையது முகம்மது படுகொலையைக் கண்டித்து மயிலாடுதுறையில் கழகம் ஆர்ப்பாட்டம்




01.10.2014 அன்று காலை 11மணியளவில் மயிலாடுதுறை திராவிடர் விடுதலைக் கழகம், இராமநாதபுரம் SP பட்டிணம் காவல் நிலையத்தில் சைய்யது முகமது அவர்களை படுகொலை செய்த காவல் உதவி ஆய்வாளர் காளிதாஸ் மீது கொலை வழக்கு பதிவு செய்ய வலியுறுத்தியும், காவல் நிலையங்களில் தொடரும் மனித உரிமை மீறல்களை தடுத்து நிறுத்த வலியுறுத்தியும் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

ப.தமிழ்வேலன் (நகர செயலாளர்) தலைமையில் வழக்கறிஞர் ந.இளையராஜா, ம. மகாலிங்கம் (மாவட்ட தலைவர்), மு.அன்பரசன் (மாவட்ட அமைப்பாளர்), நாஞ்சில் சங்கர் (நகர தலைவர்) முன்னிலை வகித்தனர்.

கண்டன உரையாற்றிய தோழர்கள்: பேராசிரியர் த.ஜெயராமன் மீத்தேன் திட்ட எதிர்ப்பு கூட்டமைப்பு, சுப்பு.மகேசு தமிழர் உரிமை இயக்கம், தனவேந்திரன் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம், வழக்கறிஞர் சங்கர் கிழக்கு கடல் மக்கள் பாதுகாப்பு இயக்கம், தெ.மகேசு மா.செயலாளர். முன் வைத்த கோரிக்கைகள்:

சைய்யது முகமது குடும்பத்திற்கு 50லட்சம் இழப்பீடு, அரசு வேலை; காவல் நிலையங்களில் கேமரா பொருத்தப்பட வேண்டும்; உச்ச நீதிமன்ற தீர்ப்பின் படி ஒருவரை கைது செய்யும் போது உரிய விதிமுறைகளை பின்பற்ற வேண்டும்; காவல் நிலையங்களில் தொடரும் காவல் நிலைய மரணங்களை தடுத்து நிறுத்த வேண்டும் என்பவை ஆர்ப்பாட்டத்தில் வலி யுறுத்தப்பட்டது. ப.தமிழ்வேலன் (நகர செயலாளர்) நன்றி கூறினார்.


**கோவை**
**வேளாண் பல்கலை**
**முன் கழகம் நடத்திய**
**போராட்டச் செய்தி**
**– அடுத்த இதழில்**

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம்**
**ரூ.200**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆9941613535

**‘புரட்சிப் பெரியார் முழக்கம்’**
**உறுப்பினர் சேர்க்கையை**
**துவங்கி விட்டீர்களா?**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 20th November 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | நவம்பர் 27, 2014 | புரட்சி 13 | முழக்கம் 46 | விலை: ரூ.3.00


## வேளாண் பல்கலையை எதிர்த்து கழகம் ஆர்ப்பாட்டம்

# ‘பஞ்சாங்க’த்தை அறிவியலாக்காதே!

*வேளாண் பல்கலையின் விவசாயக் கையேட்டில் பஞ்சாங்கங்களை திணித்திருப்பதை நீக்கக் கோரி கோவையில் திராவிடர் விடுதலைக் கழகம் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது.*

கோவை பல்கலைக்கழகத்தில் இயங்கும் வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம் என்ற அமைப்பு விவசாய பெருமக்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்று காரணம் சொல்லி மழை முன்னறிவிப்பு கையேடு ஒன்றினை தயாரித்து 2013ம்ஆண்டு முதல் வழங்கி வருகிறது. அதில் 100 ஆண்டுகளுக்கு மேலான மழை பற்றிய புள்ளி விவரங்களை இந்திய வானிலை துறையிலிருந்து பெற்று, அறிவியல் முறையில் ஆய்வு செய்து மாத வாரியாக ஒவ்வொரு மாவட்டங்களில் எதிர்பார்க்கப் படும் மழை அளவினை வெளியிட்டு அதற்கேற்றாற் போல் விவசாயப் பணிகளை செய்யுமாறு விவசாயி களுக்கு அறிவுறுத்தி வருகிறது. அவ்வாறு 2014ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ள மழை முன்னறிவிப்பு கையேட்டில் வானிலை துறை விவரங்கள் அடிப் படையில் ஒரு பகுதியாகவும், 14 பஞ்சாங்கங்கள் அடிப்படையில் சேகரிக்கப்பட்ட மழை குறிப்புகளை ஒரு பகுதியாகவும் வேளாண் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. இந்த செயல் அறிவியல் அடிப்படையற்ற, அறிவியலுக்கு முரண்பாடான மூடநம்பிக்கை வளர்க்கும் நோக்கத்தோடு இருக்கிறது.

இதனைக் கண்டித்து, பஞ்சாங்க அடிப்படையில் விவசாயிகளுக்கு மழை முன்னறிவிப்பு கையேடு வழங்கிய கோவை வேளாண் பல்கலைக்கழத்தின் அறிவியல் விரோதப் போக்கைக் கண்டித்து கோவை மாநகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் நவம்பர் 17 திங்கட்கிழமை காலை 10 மணியளவில் கோவை செஞ்சிலுவை சங்க கட்டிடம் அருகில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது.

ஆர்பாட்டத்தின் நோக்கங்களை விளக்கி விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் சுசிகலை யரசன், தமிழர் விடுதலை இயக்க பொறுப்பாளர் தோழர் வெண்மணி, பியூசிஎல் அமைப்பின் சார்பில் பொன்சந்திரன், திமுக மாநில மாணவரணி துணை செயலாளர் வழக்கறிஞர் கணேஷ்குமார் ஆகியோர் உரையாற்றினர். பின்னர் கோவை வேளாண் பல்கலைகழகத்தின் அறிவியல் விரோதப் போக்கைக் கண்டித்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார்.

அவர் தனது உரையில், “அறிவியலை போதிக்க வேண்டிய கோவை வேளாண்மை பல்கலைக்கழகம் விவசாயிகளிடம் மூட நம்பிக்கைகளை பரப்புவது, வன்மையாக கண்டனத்துக்குரியது மட்டுமல்லாமல் பஞ்சாங்க அடிப்படையில் மழை முன்னறிவிப்பு கையேடு வழங்கிய பல்கலைக்கழக அதிகாரிகள் மீது அரசு சட்டப்படியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். விவசாயிகளை ஏமாற்றும் இதுபோன்ற அறிவிப்புகளை பல்கலைக்கழகம் உடனடியாக திரும்ப பெற வேண்டும். அதே வேலையில் வானிலை ஆய்வு மூலம் பருவ நிலைகளை அறிவியல் பூர்வமாக ஆராய்ந்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்” எனக் கூறி உரையாற்றினார்.

துவக்கத்தில் திராவிடர் கலைக்குழுவை சேர்ந்த நங்கவள்ளி கிருஷ்ணன், திருப்பூர் பிரசாத் ஆகியோர்



பார்ப்பனர்கள்போல் வேடமணிந்து பஞ்சாங்க அடிப்படையில் கையேட்டினை கையில் பிடித்துக் கொண்டு விவசாயிகளுக்கு அறிவுரை கூறுவது போல் நடித்து காட்டினர். அவர்களுடன் பல்லடம் நாராயண மூர்த்தி, தம்பி, பிரசன்னா ஆகியோரும் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் கழக பொதுச்செயலாளர் விடுதலை இராஜேந்திரன், தலைமைக்குழு உறுப் பினர்கள் கோபி இராமஇளங்கோவன், திருப்பூர் துரைசாமி, ஈரோடு இரத்தினசாமி, துத்துக்குடி பால்பிரபாகரன், மேட்டூர் சக்திவேல், சென்னை மாவட்ட தலைவர் உமாபதி, கழக வழக்கறிஞர் துரைஅருண், தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப் பாளர் ஈரோடு சிவக்குமார், கோவை புறநகர மாவட்ட தலைவர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன், ஈரோடு வடக்கு மாவட்ட தலைவர் நாத்திகஜோதி, சேலம் மேற்கு மாவட்ட தலைவர் சூர்யகுமார், மாவட்ட செயலாளர் மேட்டூர் கோவிந்தராஜ், திருப்பூர் மாவட்ட செயலாளர் முகில்ராசு, கொளத் தூர் ஒன்றிய தலைவர் காவலாண்டியூர் ஈஸ்வரன், விழுப்புரம் அய்யனார், சுயமரியாதை கலைப் பண் பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கொளத்தூர் குமார், திருவாரூர் மாவட்ட செயலாளர் இரா.காளி தாசு, பட்டுக்கோட்டை வளவன் என்கிற சதாசிவம் உள்பட 200க்கும் மேற்பட்ட கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

கண்டன ஆர்பாட்டத்தை கோவை மாநகர் மாவட்ட தலைவர் நேருதாசு தலைமையில் மாநகர மாவட்ட செயலாளர் ஆண்ட்ரோஸ், மாவட்ட பொருளாளர் கிருஷ்ணன், மாவட்ட துணை செயலாளர் ஜெயந்த் உள்ளிட்ட தோழர்கள் மிக சிறந்த முறையில் ஏற்பாடு செய்திருந்தனர். கோவை மாநகர் முழுவதும் ஆர்ப்பாட்டத்தை விளக்கி வண்ண சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. வந்திருந்த அனைவருக்கும் கோவை மாநகர மாவட்ட கழகம் சார்பில் மதிய உணவு ஏற்பாடு செய்திருந்தனர்.

**செய்தி: மன்னை காளிதாஸ்**

## பீகார் முதல்வரின் பெரியார் குரல்!



“கோவில்களில் பூஜை செய்ய ஒரு சமுகத்தவர் மாத்திரம் ஏன் உரிமை கொண்டாட வேண்டும்? அவர்கள் என்ன நிரந்தர ஒப்பந்ததாரர்களா?” என்று ஜிதன் ராம் மாஞ்ஜி கேட்டார்.

பாட்னா நகரில் உள்ள பொது நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட பீகார் முதலமைச்சர் ஜிதன் ராம் மாஞ்ஜி பேசியபோது, “சமுகத்தில் மக்களிடையே உள்ள பிரிவினைக்கு மூல காரணம் மதம் தொடர்பான சிந்தனையே” என்றார். “மதமின்றி இருக்கும் மனிதர்கள் அனைவருக்கும் சொந்தமானவர்கள், மதங்களை பின்பற்றுபவர்கள் அவர்கள் சார்ந்த மதத்தினருக்கு மட்டுமே சிறப்பு மரியாதை செய்வார்கள். ஆனால், இங்கே ஒரு மதத்தைச் சார்ந்தவர்களை அதே மதத்தைச் சார்ந்தவர்கள் பிரித்து வைக்கும் கொடுமை நடக்கிறது. இங்குள்ள மதத்தில் என்னுடைய மதத்தவனையே ஜாதியின் பெயரால் பிரித்து வைக்கிறார்கள். இதன் காரணமாக சமுகத்தில் நிரந்தர பிளவு ஏற்பட்டு விடுகிறது. இங்கு மாத்திரமே பிறப்பால் ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றன.

உடல் உழைப்பற்ற செயல்களை செய்பவர்கள் இங்கு உயர்ந்தவர்களாக மதிக்கப்படுகின்றனர். அதே நேரத்தில் கடுமையாக உழைக்கும் சமுகத்தினரை ஜாதியின் பெயரால் பிரித்து வைக்கின்றனர். ஒரு குறிப்பிட்ட பணிக்காக பிறந்தவர்கள்போல் பரம்பரை பரம்பரையாக செய்து வருவது இந்தியாவில் மாத்திரமே நடக்கிறது. கோவில்களில் பூஜை செய்வது, அதன் மூலம் வரும் வருமானத்தில் சுகபோகமாக வாழ்வது, ஏழைகளின் உடலுழைப்பைச் சுரண்டி வாழ்வது போன்ற செயல்களை ஒரு சாரார் செய்து சமுகத்தில் பெரிய வேறுபாட்டை ஏற்படுத்தி வைத்துள்ளனர். கோவில்களுக்குப் பூஜை செய்ய இவர்கள் என்ன பரம்பரை ஒப்பந்தக்காரர்களா? அப்படியென்றால் அந்த சாமிப் படங்களை ஏன் நீங்கள் வீட்டில் வைத்திருக்கிறீர்கள்?

எனது வீட்டில் எந்த ஒரு சாமிப் படமும் இல்லை. மனிதர்களைப் பிரிக்கும் வர்ணத்தைக் கூறும் மதக் கோட்பாட்டை நான் பின்பற்றுவதும் கிடையாது; அம்மதத்தின் அடையாளமான சாமிகளை நான் வீட்டில் வைத்திருப்பதும் கிடையாது; எனது வீட்டில் மக்களுக்காக உழைத்த தலைவர்கள் படம் மாத்திரமே இருக்கிறது” என்று பீகார் முதலமைச்சர் ஜிதன் ராம் மாஞ்ஜி கூறினார்.

தலையங்கம்

## கருநாடக “இந்து” துறவிகளைப் பாருங்கள்!

தமிழ்நாட்டில் இந்து மதத்தின் காவலர்களாக புறப்பட்டிருக்கும் அமைப்புகள், எவ்விதச் சமூக சிந்தனையுமின்றி பெரியார் இயக்கத்தைக் கண்மூடித்தனமாக எதிர்த்து வருகின்றன. ‘இந்து ஒற்றுமை’ பற்றி கூப்பாடு போடும் அவர்கள், அதற்கு தடையாக இருக்கும் ஜாதி, தீண்டாமைப் பற்றி பேசுவதே இல்லை. ‘தீண்டாமைக்கு’ உள்ளாக்கப்படும் மக்களும் ‘இந்துக்கள்’ தானே என்பது குறித்து இவர்கள் வெட்கப்படுவதும் இல்லை. மகாராஷ்டிரா மாநிலத்தில் மூட நம்பிக்கை ஒழிப்புச் சட்டம் கொண்டு வந்ததைப்போல், தமிழகத்திலும் வரவேண்டும் என்றால் உடனே ‘நாத்திகப் பிரச்சாரம்’ என்று கூக்குரலிடுகிறார்கள். இதோ, கருநாடகத்திலிருந்து ஒரு நல்ல செய்தி!

மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டத்தை உடனே கொண்டுவர வேண்டும் என்று கருநாடகத்தில் 3 நாள் பட்டினிப் போராட்டம் நடந்திருக்கிறது. இந்தப் போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்களே காவி உடை தரித்த இந்து மத சாமியார்கள் தான் என்பதே இதில் முக்கிய அம்சம். தலித் மற்றும் பகுத்தறிவாளர்களும் இந்தப் போராட்டத்தில் தங்களை இணைத்துக் கொண்டிருப்பது மகிழ்ச்சியான செய்தி. பட்டினிப் போராட்டத்தைத் தொடங்கி வைத்துப் பேசிய நீடிமாமுடி சென்னமலா மடாதிபதி வீரபத்ரா சாமி முன்வைத்துள்ள கருத்துகள், ஆழ்ந்த சிந்தனைக்கு உரியவை. ‘நாட்டில் நடக்கும் சரி பகுதி குற்றச் செயல்களுக்கு மதம் காரணமாக இருக்கிறது’ என்று அவர் நேர்மையாக ஒப்புக் கொண்டுள்ளார். அறநெறியி லிருந்து மதத் தலைவர்கள் விலகி நிற்கிறார்கள் என்ற உண்மையை சுட்டியதோடு, மதத்தின் பெயரால் நடக்கும் மிருகத்தனமான சடங்குகள் அப்பாவிகளையும் ஏழைகளையும் குறிப்பாக தாழ்த்தப்பட்டவர்களை அதிக அளவில் வதைத்து வருகிறது என்ற வேதனையையும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

“சுயநலம், பணவெறி, காம உணர்வுடன் திரியும் சாமியார்களே, தங்கள் பேராசை எண்ணங்களுக்காக மக்கள் மீது மூடநம்பிக்கை எனும் நஞ்சை ஊற்றுகிறார்கள்” என்று உண்மைகளை உள்ளம் திறந்து கொட்டி யிருக்கிறார். சமூகக் கவலையோடு இந்தக் குரலை உயர்த்தியிருக்கும் இந்த மத சாமியார்கள் அனைவருமே பார்ப்பன ரல்லாதவர்கள். இந்த உணர்வை பாராட்டி வரவேற்கிறோம். இந்தப் போராட்டம் பார்ப்பனிய சக்திகளுக்கு எதிரானது என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

கருநாடக அரசு மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டம் கொண்டு வரவிருப்பதை சட்டசபையில் அறிவித்தபோது, பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ்., விசுவ இந்து பரிஷத், இராம சேனா உள்ளிட்ட பார்ப்பனிய மதவெறி அமைப்புகள் அதை எதிர்த்து அரசை மிரட்டி, சட்டத்தைக் கொண்டுவரும் முயற்சிகளைத் தடுத்து விட்டன. இந்தப் பின்னணியில் சமூகப் பார்வை கொண்ட இந்த சாமியார்கள் போராட்டம் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

பார்ப்பனர்களின் வேத மதத்தை ‘இந்து’ மதமாக்கிக் கொண்டு, பார்ப்பன மேலாண்மைக்குள் அனைத்து மக்களையும் திணித்து, அந்த ஆதிக்கக் கட்டமைப்பைத் தொடர்ந்து நிலைநிறுத்தி வரும் பார்ப்பன சூழ்ச்சிகளை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும் என்று பெரியார் தொடர்ந்து எச்சரித்து வந்தார். அந்தக் குரலை சரியாகப் புரிந்துகொண்ட குன்றக்குடி அடிகளார் போன்ற இனஉணர்வு மிக்க துறவிகள், பெரியாருடன் கைகோர்த்தார்கள். ஒரே மேடையை பெரியாருடன் பகிர்ந்து கொண்டார்கள். இது தமிழக வரலாறு. இந்து பார்ப்பனிய மேலாதிக்கத்தையும் சமூகச் சுரண்டலையும் தொடர்ந்து எதிர்த்து வந்த பெரியார்தான், இந்து - பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி, வேலை மற்றும் அதிகார சமத்துவ உரிமைகளுக்காகப் போராட்டங்களை முன்னெடுத்தார். கடவுள் மீதே நம்பிக்கை இல்லாத பெரியாரும், அவரது இயக்கமும் தான் பார்ப்பனரல்லாத ‘இந்துக்கள்’ சூத்திரர்களாக இழிவுபடுத்துவதை எதிர்த்தும் அந்த இழிவை உறுதிப்படுத்திட இன்றைக்கும் கோயில்களில் அர்ச்சகர் உரிமைகள் மறுக்கப்படுவதைக் கண்டித்தும் போராட்டங்களைக் கண்டது.


கடவுள் மீதே நம்பிக்கை இல்லாதவர்கள், ஏன் அர்ச்சகர் பிரச்சினையில் தலையிட வேண்டும் என்று ‘சூத்திர’ இந்துக்கள் எதிர்கேள்வி போட்டார்களே தவிர, அவர்களே முன் வந்து, இந்த இழிவுக்கு எதிராக எந்தக் குரலையும் கொடுக்கவும் தயாராக இல்லை.

இடஒதுக்கீட்டுக் கொள்கையை எதிர்ப்பவர்களாடு, கர்ப்ப கிரகத்தில் தீண்டாமையை நியாயப்படுத்துபவர்களோடு, தமிழ்மொழி வழிபாட்டை மறுப்பவர்களோடு, “கும்பாபிஷேக உரிமை” தங்களுக்கு மட்டுமான பிறவி உரிமை என்று பிடிவாதம் செய்வோரோடு, கூடி நின்று சேவை செய்யத் துடிக்கும் தமிழ்நாடு ‘சூத்திர’ இந்து அமைப்புகளே! இதோ இந்த கருநாடகத்தின் தன்மானம் கொண்ட இந்து சாமியார்கள் போராட்டத்தைக் கண்திறந்து பார்க்க மாட்டீர்களா? என்று உரிமையோடு கேட்கிறோம்.

கர்நாடக இந்து சாமியார்களையும் இந்து எதிர்ப்பாளர்கள் என்ற குற்றக் கூண்டில் நிறுத்தி விடாதீர்கள்! அவர்களின் போராட்டத்தில் அடங்கியுள்ள ஜாதி-மூடநம்பிக்கை எதிர்ப்புக் கூறுகளை சீர்தூக்கிப் பாருங்கள்!

# மலேசிய பயணத்தில் பெரியார் சந்தித்த எதிர்ப்புகள்

“மலாயா தமிழ் முன்னோடிகளும் பெரியார் வருகையும்” என்ற தொகுப்பு நூலை வெளியிட்டிருக்கிறார் ‘கவி’ எனும் தோழர் க.விநாயகம். இன்றைய மலேசியாவின் அன்றைய பெயர் ‘மலாயா’. அன்றைய மலாயாவில் தமிழர்களுக்காக குரல் கொடுத்த முன்னோடித் தமிழர்களையும் 1929 மற்றும் 1954இல் பெரியார் ‘மலாயா’வுக்கு வருகை புரிந்த வரலாற்றையும் ஆவணமாக பதிவு செய்கிறது இந்தத் தொகுப்பு.




தமிழர் சீர்திருத்த சங்கம், தமிழர் நூல் நிலையம், பெரியார் பிறந்த நாள் விழாக்கள் என்ற தலைப்புகளின் கீழ் விரிவான செய்திகளை அரும்பாடுபட்டு சேகரித்து தொகுத்துள்ளார் நூலாசிரியர். 1936இல் தொடங்கப்பட்ட ‘தமிழர் சீர்திருத்த சங்கம்’ பெரியார் இயக்கத்தோடு நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தது. ‘குடிஅரசு’ இதழில் இச்சங்கத்தின் செயல்பாடுகள் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. தமிழவேள் சாரங்கபாணி நடத்திய ‘தமிழ்முரசு’ நாளேடு, தமிழர்களின் குரலாகவும் வரலாற்றுப் பதிவாகவும் வெளிவந்ததோடு சுயமரியாதை கொள்கைகளுக்கு ஆதரவாக இருந்தது. மற்றொரு முன்னோடியான அ.கி. சுப்பையா, ‘தமிழ் வரிவடிவ ஆராய்ச்சி’, ‘சுந்தர மூர்த்தி நாயனார்க் கிரிமினல் கேஸ்’ எனும் மிகச் சிறந்த நூல்களை பெரியாரின் முன்னுரையோடு வெளியிட்டார். இந்து மத புராணங்கள், சடங்குகள் அத்தனையையும் கேள்விக்குள்ளாக்கி பகுத்தறிவு வினாக்களோடு படைக்கப்பட்ட நூல் - ‘சுந்தர மூர்த்தி நாயனார் கிரிமினல் கேஸ்’. தமிழர் சீர்திருத்த சங்கம், மதங்களின் பார்வையிலிருந்து விலகி, இஸ்லாமியர்களையும், தமிழர்களாக இணைத்துக் கொண்டதை சிறப்பாகக் குறிப்பிடவேண்டும்.

1929இல் பெரியார் மலேசிய வருகைக்கு வைதிக தமிழர்கள் கடுமையாக எதிாப்பு தெரிவித்தனர். இந்து மதவாதிகளாக தங்களை அடையாளம் காட்டிக் கொண்டவர்கள், சுயமரியாதை கொள்கையுடன் வாழ்ந்த தமிழர்களுக்கு பெரும் தொல்லை, மிரட்டல்களை தந்தனர். இந்துமத இடுகாட்டில் சுயமரியாதை இயக்க ஆதரவாளர்கள் பிணத்தைப் புதைப்பதற்கு அனுமதி மறுத்து தீர்மானமே போட்டார்கள். இந்த நெருக்கடியான சூழலில் 1929இல் மலாயா வாழ் சுயமரியாதை தமிழர்கள் மாநாடு ஏற்பாடு செய்து, ‘இந்து சனாதனிகள்’ கொட்டத்தை அடக்க பெரியாருக்கு அழைப்பு விடுத்தனர். பெரியார் வருகையை தடுப்பதற்கு இந்து சனாதனக் கூட்டம் பெரும் முயற்சி எடுத்தது. மாநாடு ஒத்தி வைக்கப்பட்டு விட்டதாக பெரியாருக்கு பொய்யான தந்தி கொடுத்தார்கள். அக்காலத்தில் ‘தந்தி’ மட்டுமே சர்வதேச தொடர்பு ஊடகமாகும். தந்தியை சந்தேகித்த பெரியார் மீண்டும் தந்தி அனுப்பி விளக்கம் கேட்டு, மாநாடு நடப்பதை உறுதி செய்து, 1924 டிசம்பர் 15இல் நாகையிலிருந்து கப்பல் ஏறி ‘மலேயா’ சென்று ஒரு மாத காலம் சுற்றுப்பயணம் செய்திருக்கிறார்.

மத விரோதி பெரியாரை மலாயாவுக்குள் அனுமதிக்கக் கூடாது என்று பிரிட்டிஷ் அரசுக்கு மனு கொடுத்து துண்டறிக்கைகள் வழியாக எதிர்ப்பு இயக்கம் நடத்தியதோடு, ‘தமிழ்நேசன்’ என்ற ஏட்டை நடத்திய அய்யங்கார் பார்ப்பனர் ஊர் ஊராகச் சென்று பெரியாருக்கு எதிராக பரப்புரை செய்தார். மலாயாவில் வைதீகர்கள் உருவாக்கிய ‘இந்து மகா சபை’யில் ஆதி திராவிடர்கள், மருத்துவர்கள் போன்ற ஒடுக்கப்பட்ட சமூகத்தினரை உறுப்பினர்களாக சேர்க்க தடை விதித்திருந்த காலகட்டம் அது. எதிர்ப்புக் குறித்து பெரியார் ‘குடிஅரசில்’ எழுதியிருப்பது நிலைமையை உணர்த்துகிறது.

“பினாங்கில் இறங்கியவுடன் பலவிதமான விஷயங்கள் காதுக்கு வந்தன. அவற்றுள் ஒன்று நம்மை கத்தியால் குத்துவதற்கு ஒரு நபருக்கு 500 வெள்ளி பேசி ஏற்பாடு செய்திருப்பதாகவும், நாம் போகுமிடங்களிலெல்லாம் கலகம் செய்வதற்கும் துண்டு பிரசுரங்கள் போட்டு வழங்குவதற்கும் 500 வெள்ளி பேசி பலரை நியமித்திருப்பதாகவும் மற்றும் கிருஸ்துவுக்கு விரோதமாய் பேசினதாகவும், இந்து மதத்தை ஒழித்து இந்துக்களை மகமதிய மதத்தில் சேர்ப்பிக்க மகமதியரிடம் பணம் வாங்கிக் கொண்டு மலாய் நாட்டுக்கு வருவதாகவும், பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு விரோதமாய் ஒத்துழையாமை பிரச்சாரம் செய்ய வருவதாகவும் போல்ஷிவிசம் பிரச்சாரம் செய்ய வருவதாகவும் இன்னும் பலவிதமாக துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் பத்திரிகை மூலமாகவும் பிரச்சாரம் செய்திருந்த விஷயம் நேரில் பார்த்தோம். தவிரவும் அவ்விடத்தில் ஒரு ஆங்கில தினசரிப் பத்திரிகை, அரசாங்கத்திற்கும் சட்டபை அங்கத்தினர்களுக்கும் நாம் பெரிய கலகக்காரரென்றும் நம்மை மலாய் நாட்டில் விட்டால் ஜனசமூகத்தின் சாந்த குணம் கெட்டு சர்க்காருக்கு தொல்லையேற்படுமென்றும் எச்சரிக்கை செய்வதாக ஒரு வாரம் தவறாமல் தலையங்கமும் உப தலையங்கமும் எழுதி வந்தது” - என்று பெரியார் குறிப்பிடுகிறார்.

பெரியாரின் கொள்கைப் பயணம் வெளிநாடுகளில்கூட எவ்வளவு இடையூறுகளை சந்தித்தது என்பதற்கு இவை சான்றுகள். இந்த எதிர்ப்புகளை முறியடித்து தமிழர்கள் மிகப் பெரும் வரவேற்புத் தந்த செய்திகள் தொகுதியில் பதிவாகியுள்ளன.

பெரியார், மலேசிய வருகை குறித்து ஏற்கெனவே நூலகள் வெளி வந்திருந்தாலும் இந்த தொகுப்பு மேலும் விரிவான செய்திகளையும் ஆவணங்களையும் தொகுத்துத் தந்திருக்கிறது. மலேசிய திராவிடர் கழக முன்னாள் தலைவர் இரெ.சு.முத்தையா வெளியிட்டுள்ளார். விலை : ரூ.400.

**முகவரி :** 32, Jalan 6, Taman Shah Jaya, 43200, Batu 9, Cheras, Selangor, Malaysia. Cell: (6)019-2460609

**‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ உறுப்பினர் சேர்க்கையை துவங்கி விட்டீர்களா?**

# சட்ட எரிப்புப் போராட்ட வரலாற்றுச் சுவட்டில்...

***1957 நவம்பர் 26இல் பெரியார் ஆணையை ஏற்று அரசியல் சட்டத்தில் ஜாதியை பாதுகாக்கும் பிரிவை தீயிட்டுக் கொளுத்தி, பல்லாயிரக் கணக்கில் 6 மாதம் முதல் 3 ஆண்டு வரை சிறையேகியது கருஞ்சட்டைப் படை! அந்தப் போராட்டம் குறித்து, 'விடுதலை' நாளேட்டில் வெளிவந்த சில செய்திகளை இங்கே தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.***

## ஆடுமாடுகளைப் போல்

- அரசியல் சட்ட எரிப்பு சம்மந்தமான வழக்கு 11.12.57-ந் தேதி வாய்தா என்று முன்னமே தெரிவித்திருந்த அரசாங்கம் திருச்சியிலிருந்து இன்று மாலை 4 மணிக்கு 6 திறந்த லாரியில் ஆடு மாடுகளை அடைப்பதுபோல் அடைத்துக் கொண்டு வந்து மாயூரம் சப்டிவிசனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டின் வாசலில் கொண்டு வந்து நிறுத்தினர். 5000 பொது மக்களுக்கு மேல் கூடியிருந்தனர். தொண்டர்களும் தோழர்களின் மனைவி, குழந்தைகள், கர்ப்பவதிகள், தள்ளாத தாய்மார்கள் யாவரும் உற்சாகத்துடன் கூடியிருந்தனர். கைதான தொண்டர்களும் உற்சாகத்துடன் இருந்தார்கள். இரவு 7 மணிக்கு அதிகாரி இதனடியிற் கண்டபடி கேசை வாய்தா போடப்பட்டிருப்பதாக தெரிவித்தார்கள். கைதான தோழர்கள் வரும்போதும் போகும்போதும் 'பெரியார் வாழ்க' என்றும் 'அரசியல் சட்டம் ஒழிக' என்றும் கோஷமிட்டார்கள். மேற்படி கோஷமானது எல்லோரையும் உற்சாகமூட்டியது. மாதிரிமங்கலம் தோழர் கணபதி திருச்சி சிறையில் இருக்கிறார். அவருக்கு 11.12.57-ந் தேதியன்று ஆண் குழந்தை பிறந்து இறந்த செய்தி கேட்டும் உற்சாகமாகவே இருக்கிறார்.

## ஆறுமாத கர்ப்பத்துடன்

- மாயூரம் ஆதி திராவிட தோழர் கலியபெருமாள் மனைவி கோவிந்தம்மாளுக்கு இன்று 3 மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆறுமாத கர்ப்பிணி ஆறு வயதுள்ள ஒரு பெண்ணும் கூடவே இருந்து வருகிறது. மேற்படி கலியபெருமாள் இன்று திருச்சி மத்திய சிறைக்கு போகும்போது உற்சாகத்துடனேயே பெரியார் வாழ்க என்று கோஷமிட்டுக் கொண்டே சென்றார். கொரநாடு தோழர் இராமசாமியின் தாயார் மரண அவஸ்தையிலிருப்பது தெரிந்தும் மிகவும் உற்சாகத்துடனேயே சென்றார். பொறையார் தோழர்களுக்கு தலைவர், உபதலைவர், காரியதரிசி இவர்களுக்கு 9 மாதமும் இரண்டு பெண்களுக்கு 3 மாதம், பாக்கி பேர்களுக்கு 6 மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. **(விடுதலை, 13.12.1957)**

## பட்டினிப் போட்ட கொடுமை

- பெரியார் கட்டளைக்கிணங்க சென்ற நவ.26-ந் தேதி அரசியல் சட்டப் புத்தகத்தை எரித்து போலீசாரால் கைது செய்யப்பட்டு 'ரிமாண்டு' செய்யப்பட்டுள்ள நமது வீரமிக்கத் தோழர்களும், தோழியர்களும் பல வேளைகளில் சாப்பாடு இல்லாமல் பட்டினிக் கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக செய்திகள் ஏராளமாய் வந்திருக்கின்றன.

  உதாரணத்துக்கு மன்னார்குடியிலிருந்து வந்துள்ள செய்தியைத் தருகிறோம். 28.11.57-ந் தேதி இரவு 7.30 மணி அளவில் மன்னார்குடியில் ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த தோழர்கள் 258 பேருக்கும் அங்கு சிறையில் அன்றிரவு தரப்பட வேண்டிய உணவைக் கொடுக்காமல் 4 லாரி 5 பஸ்களில் திருச்சிக்குக் கொண்டு போனார்கள். திருச்சியிலும் இரவு உணவு அளிக்கவில்லை. அங்கு இரவு சிறைச்சாலையிலும் அனுமதி கிடைக்கவில்லை. மறுநாள் (29.11.57) காலை 11 மணிக்குத்தான் அனுமதியளித்திருக்கின்றனர்.

  அது வரையில்; 258 தோழர்களையும் 3 வேளை உணவுமில்லாமல் பட்டினி போட்டிருக்கிறார்கள். **(விடுதலை, 4.12.1957)**

## மலம் எடுக்க வைத்த அதிகாரிகள்

- சென்னை 19ஆவது வட்டம் ஓட்டேரி தி.க. துணைத் தலைவர் டி.கே.வரதராசன் எழுதுவதாவது:

  வேலூர் பெண்கள் சிறையில் நமது தோழியர்கள் குறைகளை நேரில் சென்று கேட்டேன். நான் 14.12.57இல் மாலை 5 மணியளவில் வேலூர் தோழர் மோகனராசு உடன் வேலூர் சிறைக்குச் சென்றேன். நமது தோழியர்களை மலம் எடுக்கச் சொல்லுவதும் கால்வாய் கழுவ சொல்லுவதுமாக ஜெயிலில் வார்டர்கள் தொந்தரவு செய்வதுமாகவும் அப்படி செய்ய மாட்டோம் என்று சொன்னால் உங்களுக்கு உணவு கொடுக்க மாட்டோம் என்று சொல்லுகிறார்களாம். சுசீலா அம்மையார், மனோரஞ்சிதம் லக்ஷ்மி அம்மையார், பட்டம்மாள் அம்மையார், அறிவுக்கொடி பூங்காவனம், சண்பகவள்ளி அம்மையார் மகள் புரட்சிமணி ருக்மாபாய் இவர்கள் முக மலர்ச்சியுடன் காணப்பட்டார்கள். குறிப்பாக என் மகள் வீரசெல்வி, வி. பத்மசுந்தரி வீரநடை போட்டு வந்து வீரமுடன் இருப்பதாக எனக்கு ஆறுதல் சொன்னாள்.

## சிறையில் பிறந்த குழந்தை

- மண்ணச்சநல்லூரில் சட்ட எரிப்பில் ஈடுபட்டு கைதான வீராங்கனை அஞ்சலை அம்மையாருக்கு லால்குடி சப் ஜெயிலில் நேற்று காலை 5 மணிக்கு ஆண் மகவு பிறந்தது. சட்ட எரிப்பில் அந்த அம்மையாருடன் கைதான தோழியர்கள் பதின்பர் வேண்டிய உதவி புரிந்தனர். செய்தியறிந்த ஆங்கரை கோவிந்தராசன் சிறைக்குச் சென்று மருத்துவமனையில் சேர்க்க ஏற்பாடு செய்து விட்டு இதன் நினைவாக அனைவருக்கும் இனிப்பும் பழமும் வழங்கினார். மற்றவர்கள் கூறிய புகாரையும் கேட்டு அதிகாரிகளிடம் தெரிவித்தார். **('விடுதலை' 30.11.1957)**

- நீடாமங்கலம் தோழர் இராசமாணிக்கம் பெரியாரின் கட்டளையை நிறைவேற்றிச் சிறை சென்றார். சிறிது நேரத்திற்கெல்லாம் அவரது தாயார் இயற்கை எய்தினார். இருப்பினும் கடமையை வழுவாது சிறையில் இருக்கிறார் அன்புள்ள மகன்.

## தங்கை சாகும் நிலையில்

- தன் உடன்பிறந்த தங்கை சாகும் தருவாயில் படுத்த படுக்கையில் கிடக்கிறதே என்று கவலைதோய்ந்து கடமையை நிறைவேற்றத் தவறவில்லை. வீரர் நாகை தாலுக்கா கிள்ளுகுடி தோழர் ப.குஞ்சப்பன் பெரியாரின் கட்டளையை நிறைவேற்றி சிறை சென்றார். 2.12.1957இல் உடன் பிறந்த யசோதை இயற்கை எய்தினார். கடமை வழுவாது சிறையிலிருக்கிறார். (இயற்கை எய்தின செய்தி அன்னாருக்கு தெரியாது) கிள்ளுகுடி திராவிடர் கழகம் அவருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

- நீடாமங்கலத்தில் சென்ற 26-ந் தேதி அரசியல் சட்டத் தாளைக் கொளுத்தி கைது செய்யப்பட்ட தோழர் கே.ஆர்.குமார் அவர்களின் மகள் செல்விக்கு இரண்டு ஆண்டு தண்டனை விதிக்கப்பட்டு சென்னையிலுள்ள மைனர் பெண்கள் சிறைக்கு அனுப்பிவிட்டார்கள்.

  மற்றும் இதுபோலவே, கலியபெருமாள், கோவிந்தராஜ் ஆகிய இரு சிறுவர்களுக்கும் இரண்டு ஆண்டு தண்டனை அளித்து, ஒருவரை திருநெல்வேலிச் சிறைக்கும், மற்றொருவரை செங்கற்பட்டு சிறுவர் சிறைக்கும் அனுப்பி வைத்தார்கள். மன்னார்குடி வட்டத் தோழர்கள் 68 பேருக்கும் 6 மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதென்று முன்னர் வந்த செய்தியில் 20 பேருக்கு மட்டுந்தான் தண்டனை விதிக்கப்பட்டதென்றும், மீதமுள்ள 48 பேர் மீதுள்ள வழக்கும் 7.12.57-ந் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது. **('விடுதலை' 2.12.1957)**

## 67 வயது மூதாட்டி

- சென்ற 10.11.57இல் சென்னையில் நடைபெறும் ஓட்டல் மறியலில் ('பிராமணாள்' பெயர் அழிப்பு) கலந்துகொண்டு ஒரு வாரம் சிறைத் தண்டனையடைந்து 17.11.57இல் திரும்பி வந்த மூதாட்டியார் பரிபூரணத்தம்மையார் அவர்கள் தமது 67ஆவது வயதையும் பொருட்படுத்தாமல் உடல் நலிவையும் கவனிக்காமல் தந்தை பெரியார் அவர்களின் கட்டளைக்கிணங்கி சென்ற 26.11.57-ந் தேதி இந்திய அரசியல் சட்டத்தாளைக் கொளுத்தி கைது செய்யப்பட்டு தஞ்சை சிறையில் ஒரு வாரம் 'ரிமாண்டில்' வைக்கப்பட்டு கடந்த 2.12.57-ந் தேதி தஞ்சை உதவி சப்டிவிஷனல் மாஜிஸ்திரேட்டாரால் 3 மாதம் கடின காவல் தண்டனை விதிக்கப்பட்டார். மூதாட்டியார் தண்டனையை முகமலர்ச்சியுடன் ஏற்று சிறையேகினார்கள். தஞ்சை சப்ஜெயிலில் கடைசி நாளன்று இவர் மிகுந்த வேதனைக்குள்ளாக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

## மன்னிப்பு கேட்க மறுப்பு

- சென்னையில் சென்ற 26-ந் தேதி இந்திய அரசியல் சட்டத் தாளைக் கொளுத்தி கைது செய்யப்பட்ட தோழியர்கள் பதமசுந்தரி, ருக்மாபாய் ஆகிய இருவருக்கும் சென்னைத் தோழர்கள் டபிள்யூ.பி.ஏ. வேலாயுதம், கன்னியப்பன், திருப்பத்தூர் தோழர் கிரசுனன் ஆகியோருக்கும் சென்னை 5ஆவது மாகாண மாஜிஸ்திரேட் அவர்களால் இன்று தண்டனை விதிக்கப்பட்டது.

  சென்னை 19ஆவது வட்டம் தி.க. துணைத் தலைவர் திரு.டி.கே.வரதராசன் மகள் தோழியர் பத்மசுந்தரிக்கு 2 மாதம் வெறுங்காவல். சென்னை 18ஆவது வட்டம் புளியந்தோப்பு திரு. இராகவன், துணைவியார், தோழியர் ருக்மாபாய்க்கு 3 மாதம் வெறுங்காவல். தோழர் வேலாயுதம் அவர்களுக்கு 9 மாதம் கடுங்காவல் - 'பி' வகுப்பு. புது வண்ணாரப்பேட்டை (1ஆவது வட்டம்) தோழர் கன்னியப்பன், திருப்பத்தூர் கிருசுனன் ஆகிய இருவருக்கும் தலா 6 மாதம் கடுங்காவல்.

  தோழியர்கள் இருவருக்கும் தண்டனை விதிக்குமுன், மாஜிஸ்திரேட் அவர்கள், 'இனிமேல் இம்மாதிரி சட்டம் கொளுத்தவில்லை என்று 'பாண்டு' எழுதிக் கொடுக்கிறீர்களா? அவ்வாறு எழுதிக் கொடுத்தால் உங்களை விடுதலை செய்கிறேன்' என்று கேட்டார்.

  இதற்கு இரு வீராங்கனைகளும் 'மாட்டோம். விடுதலையானாலும் சட்டப் புத்தகத்தையே கொளுத்துவோம்' என்று பதிலளித்தார்கள். அதன் மீது மாஜிஸ்திரேட் மேற்கண்டவாறு தண்டனை விதித்து தீர்ப்புக் கூறினார். வழக்கின் முடிவைக் காண இன்று கோர்ட்டுக்கு ஏராளமான கழகத் தோழர்கள் வந்திருந்தனர். (விடுதலை-03.12.1957)

**பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்ட "அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம்" நூல்.**

## மை. சேசுமேரி படத்திறப்பு

*நவம்பர் 2, 2014 அன்று முடிவெய்திய ஒட்டன்சத்திரம் தோழர் மை. சேசுமேரி (42) (கழகத் தோழர் ஒட்டன்சத்திரம் பெரியார் நம்பி துணைவியார்) படத்திறப்பு நிகழ்வு 15.11.2014 சனி காலை 11 மணியளவில் சாலைப்புதூர் அத்திக் கோம்பையில் நடந்தது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தி.மு.க. பொதுக் குழு உறுப்பினர் மோகன், வழக்கறிஞர் க.ஜெயராஜ், தி. தாமரைக்கண்ணன், கா.சக்திவேல் (தி.க. மாவட்ட செயலாளர்), ந. தமிழ்வேந்தன் (ம.தி.மு.க.), மு. மதியழகன், வீர. கலாநிதி, சா. கவுசல்யா இரங்கல் உரையாற்றினர்.*

DATE OF PUBLICATION 26.11.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# நவம்பர் 27 மாவீரர் நாள் நினைவாக...


*பிரபாகரன் ஆற்றிய முதல் மாவீரர் நாள் உரை இதுதான்.*

இந்திய தமிழிழப் போர் உக்கிரம் அடைந்து கொண்டிருந்த காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் தினமும் தம்முயிரை தமிழீழ விடுதலைக்காக அர்ப்பணித்துக் கொண்டிருந்தனர். 1989, நவம்பர் 27 அன்று அடர்ந்த தமிழீழக் காடு ஒன்றில் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன், முதலாவது விடுதலைப் புலிப் போராளி வீரச்சாவு நாளான - நவம்பர் 27ஐ - மாவீரர் நாளாகப் பிரகடனப்படுத்தி உரையாற்றும்போது -

“எமது போராட்டத்தில் இன்று ஒரு முக்கிய நாள், இதுவரை காலமும் எமது புனித இலட்சியமான தமிழீழ இலட்சியத்துக்காக உயிர்த் தியாகம் செய்த 1207 போராளிகளை நினைவுகூரும் முகமாக இந்த மாவீரர் நாளை நாங்கள் ஆரம்பித்துள்ளோம். முதல்முறையாக இன்று இந்த மாவீரர் நாளை நாங்கள் ஆரம்பித்துள்ளோம். எத்தனையோ உலக நாடுகளில் அந்த நாடுகளின் விடுதலைக்காகப் போரிட்ட படை வீரர்களின் பாதுகாப்புக்காக போரிட்ட படை வீரர்களின் நினைவாகவும் இப்படிப்பட்ட மாவீரர் நாள்களைக் கொண்டாடுவது வழக்கம். உங்களுக்குத் தெரியும், இதுவரை காலமும் எமது இயக்கத்தில் வீரச்சாவு அடைந்த ஒவ்வொரு போராளிக்குமாகத் தனிப்பட்ட நினைவு நாள்களைக் கொண்டாடுவது வழக்கம்.

ஆனால், இந்த வருடத்தில் இருந்து வீரச்சாவு அடைந்த எல்லோரையும் மொத்தமாக வருடத்தில் ஒரு நாள் நினைவு கூர்ந்து அந்த நாளையே - மாவீரர் நாளாகப் பிரகடனப்படுத்தி உள்ளோம். அதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. அதாவது, எங்களது விடுதலைப் போராளிகளில் முதலாவதாக வீரச்சாவு அடைந்த - சங்கரின் நினைவு தினமாக இன்று அந்த மாவீரர் நாளை நாங்கள் பிரகடனப்படுத்தி உள்ளோம். அத்தோடு வழமையாக மக்களில் ஒரு பழக்கம் உண்டு. உயர்ந்த பதவிகள், வசதியானவர்கள் இப்படிப்பட்டவர்களைத்தான் பெரிதாக பார்க்கும் பழக்கம் உண்டு. **அதுபோல் எமது விடுதலைப் போராட்டத்திலும் தலைவர்களை மட்டும் பிரித்து அவர்களது செய்கைகளை மட்டும் பெரிதாகப் பார்க்கக் கூடாது என்பதற்காகவும் எல்லாப் போராளிகளும் சமம் என்னும் ஒரு நோக்கத்துடனும் இந்த நாளை நாம் கொண்டாட முடிவு எடுத்துள்ளோம்.**

அதாவது எமது போராளிகளை நினைவுகூரும் தினத்தை ஒரே நாளில் வைப்பதால் எமது இயக்கத்தில் இருந்து வீரச்சாவு அடைந்த தலைவர்களில் இருந்து சாதாரணமாகப் போராடி வீரச்சாவு அடைந்த உறுப்பினர் வரை எல்லோரையும் சமமாகத்தான் கருதுகிறோம். வீரச்சாவு அடைந்த எல்லா போராளிகளின் நினைவு நாள்களையும் ஒன்றாக நினைத்து மாவீரர் நாளாக இன்று கொண்டாடுகிறோம். இல்லாவிட்டால் காலப்போக்கில் குறிப்பிட்ட சில ஆட்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, அந்த மரியாதைகள் குறிப்பிட்ட சில ஆட்களுக்குப் போவதை தடுத்து, எல்லோருமே சமமாக ஒரே நாளில் நினைவுகூரப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மாவீரர் நாளைக் கொண்டாட முடிவெடுத்தோம். ஓர் இனத்தைப் பொறுத்த வரை வீரர்களையும் அறிவாளிகளையும் பெண்களையும் மதிக்காத இனம் ஒரு காட்டுமிராண்டி இனமாக மாறி அழிந்துவிடும். எங்களுடைய இனத்தில் அறிவாளிகள் இருக்கிறார்கள். மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது எங்கள் இனத்தில் பெண்கள் புனிதமாக மதிக்கப்படுகிறார்கள். அதே வேளை வீரர்களுக்குத்தான் பஞ்சமாக இருந்தது. ஆனால், இன்று இந்த மாவீரர் நாளில், ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி விட்டோம். ஆம், எமது வீரர்களைக்கூட நாம் கௌரவிக்க ஆரம்பித்துள்ளோம்.



இதுவரைக் காலமும் எங்களுடைய இனத்தில் வீரர்கள் என்றால் யார் என்று கேட்கும் நிலை இருந்தது. ஆனால், இன்று நாம் எம் இனத்தின் வீரர்களை நினைவு கூரும் நாள் ஒன்றை உருவாக்கியுள்ளோம். எனவே, இனி எமது இனம் நிச்சயமாக அழியாது. இன்று எமது இனம் உலகிலேயே தலைநிமிர்ந்து இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் எமது 1207 போராளிகளின் உயிர்த் தியாகம்தான். அவர்களுடைய வீரமான, தமது உயிரையே மதியாது போராடிய உண்மையான தியாகம் தான் எங்களுக்கு இன்று உலக நாடுகளில் ஒரு மரியாதையை ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்த மாவீரர் நாளை நாங்கள் எங்களுடைய வாழ்நாளில் முக்கியமான விழாவாக கருதி இன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் கொண்டாட உள்ளோம்” என்றார்.

## காவிரி உரிமையை பாதுகாக்க தமிழகமே வீதியில் இறங்கி போராட வேண்டும்: கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிக்கை

காவிரி டெல்டா பாசனப் பகுதிகளை பாலைவனமாக்கும் நோக்கத்தோடு காவிரி பிரச்சனையில் தமிழகத்திற்கு எதிராகதொடர்ந்து செயல்படும் கர்நாடக அரசு மேலும் காவிரியின் குறுக்கே புதிதாக இரு அணைகள் கட்ட முயற்சிகள்மேற்கொள்வதை கண்டித்து திருவாரூர் மாவட்ட அனைத்து விவசாய சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு சார்பில் வரும் நவம்பர் 22ஆம் தேதி தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் நடைபெற்ற முழு அடைப்பு போராட்டம், சாலை மறியல், இரயில் மறியல் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர்மணி வெளியிட்டுள்ள அறிக்கை:

“ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் காவிரி நதிநீர் பிரச்சனையில் தமிழகம், கர்நாடகம் ஆகிய இரு மாநிலங்களும் ஏற்றுகொள்ளும் வகையில், 1924ஆம் ஆண்டு காவிரி ஒப்பந்தம் போடப்பட்டது. அந்த ஒப்பந்தப்படி கர்நாடகம் கிருஷ்ண ராஜசாகர் அணையையும், தமிழகம் மேட்டூர் அணையையும் கட்டிக் கொண் டது. 1934இல் மேட்டூர் அணை திறக்கப்பட்டதிலிருந்து 1974 வரை சராசரியாக ஒரு ஆண்டுக்கு 363.5 டி.எம்.சி. நீர் கர்நாடகத்திலிருந்து மேட்டூருக்கு வந்தது.

அதன் பின்னர் கர்நாடகம் ஒப்பந்தங்களை மீறி பல்வேறு இடங்களில் புதியதாக அணைகளை கட்டி தண்ணீரை தேக்கி வைத்துக் கொண்டு தமிழகத்திற்கு உரிய தண்ணீரை தரமறுத்து வந்தது. இந்த பிரச்சனை குறித்து விவாதிக்க காவிரி நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. அது அளித்த தீர்ப்பின்படி கர்நாடகம், தமிழகத்திற்கு ஆண்டுக்கு 193 டி.எம்.சி. தண்ணீர் கொடுக்க வேண்டுமென தனது இறுதி தீர்ப்பில் கூறியது. ஆனால் கர்நாடக அரசு அந்த தீர்ப்பை கூட ஏற்க மறுத்தது. 2007 ஆம் ஆண்டு வெளியான காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பை மத்திய அரசு அரசிதழில் வெளியிடாமல் 6 ஆண்டுகள்காலதாமதபடுத்தியது. தமிழக அரசு உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுத்த பிறகு தான் 2013ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் காவிரி நடுவர் மன்ற தீர்ப்பை மத்திய அரசு அரசிதழில் வெளியிட்டது. அப்போதும், தீர்ப்பை செயல்படுத்த வேண்டிய அமைப்புகளானகாவிரி மேலாண்மை வாரியம், காவிரி ஒழுங்குமுறைக் குழு ஆகிய இரண்டையும் அமைக்காமல் வெறும் ஏட்டு சுரைக்காயாக மத்திய அரசு செயல்பட்டது.

ஒரு கண்ணில் வெண்ணையையும், ஒரு கண்ணில் சுண்ணாம்பையும் வைப்பதுபோல் கர்நாடக அரசு செய்யும் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கும், இனவெறி செயல்களுக்கும் மத்திய அரசு துணை போகிறது. சட்டத்தை மதித்து நடக்கும் தமிழகத்திற்கு எதிராக தொடர்ந்து செயல்படுகிறது. இந்தியாவில் மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு இடையே ஓடும் கிருஷ்ணா நதி நீர் பிரச்சினையிலும், குஜராத், மத்திய பிரதேசம் நடுவே ஓடும் நர்மதை ஆற்று பிரச்சினையிலும் நடுவர் மன்ற தீர்ப்பு சரியாக செயல் படுத்தப்படுகிறது. ஆனால் தமிழக கர்நாடக இடையே ஓடும் காவிரி நதி நீர் பிரச்சினையில் காவிரி இறுதி தீர்ப்பை செயல்படுத்த இந்திய கர்நாடக அரசுகள் தொடர்ந்து மறுத்து வருகின்றன.

காவிரி ஆறு டெல்டா பகுதி விவசாயத்திற்கு மட்டுமல்லாது தமிழகத்தில் 12 மாவட்டங்களில் 26 லட்சம் ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி செய்து தருகிறது. இராமநாதபுரம், திருப்பூர், வேலூர், சென்னை மாநகரம் உட்பட 17 மாவட்டங்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் இருக்கிறது. வீராணம் ஏரியில் எடுப்பது மட்டுமல்லாது, மேட்டூரிலிருந்து குழாய் மூலம் சென்னைக்கு ஆண்டுக்கு 12 டி.எம்.சி. குடிநீர் எடுக்கவும் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. காவிரி தமிழகத்தின் தேசிய ஆறாகும்.

இந்த சூழ்நிலையில் கர்நாடக அரசு தமிழக எல்லையான பில்லி, குண்டுலுக்கு மேலே மேகதாட்டு, ராசி மணல் ஆகிய இரு இடங்களில் புதியதாக இரு அணைகளை கட்டி ஆண்டுக்கு 50 டி.எம்.சி. நீரை தேக்கி வைக்க முயற்சியை மேற்கொள்கிறது. இந்த அணைகள் கட்டப்பட்டால் தமிழகத்திற்கு ஒரு சொட்டு நீர் கூட காவிரியிலிருந்து கிடைக்காது. இது தமிழகத்திற்கு இழைக்கப்படும் மிகப்பெரிய அநீதியாகும். எனவே மத்திய அரசு உடனடியாக தலையிட்டு கர்நாடகம் புதிய அணைகளை கட்டுவதை தடுக்க வேண்டும். மேலும் மத்திய அரசு காவிரி மேலாண்மை வாரியம், காவிரி ஒழுங்குமுறை குழு ஆகியவற்றை அமைத்து காவிரி நீரில் தமிழகத்திற்கு உரிய பங்கினை, உரிய நீதியினை வழங்கிட வழி செய்ய வேண்டும்.

இக்கோரிக்கைகளை வலியுறுத்தி திருவாரூர் மாவட்ட அனைத்து விவசாய சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு சார்பில் நவம்பர் 22 அன்று தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் நடைபெறும் போராட்டங்களுக்கு திராவிடர் விடுதலைக்கழகம் தனது முழு ஆதரவையும் அளிப்பதோடு மட்டுமல்லாது போராட்ட களத்தில் இணைந்து போராடும். தமிழகத்தின் தேசிய ஆறான காவிரியில் நமது உரிமையை பாதுகாக்க தமிழகமே வீதிக்கு வந்து போராட வேண்டியது அவசியமானது” என கூறியுள்ளார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 27th November 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN